*ஸூரா பாத்திஹா தமிழ் தப்ஸீர் பகுதி 1 ன் தொடர்ச்சி...*

مٰلِكِ يَوْمِ الدِّيْنِ*

மறுமை நாளின் அதிபதி இதற்கு முந்திய வசனங்களில் அல்லாஹ்வின் ரட்சகத்தன்மை குறித்தும்இ அவனது ரஹ்மத்தை பற்றியும் சொல்லப்பட்டது. காரணம் செவியுறுவோர் உள்ளங்களில் நம்பிக்கையின் அலைகள் பொங்கிப் பிரவாகமெடுக்க வேண்டுமென்பதற்காக. இனி இவ்வசனம் அடியார்களின் உள்ளத்தில் இறையச்சத்தை உருவாக்க வேண்டுமென்பதற்காக பேசத் துவங்குகிறது.

ஏனெனில் ஈமான் நம்பிக்கைக்கும் அச்சத்திற்கும் இடையில் இருக்கின்றது. ஆதலால் இவ்வசனம் இறைவனின் அத்தாட்சி, அவனே அனைத்தையும் மிகைத்திருப்பவன் என்பதையும் நமக்கு எடுத்துக் காட்டுகிறது.

இதில் கிறித்துவர்களின் நம்பிக்கையானது இவ்வுலகில் எப்படிப்பட்ட பாபங்களை செய்தாலும் அதற்கு எவ்வித தண்டனையும் அவர்களுக்கு கிடைக்காதென்றும், காரணம் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் சிலுவையில் ஏற்றிக் கொல்லப்பட்டது அவர்களது சமூக மக்களின் பாவங்களுக்கு பரிகாரமென்று கூறுகின்றனர். அதனால் இவர்கள் இறைவனது பேரருள் மீது மட்டும் நம்பிக்கை வைத்து அவனது தண்டனை பற்றிய பயமற்றுப் போய் பாபங்கள் செய்வதில் வரம்பை கடந்து நிற்கின்றனர்.

அடுத்து ஆரியர்களின் நம்பிக்கையானது: எந்தப் பாபமும் மன்னிக்கப்படப் போவதில்லை. தண்டனையை அனுபவித்தே தீர வேண்டும் என்று கூறுவதால் இவர்கள் இறைவனின் பேரருள் மீது நம்பிக்கையற்றுப் போய் பாபங்களை அளவுக்கதிகமாக செய்து வருகின்றனர். ஏனெனில் ஒரு பொருள் மீது நம்பிக்கையற்று விடுதல்இ பாவங்களை செய்வதின் பக்கம் மனத்தை துரிதப்படுத்துவதாகும்.

உதாரணமாக பூனை நாயிடமிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்ள இயன்றவரை ஓடுகின்றது. இனி ஓட விழியில்லை என்று தெரிந்து கொண்டால் பூனை நாயை எதிர்க்கத் துவங்கி விடுகிறது. இதுபோன்றே தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட கைதியை மிகவும் கவனமாகப் பாதுகாக்கின்றனர். காரணம் அக்கைதி தான் இறக்கப் போகிறோம் என்ற விரக்தியில் யாரையாவது கொல்ல முற்பட்டுவிடுவான் என்பதே அவனை பாதுகாப்பதற்குரிய காரணமாகும்.

மனிதன் பாவங்களிலிருந்து எப்போது தன்னைப் பாதுகாத்துக் கொள்கிறான் எனில்இ அவனுக்கு தன் இறைவனது கோபத்தின் மீது பயமும்இ அதேநேரம் அவன் தனது பாவங்களை மன்னித்து விடுவான் என அவனது பேரருள் மீது நம்பிக்கையும்

இருக்கும்போதுதான். இதனால்தான் இறைவன் முதலில் தனது ரஹ்மத்தாகிய பேரருளைப் பற்றி பேசி பின்னர் தன் கோபத்தைப் பற்றி பேசுகிறான்.

**இரண்டு:** சிலர் நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டு இறைவனை வணங்குகின்றனர். வேறு சிலர் இறைவனின் தண்டனைக்குப் பயந்து அவனை வணங்குகின்றனர். ஆகையால் நம்பிக்கைவாதிகளுக்காக முந்திய வசனமும்இ பயந்து வணங்குபவர்களுக்காக இரண்டாவதான இந்த ஆயத்தும் இறக்கப்பட்டது.

**தப்ஸீர்:**

مالك "மாலிகி" என்னும் பதத்தை ஓதுகின்ற விஷயத்தில் காரிகளுக்கிடையே கருத்து வேறுபாடுகள் காணப்படுகின்றன. சிலர் மாலிகி என்றும், வேறு சிலர் மலிகி என்றும்ஓதுகின்றனர். இதில் மலிக் என்பதற்கு அரசன் என்பது அர்த்தமாகும். இதுபோன்றே மாலிக் என்பதற்கு அதிபதி என்பது அர்த்தமாகும். எது எப்படியிருப்பினும் மலிக், மாலிக் ஆகிய இரு பதங்களின் மூலமும் ملك "மில்க" ,என்பதாகும். இதன் அர்த்தமானது தொடர்பு, ஆற்றல், இறுகுதல் என்பதாகும். அரசனை மலிக் என்றும்? அதிபதியை மாலிக் என்றும் ஏன் சொல்லப்படுகிறதெனில், அவருக்கு தனது தேசத்தோடும், பிரஜைகளோடும் தொடர்பிருப்பதால் மற்றும் அவைகளின் மீது ஆற்றலுமிருப்பதாலும், இறுக்கப்பட்டிருப்பதாலும், அந்த இறுக்கத்தைக் கொண்டு பிரஜைகளை அவர் மிகைத்திருப்பதாலும் இவ்வாறு சொல்லப்படுகிறது.

இனி மலிக் என்று ஓதுகின்றவர்கள் அரசன் என்பவன் மற்ற தேசங்களை விட தனது தேசத்தின் மீது பூரண ஆதிக்கம் பெற்றிருப்பதால் மலிகி யவ்மித்தீன் என்று ஓதுவதுதான் சிறந்ததெனக் கூறுகின்றனர். இவ்வாறு ஓதுவதால் இதன் அர்த்தமானதுஇ மறுமை நாளின் அரசன் என்று வருகிறது. ஆனால் மாலிகி யவ்மித்தீன் என்று ஓதுவதே சிறந்தது என்பதை வலியுறுத்துகின்றவர்கள் அதுபற்றி சில காரணங்களைக் கூறுகின்றனர்.

**ஒன்று:** மாலிக் என்பதில் நான்கு எழுத்துக்கள் உள்ளன. ஆனால் மலிகி என்பதில் மூன்று எழுத்துக்களே உள்ளன. திருக்குர்ஆனை பொறுத்தவரை ஒரு எழுத்துக்கு பத்து நன்மைகள் ஓதுகின்றவர்களுக்கு கிடைப்பதால் மாலிகி என்பதற்கு நாற்பது நன்மைகளும்இ மலிகி என்பதற்கு முப்பது நன்மைகள் மட்டுமே கிடைப்பதால் மாலிகி என ஓதுவதுதான் சிறந்ததென கூறுகின்றனர்.

**இரண்டு:** அரசன் குடிமக்களின் அதிகாரியாக இருக்கிறான். இனி மாலிக் தனது செல்வம் மற்றும் அடிமைகளின் அதிகாரியாக இருக்கிறான். இவ்விரு நிலைகளை வைத்து பார்க்கும்போது அரசன் மீது பிரஜைகளின் ஆதிக்கமே அதிகமாக உள்ளது. ஏனெனில் பிரஜைகளில் சிலர் இப்படியும் இருக்கின்றனர். அதாவது, அவர்கள் மீது

வேறு வழியின்றி நிர்ப்பந்தம் காரணமாக அவனுக்கு ஆட்சி செய்ய வேண்டியுள்ளது. அரசனின் ஆட்சியை ஆட்சியென்று சொல்லப்படுவதன் காரணமே அவன் தன் குடிமக்களை ஆதரிக்க வேண்டிய பொறுப்பு அவனுக்கு இருப்பதால்தான். இதனால்தான் மலிக் என்பதை விட மாலிகி என ஓதுவதே சிறந்தது என கூறப்பட்டது.

**மூன்று:** குடிமக்கள் விரும்பினால் அரசனை ஆட்சியிலிருந்து அகற்றி விடலாம். அவ்வாறின்றி அந்த அரசனை வேறு நாட்டிற்கும் அனுப்பலாம். இல்லையெனில் அவனிடமிருந்து ஆட்சியைப் பறித்து விடவும் செய்யலாம். ஆனால் மாலிக்கை குடிமக்கள் நீக்கவோ மாற்றவோ முடியாது.

**நான்கு:** மலிக்(அரசன்) தனது குடிமக்களின் உயிருக்கோ, உடமைக்கோ பாதுகாவலனல்ல. மாறாக குடிமக்கள்தான் அவனது அரசைப் பாதுகாக்கின்றனர். ஆனால் மாலிக் தனது குடிமக்கள் மற்றும் அடிமைகளின் உயிர் உடமைகளுக்கு பாதுகாவலனாக இருக்கிறான்.

**ஐந்து:** குடிமக்கள் தமது ஒவ்வொரு வேலைகளையும் செய்வதற்கு அரசனின் அனுமதியைப் பெற வேண்டுமென அவசியமில்லை. ஆனால் அடிமை தனது மாலிக்கின் அனுமதியின்றி எதையும் செய்ய முடியாது.

**ஆறு:** குடிமக்கள் தமக்குத் தேவையான ஒவ்வொன்றையும் அரசனிடம் கேட்க முடியாது. மாறாக தாமே ஏற்பாடு செய்து கொள்ள வேண்டும். அரசனுக்கு குடிமக்கள் எதற்காக வழிப்படுகின்றனரெனில், அவனது கோபத்திலிருந்து தம்மை பாதுகாத்துக் கொள்வதற்காகத்தான் அரசனுக்கு பிரஜைகள் வழிப்படுகின்றனர். ஆனால் மாலிக்கிடம் அவனது அடிமைகள் உணவு, உடை போன்ற அனைத்தையும் கேட்க முடியும்.

இன்னும் நாம் அல்லாஹ்விடம் நமது அனைத்து தேவைகளையும் கேட்கிறோம். காரணம் அவன் நமது ரட்சகனாக இருக்கிறான். ஆதலால் மாலிகி யவ்மித்தீன் என்பதே சரியானதாகும்.

**ஏழு:** மலிக் தனது குடிமக்களிடம் வரிவசூல் செய்து அதைக்கொண்டே தனது ராஜய்ப் பரிபாலனம் செய்கிறான். இன்னும் தனது ஆட்சியின் பாதுகாப்பிற்காக பெரும் படையொன்றையும் உருவாக்கி அவர்களைக் கொண்டு உதவியும் தேடுகிறான். ஆனால் மாலிக் இவையனைத்தையும் விட்டு தேவையற்றவனாக இருக்கிறான். இன்னும் தன் அடிமைகளிடம் மாலிக் பணம் எதுவும் பெறாது தான் தன்னடிமைகளுக்கு பணம் காசு தருகிறான். அந்த அடிமையும் தன்னை ஒன்றுமில்லாதவனாகக் கருதி மாலிகின் அருளையும் கருணையையும் எதிர்பார்த்து நிற்கிறான். இதுபோன்றே நாமும் அல்லாஹ்வின் அருளையும், கருணையையும் எதிர்பபார்ப்பவர்களாக இருக்கிறோம்.

**எட்டு:** மலிக் நோயற்ற நல்ல திடகாத்திரமுள்ள இளைஞர்களையே தனது பாதுகாப்புப் படையில் சேர்க்கிறான். பலவீனமானவர்களையும்இ நோயாளிகளையும் சேர்ப்பதில்லை. ஆனால் மாலிக் நோயாளிகளுக்கும், நலிந்தவர்களுக்கும் சுகத்தை தருகிறான். இன்னும் வயோதிகத்தில் அவர்களுகக உதவியும் செய்கிறான். பின்னும் அவர்கள் ஏதாவது துன்பங்கள் சோதனைகளில் சிக்கிக் கொண்டால் அதை விட்டும் அவர்களை காப்பாற்றுகிறான்.

**ஒன்பது:** அரசுரிமையில் பயமும் திடுக்கமும் அமைந்துள்ளது. ஆனால் மாலிக்கிய்யத்தில் ரஹ்மத் மட்டுமே உள்ளது. இதனாலேயே அல்லாஹ் தனது படைப்புக்கள் மீது இரக்கமுடையவனாகவும்இமன்னிக்கின்றவனாகவும் இருக்கிறான். (தப்ஸீர் கபீர்) ஆதலால் மேற் கூறப்பட்ட காரணங்களால் மாலிகி என்று ஓதுவதே சிறப்புடையதாகும்.

அடுத்து "யவ்மித்தீன்" "பிரதி வாங்கும் நாள்" என்பதில் யவ்ம் என்பதற்கு அரபி மொழியில் பகல் என்று சொல்லப்படுகிறது. இன்னும் பகல் என்பது சூரிய ஓட்டத்தைக் கொண்டு நிர்ணயிக்கப்படுகிறது. ஆனால் மறுமை நாளின் பகல் சூரிய ஓட்டத்தைக் கொண்டு நிகழாது. ஆதலால் இங்கே பகல் என்பதன் கருத்து நேரம் அல்லது காலம் என்பதாகும். அதாவது அல்லாஹ் மறுமையின் அனைத்து நேரங்களுக்குமுரிய மாலிக்காகும். அல்லது மறுமையில் என்னென்ன நிகழ்ந்திடுமோத அவையனைத்தின் மாலிக் என்பது கருத்தாகும்.

இனி دين "தீன்" (மார்க்கம்) என்பதற்கு இரு அர்த்தமுண்டு. ஒன்று: பிரதி வாங்குதல், நீதி அல்லது தீர்ப்பு. இரண்டு: அந்த நாளில் எல்லா மார்க்கமும்இ மார்க்கவாதிகளும் தீாப்பளிக்கப்படுவர் என்பதாகும். உலகில் சத்திய மார்க்கவாதிகளும், பொய்யான மார்"க்கவாதிகளும் ஒன்றாக கலந்தே வாழுகின்றனர். வெளிப்படையாக சத்தியம் எது அசத்தியம் எது என்று விளங்கிக் கொள்ள முடியாதுள்ளது. எனினும் மறுமையில் அந்த நாளில் அனைத்துமே வெளிச்சத்திற்கு வந்து விடும்.

அல்லது தீனுடைய நாள் என்பது ஒவ்வொரு மனிதரும், ஒரு மார்க்கத்தை ஏற்று பின்பற்றி வருவதாகும். காரணம் அந்த நாளில் நமக்கு ஈடேற்றம் கிடைக்கும் என்பதற்காக. கிறித்துவர், யூதர்கள், பார்ஸியர், முஸ்லிம்கள் போன்ற அனைவரும் மார்க்கவாதிகள்தான். மறுமையை ஒப்புக்கொண்டவர்கள்தான். பின்னும் மறுமை நாளின் துன்பத்தை விட்டும் ஈடேற்றம் பெறுவதற்காகவே ஒரு மார்க்கத்தை ஏற்று வாழ்ந்து வருகின்றனர். இவர்களில் சிலர் சத்திய மார்க்கத்தை ஏற்றுள்ளனர். சிலர் பொய்யான மார்க்கத்தை ஏற்றுள்ளனர்.

இன்னும் தீனுடைய நாள் என்று சொல்லப்படுவதற்கு மற்றோர் காரணம்இ அந்த நாளில் துன்யாவுடைய காரியங்கள் எதுவும் நடைபெறாது. தீனுடைய காரியம் மட்டுமே நடக்கும். உலகில் நாம் சில போது தீனுடைய காரியங்களை செய்தாலும்

மற்ற நேரங்களில் உலகியல் சம்பந்தமான காரியங்களை செய்கிறோம். ஆனால் அந்த நாளில் சாப்பிடுதல், குடித்தல், உடையணிதல், வீடு கட்டுதல் போன்ற எதுவும் நடக்காது.

இனி தீன் என்பதற்கு பிரதியைப் பெறுதல் என்பது அர்த்தமானால் அந்த நாளை யவ்மித்தீன் என்று சொல்லப்படுவதன் காரணம், அந்த நாளில் உலகில் நாம் செய்த அனைத்து செயல்களுக்குமுரிய பிரதியை பெற்றுக் கொள்ளப்படும். உலகில் நன்மை, தீமை எதை வேண்டுமானாலும் செய்து கொள்ளுங்கள். அதற்குரிய பிரதி எதுவும் உலகில் கிடைக்காது. ஆனால் அங்கே பிரதிதான். செயலாற்றுதல் முடியாது.

இன்னும் மறுமை நாள் என்பதை இவ்வாறு புரிந்து கொள்ளுங்கள். ஒரு மாணவன் கல்வி பயிலும் காலத்தில் படிக்கிறான். ஆனால் அப்போது அவன் கற்ற கல்வியின் தரத்தை வரையறுத்துச் சொல்ல முடியாது. அவன் கல்வி பயின்றானா? அல்லதுவிளையாடிக் கொண்டிருந்தானா? என்பது பரீட்சையின் நாள் வரும்போதுதான் அவனது படிப்பும், விளையாட்டும் தனித்தனியாக பிரித்துக் காட்டப்படும். கல்வி பயின்றிருந்தால் வெகுமதியும், விளையாடியிருந்தால் தண்டனையும் கிடைக்கிறது. ஆதலால் பரீட்சையின் காலம் என்பது அவன் ஆண்டு முழுவதும் உழைத்த உழைப்பின் பலனை பெறுவதற்குரிய நாளாகும்.

மற்றோர் உதாரணம், நிலத்தில் நெல்லும் விளைகிறது, வைக்கோலும் விளைகிறது. ஒரே தண்ணீரைக் கொண்டுதான், ஒரே சூரிய வெப்பத்தில்தான் இரண்டுமே விளைகின்றன. ஒரு நாள் வருகின்றது. அந்த நாளில் அந்த நிலத்திற்குரியவன் நெல்லையும், வைக்கோலையும் தனித்தனியாகப் பிரித்து விடுகிறான். நெல் ஒரு இடத்திற்கும், வைக்கோல் வேறோர் இடத்திற்கும் போய் சேருகின்றன.

இதுபோன்றே இவ்வுலகமும் ஒரு நிலத்தைப் போன்றுதான் இருக்கிறது. இதில் மறுமை என்பது அதை பிரிக்கின்ற நாளைப் போலிருக்கிறது.

**ஒரு குறிப்பு:** அல்லாஹ் எப்போதுமே எல்லா சிருஷ்டிப்பொருட்களுக்கும் அதிபதியாகத்தான் இருக்கிறான். பின்னர் தன்னை மறுமை நாளின் அதிபதியென குறிப்பிட்டுக் கூறுவதற்கு சில காரணமுண்டு.

**ஒன்று:** ஒரு அரசன் அவனது சிறப்பை வெளிப்படுத்த வேண்டுமென்று விரும்பினால், அவனது நாட்டை மிகப் பெரிய நகரத்துடன் ஒப்பிட்டுப் பேசப்படுகிறது. இதில் அவ்வரசனின் ஆட்சி நகரங்கள், ஊர்கள், கிராமங்கள் தோறும் உள்ளது. இதில் அவ்வரசனின் சிறப்பை எடுத்துக் காட்டும் போது அவனை ஷாஹெ ஹிந்த், ஷாஹெ தில்லி என அழைக்கப்படுகிறான். இவ்வாறு அழைப்பதால் அவ்வரசன் மற்ற நகரங்களின், ஊர்களின் அரசனல்ல என்பது கருத்தல்ல. அரசன் தான் இவ்வாறு அழைக்கப்படுவதால் அதில் அவ்வரசனின், அந்நகரத்தின் சிறப்பு எடுத்துக் காட்டப்படுகிறது.

இதனால்தான் அல்லாஹ்வை ரப்பெ க:பா (க:பாவுடைய ரப்பென்றும்) ரப்பெ முஹ்மத் (முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் உடைய ரப்பென்றும்) சொல்கிறோம்.

**இரண்டு:** உலகில் வெளிரங்கத்தில் அரசர்களிருக்கின்றனர். உதாரணமாக, இந்திய தேச அரசர் இன்னவர், ஜப்பானிய தேச அரசர் இன்னவர், இந்த வீடு இன்னாருடையது என்றெல்லாம் சொல்கிறோம். ஆனால் மறுமையின் நாள் எப்படிப்பட்டதெனில், அன்று யாருக்கும் எவரும் வெளிப்படையான அரசனாயிருக்க மாட்டார். அன்றைய தினம் அல்லாஹ்வே கேட்பான். لمن الملك اليوم இன்று யாருடைய தேசத்தின் நாள்? என்பதாக. அப்போது பதில் சொல்வதற்குக் கூட யாரும் இருக்க மாட்டார்கள். இதனால் அவன் கேட்ட கேள்விக்கு அவனே பதிலும் சொல்கிறான்.

لله الواحد القهار "**லில்லாஹில் வாஹிதில் கஹ்ஹார்.**

**மூன்று:** அரசனைக்கொண்டு ஒரு பொருள் இணைத்து பேசப்படும்போது அப்பொருளின் மகத்துவம் வெளியாவதுண்டு. உதாரணமாக, இது அரசனின் மாளிகை என்று சொல்வது போன்று. மறுமையின் நாள் இறைவனுடன் இணைத்து பேசப்படுவதால் அந்த நாளின் மகத்துவமும், அதன் பயங்கரமும் வெளிப்படுகின்றன. அதாவது அந்த (மறுமை) நாள் இறைவனுடைய நாளாகும். இதை கேட்கும் அனைவரது உள்ளத்திலும் அந்நாளைப் பற்றிய பயம் ஏற்படுகிறது. அந்த நாளின் பயத்தால் மக்கள் நன்மையை செய்கின்றனர். பாவத்தை விட்டும் விலகிக் கொள்கின்றனர்.

**ஒரு குறிப்பு:** ஆரியர்கள் இவ்வுலகத்தை நன்மை தீமைக்குரிய கூலி கொடுக்கப்படும் இடம் என்று நம்புகின்றனர். அவர்கள் சொல்கின்றனர், ஒருவன் தீமையை செய்தால் அவனது இறப்புக்குப் பின் அவன் கொடிய விலங்காகப் பிறக்கிறான் என்றும், அதே நேரம் ஒருவன் நன்மை செய்தால் அவன் இறப்புக்குப் பின் நல்ல பிறப்பாக பிறக்கிறான் என்றும், பின்னும் இன்று உலகில் எத்தனை விலங்குகள் உள்ளனவோ அவையனைத்தும் முன் பிறவியில் மனிதனாகத்தான் இருந்ததென்றும் அவர்களது தீமையின் காரணமாக மறுபிறவியில் விலங்குகளாக பிறந்துள்ளனரென்றும் கூறுகின்றனர்.

ஆனால் இஸ்லாமியர்களது நம்பிக்கை அவ்வாறல்ல. மாறாக முஸ்லிம்கள் இவ்வுலகை செயலாற்றும் இடமாக மட்டுமே நம்புகின்றனர். இங்கு அதற்குரிய கூலி கிடையாது. ஆனால் மறுமை என்பது உலகில் செய்த செயலுக்குரிய கூலியை மட்டுமே பெற்றுக் கொள்ளும் இடம். அங்கே செயலாற்ற முடியாது.

எனினும் சில அமல்கள் இப்பூமியிலுண்டு. அவற்றுக்குரிய பலன்களும் இவ்வுலகிலேயே கிடைக்கின்றன. உதாரணமாக பெற்றோருக்கு பணிவிடை

செய்பவன் இவ்வுலகிலேயே சுகமான வாழ்க்கையை அனுபவிக்கிறான். இதேபோல பெற்றோரை நோவினை செய்பவன் இவ்வுலகிலேயே சொல்லொண்ணா துயரத்தையும் இழிவையும் அனுபவிக்கிறான். ஆனால் இந்த சுகமும்,கேவலமும் அவனுக்குரிய கூலியல்ல.

இது எவ்வாறெனில், அரசாங்கத்தில் வேலை செய்பவன் தனது நன்னடத்தை காரணமாக பதவி உயர்வு பெறுகிறான். அல்லது அவன் அரசுக்குச்செய்த துரோகத்தின் காரணமாக ஜெயிலுக்கு செல்கிறான். இது தற்காலிக நிலைதான். இறுதியான தண்டனை என்பது அவன் வழக்கு மன்றத்திற்கு சென்று முறைப்படி விசாரணை நடத்தி தீர்ப்பு வழங்கப்பட்ட பின்னர்தான்.

ஆரியர்களது இந்த நம்பிக்கை கொஞ்சமும் அறிவுக்குப் பொருந்தாது. காரணம், ஒரு பிறவியிலிருந்து மற்றோர் பிறவிக்கு ஒரு மனிதன் வந்தபின் முதல் பிறவியில் அவன் அனுபவித்த சுகமோ, துக்கமோ எதுவுமே அவனுக்குநினைவில்லையெனில், முற்பிறவியின் அமலைப் பற்றி அவன் என்ன உணர முடியும்? இதில் முற்பிறவியின் சுகத்தையும், துக்கத்தையும் அவன் எவ்வாறு உணர்ந்து கொள்வான்?

உதாரணமாக, ஒருவன் இப்பிறவியில் ஏழையாக பிறந்திருக்கிறான். அவர்களின் கூற்றுப்படி இப்பிறவியில் ஏழையாகப் பிறந்துள்ள அவன் முற்பிறவியில் மிகவும் வசதியாகத்தான் வாழ்ந்திருப்பான். அந்தப் பிறவியில் அவன் செய்த பாவத்தின் காரணமாக இப்பிறவியில் அவனை ஏழையாக்கிப் பிறக்கச் செய்துள்ளது. இதில் அவன் முதற்பிறவியில் என்ன பாவம் செய்தான் என்பதே அவனுக்கு நினைவில்லை. இன்னும் முற்பிறிவியில் தான் என்னவாகப் பிறந்தோம் என்பது கூட அவனுக்கு ஞாபகமில்லை. இந்தப் பிறவியில் தான் எந்தக் குற்றத்திற்காக ஏழையாக பிறக்க வைக்கப்பட்டிருக்கிறோம் என்பது அவனுக்குத் தெரியாது. இந்நிலையில் அவன் தற்போது பிறந்துள்ள இப்பிறவியில் அவன் ஏழையாகப் பிறந்திருந்தாலும் தனது ஏழ்மையிலும் அவன் சுகமாகத்தானே இருப்பான்?

**இரண்டு:** ஒருவேளை இவர்களின் நம்பிக்கை சரியானதென்று வைத்துக்கொண்டால் உலகில் ஜீவராசிகளின் எண்ணிக்கை ஒரே அளவாக இருக்க வேண்டும். அதாவது மனித எண்ணிக்கை அதிகமானால் விலங்கினங்களின் எண்ணிக்கை குறைந்து விட வேண்டும். அல்லது பாவங்களின் காரணமாக விலங்குகளின் எண்ணிக்கை அதிகமானால் மனித எண்ணிக்கை குறைந்து விட வேண்டும். ஏனெனில் துவக்கத்திலிருந்து இறுதிவரை ஆன்மாக்களின் எண்ணிக்கை ஒரே அளவாகத்தான் இருந்து வருகிறது. அவைகளும் விதவிதமான சரீரங்களில் புகுந்து வலம் வந்து கொண்டுள்ளன. ஆனால் உலகின் அமைப்பு நமக்கு எதைக் காட்டுகின்றதெனில் நாளுக்கு நாள் படைப்புக்களின் எண்ணிக்கை அதிகமாகிக் கொண்டே போவதைப் பார்க்கிறோம்.

**மூன்று:** ஒருமுறை மௌலானா நயீமுத்தீன் முராதாபாதி அலைஹிர் ரஹ்மா (இத்தப்ஸீரின் ஆசிரியரின் ஆசிரியர்) அவர்களுக்கும் ஆரியர்களின் தலைவர் ராம்சந்தர் தெஹ்லவிக்கும் இடையே வாக்குவாதம் நடைபெற்ற போது, ஹஜ்ரத் அவர்கள் அவர்களை நோக்கி, மகா ஸ்ரீ அவர்களே! உலகில் பிறந்த மனிதர்களில் பாவமே செய்யாதவர்கள் என்று யாராது பிறந்திருக்கிறார்களா? எனக் கேட்கஇ அதற்கவர்இ லட்சக்கணக்கானோர் அவ்வாறு பிறந்திருக்கின்றனர். அவர்களில் எல்லாம் மகா பெரியவர் துர்ஷீ முனிவராகும் என்று சொன்னார்.

இதுகேட்ட ஹஜ்ரத், இப்படிப்பட்ட மகா பெரியவர் மறு பிறவியில் எப்படிப்பட்ட பிறப்பாக பிறக்க வேண்டும்?

எல்லா வகையான சுகமும் கிடைக்கின்ற பிறவியில் அவர் பிறக்க வேண்டும்.

கண்டிப்பாக சரி! அவர் என்னவாக இவ்வுலகில் பிறப்பார்.

இத்தகையோர்தான் தனது மறுபிறவியில் அரசர்களாக பிறக்கின்றனர்.

இதைக் கேட்டவுடன் ஹஜ்ரத் அவர்கள், அரச பதவியை போல வேறு எந்தப் பதவியும் இவ்வுலகில் கஷ்டத்திற்குரிய பதவியில்லை. மற்றவர்களெல்லாம் தன்னைப் பற்றி மட்டுமே கவலைப் படுவர். ஆனால் அரசன் தன் நாட்டை பற்றியல்லவா சதா கவலைப் பட்டுக் கொண்டேயிருப்பான். ஏழைகள் கூட இரவானதும் படுத்து நிம்மதியாக உறங்கிக் கொண்டிருக்கும் போது இந்த அரசர்களோ இரவெல்லாம் வானத்தை பார்த்துக் கொண்டு அங்குள்ள நட்சத்திரங்களையெல்லவா இரவு முழுவதும் எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். இது மாபெரும் அநியாயம். இறைவன் அவர்களை எவ்வளவு பெரிய கஷ்டத்திலாழ்த்தி விடுகிறான் பார்த்தீர்களா?

ஹஜ்ரத் அவர்கள் சொல்லிக் கொண்டிருக்கும்போது, இல்லை இல்லை! அவர்கள் முற்றும் துறந்த முனிவர்களாக மறுபிறவியில் எடுக்கின்றனர் என்று திருத்தி சொல்ல...

அதுகேட்ட ஹஜ்ரத் அவர்கள், முற்பிறவியில் பாவமே செய்யாதவர்கள் தமது அடுத்த பிறவியில் இத்தனை மோசமானவர்களாகவா பிறக்க வேண்டும்! அவர்களின் முற்பிறவிக்குரிய நற்கூலி மறுபிறவியில் தலைக்கு ஒரு தொப்பி கூட இல்லாமல், காலில் செருப்பின்றி, உடலுக்கு உடுக்கத் துணியின்றி, கட்டிக் கொள்ள கோவணத் துண்டு கூட இல்லாமல், எல்லா மனிதர்களும் குளிர் நேரத்தில் நல்ல நல்ல கம்பளிகளை போர்த்திக் கொண்டு நிம்மதியாக இருக்கும்போது, இந்த முனிவர்கள் ஓரு துண்டுத் துணி கூட இல்லாமல் இரவு முழுவதும் வெடவெடத்துக் கொண்டு எத்தனை பெருங்கஷ்டம் என்று கூற...

அதன்பின் ராம் சந்தர் ஆசர்யாவால் பதில் சொல்ல வழியறியாமல் விழிபிதுங்கி நிற்கஇ ஹஜ்ரத் அவர்கள் முதல் பிறவியில் பாவமே செய்யாதவர்கள் மறு பிறவியில் என்னவாகப் பிறப்பார்கள் என்று நான் சொல்லட்டுமா? என்று கேட்க அதற்கவர்கள் சரியென்று சொல்லவும்,....

ஹஜ்ரத் அவர்கள், அவர் மறுபிறவியில் விபச்சாரகராக பிறக்க வேண்டும். ஏனெனில் விபச்சாரகர்கள் தான் உலகில் நிம்மதியாக இருக்கின்றனர். இவர்கள்தான் ஒவ்வொரு நாளும் புதுப்புது சுகத்தை அனுபவிக்கின்றனர். அடுமட்டுமா? மற்றவர்கள் உழைத்துச் சம்பாதிக்க இவர்கள் நிம்மதியாக உண்டு வாழ்கின்றனர்.

இதைக்கேட்டதும், கோபம் தலைக்கேற, மகாஸ்ரீ அவர்கள், பாருங்கள், நீங்கள் என்னை திட்டுகிறீர்கள்? என்று வெகுள, அப்படியா! இது நீங்கள் கொண்டுள்ள நம்பிக்கையில் ஏற்பட்டுள்ள குறைபாடு. குர்ஆனை ஒப்புக் கொள்ளுங்கள். சுவர்க்கம்தான் மனித நன்மைக்குரிய வெகுமதி என்பதை தெரிந்து கொள்வீர்கள், இந்த உலகமல்ல என்றனர்.

**நான்கு:** இவ்வுலகிலேயே நாம் பார்க்கிறோம். பெரிய செல்வந்தர்கள், கண்ணியவான்கள் எல்லாம் இவ்வுலக சுழற்சியின் வேகத்தில் அவர்களின் வாழ்க்கையே திசைமாறிப் போய்விடுகின்றன. முன்பு செல்வந்தராக இருந்தவர் இப்போது பரம ஏழையாகிவிட்டார். முன்பு கண்ணியமும், மேன்மையும் அவரது பாதங்களை முத்தமிட்டுக் கொண்டிருந்தன. இப்போது கேவலம் அவரை வளைத்துக் கொண்டது.

இதுபோலவே நாம் பெரும்பாலானவர்களைப் பார்க்கிறோம். முன்பு ஏழையாக இருந்தவர் இப்போது செல்வந்தராகிவிட்டார். அவ்வாறாயின் இவ்வுலகம் ஒரு மனிதனின் முற்பிறவியின் நன்மை தீமைக்குரிய கூலியை வழங்கும் வாழ்க்கைதான் என்று சொல்லப்பட்டால், ஏழையாக பிறந்தவர் கடைசி வரை ஏழையாகவே இருக்க வேண்டும். செல்வந்தன் செல்வந்தனாகவே இருக்க வேண்டும். பின் ஏன் வாழ்க்கை ஏற்ற இறக்கமாகின்றது?

**ஆரியர்களின் ஆட்சேபம்:**

**கேள்வி:** இவ்வசனத்தின் படி இறைவன் மறுமை நாளின் அரசன் எனில்இ இன்று வேறு அரசன் என்று யாரேனும் இருக்கிறார்களா?

**பதில்:** இதைப் பற்றிய விரிவான விளக்கம் முன்பே முன்னால் கூறப்பட்டு விட்டது.

**தேவ்பந்திகளின் ஆட்சேபம்:**

**கேள்வி:** மறுமை நாளில் இறைவன் மட்டுமே அதிபதி எனில்இ நபியையும், வலிமார்களையும் தமது நாட்டங்களை நிறைவேற்றுபவர்களாகவும், தமக்காக ஷபாஅத்து செய்பவர்களென்றும், நம்பிக்கை வைப்பது இந்த ஆயத்திற்கு

முரண்பாடானதல்லவா? இந்த பித்அத்வாதிகள் வலிமார்களுக்கும், ஷைகுமார்களுக்கும் காணிக்கை செலுத்துவதற்குரிய நோக்கமே இவர்கள் தங்களுக்கு மறுமையில் உதவி செய்வார்கள் என்ற நம்பிக்கையில்தான். இது பட்டவர்த்தனமான இறைவனுக்கு இணைவைக்கின்ற நம்பிக்கையில்லையா?

**பதில்:** ஷபாஅத்தும் மக்களின் தேவைகளை நிறைவேற்றி வைப்பதும்

அல்லாஹ்வை மாலிக்கென்று நம்பிக்கை கொள்வதற்கு மாற்றமானதல்ல. நபிமார்களும், வலிமார்களும், உலமாக்களும் அந்த மறுமை நாளின் உண்மையான மாலிக்கல்ல. மாறாக அந்த உண்மையான மாலிக்காகிய அல்லாஹ்வின் நேசர்கள் அவர்கள். அவர்களின் பரிந்துரை சிபாரிசு அங்கே கேட்கப்படுகிறது. அவ்வாறின்றி அவர்கள் தான் உண்மையான மாலிக் என்றிருந்தால் சிபாரிசுக்கு என்ன அர்த்தம்? அவர்களே மன்னித்து விடுவார்களே!

இவ்வாறே உலகிலும் எல்லா சிருஷ்டிகளின் மாலிக்கும் அல்லாஹ்தான். இருந்தும் இங்கே பெரும் பெரும் அதிகாரிகளிடம் சிபாரிசைக் கொண்டுதான் காரியம் நடக்கிறது.

إِيَّاكَ نَعْبُدُ

**நாங்கள் உன்னையே வணங்குகிறோம்**

**தொடர்பு:** இதுவரை முன்னால் பேசப்பட்டு வந்த வசனங்களுக்கும் இந்த வசனத்திற்குமிடையே சில தொடர்புகள் உள்ளன. அவை...

**ஒன்று:** இதுவரை அல்லாஹ் தனது பேரருள்இ வல்லமைஇ அரசாட்சி போன்றவை குறித்து விளக்கியவன் இப்போது தனது சிருஷ்டிகள் தனக்கு வழிப்படுவதை குறித்து பேசத் துவங்குகிறான். காரணம் அவனது பேரருளை சுட்டிக் காட்ட இப்போது மனிதர்கள் தனக்கு வழிப்பட வேண்டியதன் அவசியத்தையும்இ பின்னும் மனிதர்கள் தன்மீது கொண்டுள்ள பயத்தாலும் தனக்கு வழிப்பட வேண்டுமென நிர்ப்பந்திக்கிறான். ஆதலால் இதுவரை வழிப்படுவதற்குரிய காரணங்களை சொல்லி வந்தவன் இப்போது இவ்வசனத்தின் மூலம் பகிரங்கமாக கட்டளையிடுகிறான்.

**இரண்டு:** அல்லாஹ் இதுவரை பேசிய வசனங்களில் தனதுதிருநாமங்களை குறிப்பிட்டான். அவை அல்லாஹ், ரப், ரஹ்மான், ரஹீம், மாலிக் என்பதாகும். இவ்வைந்து திருநாமங்களை சுட்டிக் காட்டுவதன் மூலம், நான்தான் உங்களைப் படைத்தேன். எனவே நான்தான் உங்களின் அல்லாஹ். அதன்பின் நானே உங்களை ரட்சிப்பதால் நான் உங்களின் ரப்புமாகும். பின்பு நீங்கள் பாவம் செய்த போது அதை நான்மறைத்ததால் நான் உங்களின் ரஹ்மானாயிருக்கிறேன். அதன்பின் நீங்கள் பாவமன்னிப்பு தேடியபோது உங்களை நான் மன்னித்ததால் நான்

ரஹீமாயிருக்கிறேன். பின்னும் நீங்கள் எனது கட்டுப்பாட்டில், எனது எல்லைக்குள் இருப்பதாலும், உங்களின் நன்மை, தீமைக்கு நானே கூலி வழங்கும் அதிபதியாக இருப்பதாலும் நானே உங்களின் "மாலிக்" ஆனதால் என் அடியார்களே! நீங்கள் என்னையே வணங்குங்கள். பின்னும் வணங்கப்படுவதற்குரிய தகுதி என்பது எனக்கு மட்டும்தான் உள்ளது. எனவே மேற்படி தன்மைகள் அமைந்துள்ள என்னை நோக்கி, நாங்கள் உன்னையே வணங்குகிறோம் என்று சொல்லுங்கள்.

**மூன்று:** ஒரு மனிதனுக்கு அவனது வாழ்வில் மூன்று நிலைகள் மட்டுமே உள்ளன. அவை கடந்த காலம், நிகழ் காலம், வருங்காலம். இம்மூன்று நிலைகளிலும் மனிதன் அல்லாஹ்விடமே தேவையானவனாயிருக்கிறான். காரணம் அவன் இல்லாதிருந்த போது அவனை அவன்தான் உருவாக்கினான். பின் உழைப்பதற்கு சக்தியற்ற நிலையிலிருந்த போது, அவன்தான் அவனுக்கு இரணமளித்தான். இதனை அல்லாஹ், ரப் என்னும் இரு பெயர்கள் மூலம் விளக்கினான். பின்னும் அவன் வாழ்ந்திடும் காலத்தில் அவனது ஒவ்வொரு அசைவிலும் அவன் பக்கமே மனிதன் தேவையுடையோனாய் இருப்பதை ரஹ்மான், ரஹீம் என்னும் திருநாமங்களைக் கொண்டு விளக்கினான். இதன்பின் கல்பிலும், மஹ்ஷரிலும் மனிதன் அவனிடமே தேவையாவதால் இதனை "மாலிகி யவ்மித்தீன்" என்பதன் மூலம் சொல்லித் தந்தான். ஆதலால் இவ்வசனங்கள் அனைத்துமே மனிதன் எந்த நிலையிலும் அல்லாஹ்விடமே தேவையானவனாயிருப்பதை சுட்டிக் காட்டுவதால் இப்போது இந்த ஆயத்தின் மூலம் எவனது பேரருளும், நல்லுதவியும் அவனுக்கு சதாவும் தேவைப்பட்டதோ, தேவைப்படுகிறதோ அவனையே வணங்க வேண்டுமென்று சொல்லப்படுகிறது.

### தப்ஸீர்

உலமாக்கள் கூறுகின்றனர். இவ்வசனத்தில் பேசப்படும் முறை மாறி விட்டது. ஒன்று: இதுவரை இறைவனைப் பற்றிய பேச்சு அவனது திருநாமத்துடன் இணைத்து பேசப்பட்டது. இரண்டு: இதுவரை அல்லாஹ்வைப் பற்றி மட்டுமே பேசப்பட்டு வந்தது. இவ்வசனத்தில் அவனது அடியார்களைப் பற்றியும் பேசப்படுகிறது. மூன்று: முந்திய ஆயத்துகள் அனைத்திலும் அல்லாஹ்வின் பண்புகள் பற்றியே பேசப்பட்டு வந்தது. இவ்வசனத்தில் அவனது அடியார்களின் பண்பு பற்றியும் பேசப்படுகிறது.

அதாவது எவ்வாறெனில் "இய்யாக" என்பதை முன்னாலும், "நஃபுது" என்பதை பின்னாலும் பேசப்படுகிறது.இதில் இய்யாக என்பதை முற்படுத்தியதன் காரணம் யாதெனில், நாங்கள் "உன்னையே" வணங்குகிறோம் எனும் வார்த்தையில் இறைவன் ஒருவனே வணக்கத்திற்குரியவன் என்னும் அர்த்தத்தை வெளிப்படுத்துவதற்காக வேண்டி. காரணம் இறைவன் பூர்வீகமானவனாயும், அடியார்களான நாம் நவீனமானவர்களாயும் இருப்பதால், பூர்வீகமான இறைவன் முன்னாலும், நவீனமான அடியார்களான நம்மை பின்னாலும் பேசப்பட்டது. அடுத்து இவ்வசனத்தில் மறைந்துள்ள மற்றுமோர் உபதேசம் யாதெனில், மனிதன் தன்னை

பற்றியும், தன்னிறைவனைப் பற்றியும் பேசத் துவங்கினால் முதலில் இறைவனைப் பற்றி பேசி அதன் பின்பே தன்னைப் பற்றி பேச வேண்டுமென்று இவ்வசனம் எடுத்துக் கூறுகின்றது.

மேலும் வணங்குகிறவன் தன்னிறைவனின் திருப்தியை பெறும் நோக்கத்திற்காக மட்டும் வணங்கவேண்டுமேயன்றி மற்றவர்களுக்கு காண்பிப்பதற்காக வணங்கக் கூடாதென்பதையும் இவ்வசனம் சுட்டிக் காட்டுகிறது. ஏனெனில், மற்றவர்களுக்கு காண்பிப்பதற்காக வணங்குகிறவன் அல்லாஹ்வை வணங்குவதில்லை. மாறாக யாருக்குக் காட்ட வணங்குகிறானோ அவர்களைத் தான் வணங்குகிறான்.

நான் ஒரு பெரியவரை கண்டேன். அவர் தொழ நின்றால் அதிகமாக அழுவார். நான் அதற்குரிய காரணத்தை அவரிடம் கேட்க, அதற்கவர்: நான் உண்மையாக தொழுகின்றேனா அல்லது பொய்யாக தொழுகின்றேனா என்பது எனக்குத் தெரியாது. அதேநேரம் எனது நாவினால் நான் உன்னையே வணங்குகிறேன் என்றுசொன்னாலும் என் மனம் சிறிது ரியாவை உள்ளடக்கியிருந்தாலும் இறைவன் நீ பொய்யன் என என்னைப் புறக்கணிப்பதோடு, அடே! அறிவற்றவனே! நீ மஸ்ஜிதில் நின்று தொழுகையில் என் முன்னால் உன் கைகளைக் கட்டிக் கொண்டு உனது நாவால் உன்னையே வணங்குகிறேன் என்று சொல்லிக் கொண்டு உன் உள்ளத்தால் மற்றவர்களை வணங்கிக் கொண்டிருந்தாய்? என்று சொல்லிவிடுவானோ என்பதை எண்ணித்தான் அழுகிறேன் என்று சொன்னார். அல்லாஹ் நமக்கும் அத்தகைய உண்மையான தொழுகையை தொழுதிட நல்லருள் புரிவானாக. ஆமீன்.

மேலும் இவ்வசனத்தை முன்னிலை பதமாக கொண்டு வந்ததன் நோக்கம், இவ்வசனத்தை ஓதும்போது அடியான் தன்னிறைவனை தம்முன் இருப்பதாக பாவிக்க வேண்டுமென்பதற்காக. அதாவது நான் அல்லாஹ்வைப் பார்க்கிறேன் என்று எண்ண வேண்டும். இயலாவிடில் அல்லாஹ் என்னைப் பார்க்கிறான் என்றாவது எண்ண வேண்டும். இதனால்தான் நான் இய்யாக நஃபுது என்று கூறுகிறேனென்ற எண்ணம் வரவேண்டும்.

இனி தொழுகையாளி தொழுகையின் துவக்கத்தில் இறைவனை விட்டும் மறைந்திருந்தான். இப்போது தொழுகையில் இறைவனது பண்புகளைப் பற்றி பேசிய பரக்கத்தால் எந்த அளவுக்கு அவன் முன் ஆஜராகி விடுகிறானெனில், இப்போது அவனை பார்ப்பது மட்டுமல்ல. அவனுடன் பேசவும் செய்து கொண்டிருக்கிறான்.

இன்னும் இதுவரை இறைவனது பண்புகளை கொண்டு மட்டுமே பேசிக் கொண்டிருந்தவன் இப்போது அவனுடன் நேருக்கு நேர் பேசும் நிலைக்கு இவ்வசனத்தின் மூலம் வந்து விட்டான்.

**அவசியக் குறிப்பு**

தொழுகையில் யாரையும் முன்னிலைப்படுத்தி பேசக் கூடாது. மீறி பேசினால் அத்தொழுகை முறிந்து விடும். அதே நேரம் அல்லாஹ் மற்றும் அவனது ரஸூலான முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை முன்னிலைப் படுத்தி பேசலாம். எவ்வாறெனில், இய்யாக நஃபுது என்னும் வசனத்தின் மூலம் அல்லாஹ்வுடன் பேசுபவர் அத்தஹிய்யாத்தில் "அஸ்ஸலாமு அலைக்க அய்யுஹன் நபிய்யு" என்பதில் நபிகளாருடன் பேசுகிறார். அத்துடன் தொழுபவர் எவ்வாறு அல்லாஹ்வை தம்முன் இருப்பதாக நம்புகிறாரோ, அவ்வாறே நபிகளாரையும் தம்முன் இருப்பதாக நம்ப வேண்டும். இதுபோன்றே தொழுபவர் அல்லாஹ்வை மட்டுமே திருப்திப் படுத்த வேண்டுமென்று எவ்வாறு தொழுகின்றாரோ, அவ்வாறே நபிகளாரின் திருப்தியையும் பெறுவதற்காக தொழ வேண்டும். இதனால்தான் நபித்தோழர்கள் தொழுகையில் கூட நபிகளாரை கண்ணியப்படுத்தினர்.

نعبد "நஃபுது" என்பது عبد அப்து என்னும் மூலத்திலிருந்து பிறந்ததாகும். இதன் அர்த்தம் "பணிவை வெளிப்படுத்துதல்" என்பதாகும். இதனால்தான் அரபியர் பழக்கத்தில் பொதுப்பாதையை طريق معبد "தரீக் மஅப்பத்" எனக் கூறுகின்றனர். ஏனெனில் அதில் செல்வோரது காலின் கீழ் அப்பாதை வருவதால் இவ்வாறு கூறுகின்றனர்.

(பார்க்க: தப்ஸீர் கபீர்)

இனி ஷரீஅத்துடைய நடைமுறையில் இப்பதம் عبادة "இபாதத்துன்" அல்லது عبودة "உபூதத்துன்" என்பதிலிருந்து திரிந்துள்ளது. இதில் இபாதத் என்பதன் அர்த்தமானது, "அடியான் ஆகுதல்". உபூதத் என்பதன் அர்த்தம் "அடிமையாகுதல்" என்பதாகும்.

இதன் அர்த்தமானது, "நாங்கள் உன்னையே வணங்குகிறோம்." அல்லது நாங்கள் உனது அடியார்களாக ஆகிறோம் என்று சொல்லலாம்.

திருக்குர்ஆனில் அப்து என்பதை நான்கு வகை அர்த்தத்தில் பேசப்படுகிறது. படைப்புக்கள், குடிமக்கள், வழிபட்டவர்கள், இறைவனில் தன்னை அழித்துக் கொண்டவர்கள் ஆகிய நான்கு வகையினராகும்.

இதில் படைப்பின் பூரணநிலை என்பது அடிமைத்தைப் பிரதிபலிப்பதே ஆகும். இதனாலேயே கலிமாவில் அப்துஹு வரஸூலுஹு என்று சொல்லப்பட்டது.

இறைவனின் உண்மையான அடியானாக தன்னை உருவாக்கிக் கொள்வது இரு முறைகளை கொண்டதாகும். ஒன்று: மனம் அன்னியம் என்னும் வேற்றுமைகளை முழுமையாக நீக்கி இறைவன் குடியிருக்க தகுதி வாய்ந்த இடமாக மனத்தை

உருவாக்கிக் கொள்ளுதல். இன்னும் இறைவனுக்கு வழிப்பட்டு நடப்பதில் இன்பம் காணுதல்.

மற்றொன்று: இறைவனின் நேசர்களை உள்ளார்த்தமாக நேசித்தல்.

உலமாக்களிடமிருந்து கல்வியும், எழுத்தாளர்களிடமிருந்து எழுத்தறிவும், கவிஞர்களிடமிருந்து கவிதையும் கிடைப்பது போல் இறைவனின் உண்மையான அடியார்களிடமிருந்து அடிமைத்தனம் கிடைக்கிறது.

இபாதத் என்பதற்கு வழக்க நடைமுறையிலுள்ள அர்த்தமானது, எவரையேனும் சிருஷ்டிகர்த்தா அல்லது சிருஷ்டிகர்த்தாவுடன் பங்கு கொண்டிருப்பவர் என்று நம்பி அவனுக்கு வழிப்பட்டு நடப்பதாகும். எதுவரை இந்த எண்ணம் வராதோ அதுவரை அதனை இபாதத் என்று கூறப்பட மாட்டாது. விக்ரஹத்தை ஆராதரிப்பவர் சிலைக்கு முன் ஸுஜூது செய்கிறார். முஸ்லிம்கள் க..பாவிற்கு முன் ஸுஜூது செய்கின்றனர். இரு இடத்திலும் கற்கள்தான் உள்ளது. ஆனால் அவர்களை "முஷ்ரிக்" என்றும் நம்மை "முவஹ்ஹித்" என்றும் சொல்கிறோம்.

இரண்டுக்கும் வேறுபாடு என்னவெனில்இ முஷ்ரிகீன்கள் தாங்கள் வணங்கும் சிலைகளை இறைவனின் பங்குதாரர்களாக கருதுகின்றனர். நாம் இறைநேசர்களை அல்லாஹ்வின் சொந்த அடியார்கள் என்று நம்புகிறோம். எனவே வணக்கத்தின் மூலம் நாம் யாரை வணங்குகிறோமோ அவரை சிருஷ்டிகர்த்தா என்று ஒப்புக் கொள்ள வேண்டும்.

இனி வணக்கம் என்பது அநேகமுண்டு. தொழுகைஇ நோன்புஇ ஹஜ்இ ஜகாத் பின்னும் இதனை இப்படிச் சொல்லலாம். அனுமதிக்கப்பட்ட எந்த ஒரு செயலையும் இறைவனை திருப்திபடுத்த வேணடுமென்று எண்ணிச் செய்வது அனைத்துமே வணக்கமாகும். எதுவரை எனில் மனிதன் தன்னிறைவனை திருப்திபடுத்தும் எண்ணத்தில் தனது பிள்ளைகளை போஷிப்பதும் கூட வணக்கமே. இதற்கு நன்மையும் உண்டு. இப்பதம் இவையனைத்தையும் தன்னுள் அடக்கிக் கொண்டுள்ளது.

இதுபோன்றே ஒருவன் தன்னை ஒரு உண்மையான அடியானாக வடிவமைத்துக் கொள்ள பல்வேறு வழிமுறைகள் உள்ளன. இறைவனது திருப்தியின் மீது தான் திருப்தி கொள்ளல். அவனது அருட்கொடைக்கு நன்றி செலுத்துதல். அவனது சோதனையில் பொறுமையை கடைப்பிடித்தல். தனது நம்பிக்கையை சீர்படுத்திக் கொள்ளல். சுருங்கச் சொன்னால் தனக்குள் அடிமைத்தனத்தின் பண்புகளை உருவாக்கிக் கொள்ளல் ஆகியவைகளாகும்.

“நஃபுது“ என்று இறைவன் பன்மையில் சொன்னதற்குரிய காரணம், யா அல்லாஹ்! நான் உனது சன்னிதானத்தில் தனியாக ஆஜராகவில்லை. பின்னும் வெறுமனே எனது வணக்கத்தை மட்டும் நான் கொண்டு வரவில்லை.

மாறாக உனது அடியார்களுடன் வந்திருக்கிறேன். அவர்களில் நபிமார்களும் வலிமார்களும் சாலிஹீன்கள் போன்றோரெல்லாம் இருக்கின்றனர். ஒருவேளை எனது வணக்கம் உனது சன்னிதானத்தில் அங்கீகரிக்கப்படுவதற்குரிய தகுதியற்றதெனில், அவர்களின் பொருட்டாவது எனது வணக்கத்தை ஏற்றுக் கொள்வாயாக. முத்தை வாங்குபவன் சிப்பியையும் சேர்த்தே வாங்குவதைப் போல.

நல்லதும் கெட்டதுமான இரண்டும் கலந்த பொருளை வாங்குபவர் நல்லதை மட்டும் வைத்துக் கொண்டு கெட்டதை திருப்பிக் கொடுக்க மாட்டார். ஒன்று எல்லாவற்றையுமே வாங்கிக் கொள்வார். அல்லது திருப்பிக் கொடுத்து விடுவார். இது போன்றே ஒவ்வொருவரின் வணக்கமும் இறை சன்னிதானத்திலிருந்து திருப்பப்படுவதில்லை. நல்லவர்களது வணக்கத்தின் பொருட்டால் நம்போன்ற பாவிகளின் வணக்கமும் அங்கீகாரம் பெற்று விடுமென்று மார்க்கத்தின் சட்ட விற்பன்னர்களான புகஹாக்கள் கூறுகின்றனர்.

இதுபோன்றே ஒருவர் தம் இறைவனை தனியாக நின்று வணங்கிய போதிலும், எனக்கு முன் அங்கீகரிக்கப்பட்ட எத்தனையோ பேர் வணங்கிய வணக்கத்தைத் தான் நான் வணங்குகிறேன். இன்னும் எவ்வளவோ அங்கீகரிக்கப்பட்டவர்கள் இப்போதும் வணங்கிக் கொண்டுள்ள வணக்கத்தைத் தான் நானும் இப்போது வணங்குகிறேன் என்று எண்ணி வணங்க வேண்டும்.

உதாரணமாக, ஒருவர் நல்ல எண்ணத்துடன் இது எனது இறைவனின் கட்டளை என்றெண்ணி தமது பிள்ளைகளை வளர்த்தாலும், அல்லது வேலை செய்தாலும் அதற்கும் பெயர் வணக்கமாகும்.

அப்போது இவ்வாறு எண்ணிக் கொள்ள வேண்டும். அதாவது நபிகள் நாதரும் தம் குடும்பத்தை பராமரித்தனர். மற்ற நபிமார்களெல்லாம் தமது ரிஜ்கை தேடிப் பெறுவதற்காக பல்வேறு வேலைகளையும், தொழிலையும் செய்து வந்தனர். எனவே நானும் அவர்களைப் பின்பற்றி செயல்படுகிறேன் என்பதை உணர்வதற்காகத் தான் “நஃபுது“ என்று பன்மையில் பேசப்பட்டது.

பின்னும் அண்ணல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் உலகக் காரியங்களை தாமே செய்து வந்தனர். காரணம் இவை சுன்னத்தாக வேண்டுமென்பதற்காக. இதுபோன்றே எவராவது தனியாக வணங்கினாலும் அவரும் “இய்யாக நஃபுது“ என்றே ஓதுவார். ஏனெனில் ஆயிரக்கணக்கான இறையடியார்கள் இதற்கு முன்பே இவ்வணக்கத்தை வணங்கியுள்ளனர். இன்னும் ஆயிரக்கணக்கானோர் இன்றும் வணங்கிக் கொண்டுள்ளனர் என்பதற்காக.

அடுத்து பார்ப்பதற்கு இவர் தனியாக வணங்கிக் கொண்டிருப்பதைப் போல தோன்றினாலும் இவருடன் மலக்குகளும் இணைந்து இறைவனை வணங்குகின்றனர். அதனால்தான் ஒருவருக்கு நாம் ஸலாம்சொல்லும்போது, "அஸ்ஸலாமு அலைக்கும்" "அதாவது உங்கள் அனைவர் மீதும் ஸலாம் உண்டாவதாக" என்று சொல்கிறோம். காரணம் அவருடன் மலக்குகளும் இணைந்திருக்கின்றனர் என்பதற்காக.

எனவே நாம் ஜமாஅத்துடன் இணைந்து தொழ வேண்டும். காரணம் ஒவ்வொரு வணக்கமும் முஸ்லிம்களது கூட்டு நிலைக்கு சாட்சியாக உள்ளது. இனி ஜமாஅத்தின்றி வணங்கப்படும் வணக்கமனைத்தும் நிறைவுடையதாகாது.

**சூபியாக்களின் தப்ஸீர்**

சூபியாக்களிடம் இறைவனது திருப்தி ஒன்றை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டு நிகழ்த்தப்படும் வணக்கமே வணக்கம் என்பதாக கொள்ளப்படுகிறது. சுவர்க்கத்தை பெறுவதற்காகவும், நரகினின்று தப்பிக் கொள்வதற்காகவும் நிகழ்த்திடும் வணக்கத்தை ஒருவகை வியாபார நோக்குடைய வணக்கமென்று கூறுகின்றனர்.

இதனால்தான் "இய்யாக" நாங்கள் உன்னை மட்டுமே வணங்குகிறோம். அதாவது எங்களது வணக்கத்தின் குறிக்கோள் உனது பரிசுத்தமான தாத்தை (தத்சொரூபத்தை) பெறுவது மட்டுமே. இதன் காரணமாகவே தொழுகைக்குரிய நிய்யத்தில் "அல்லாஹ்விற்காக" என்று கூறுகிறோம். மாறாக சுவனத்திற்காக என்றோ அல்லது நரகை விட்டு தப்புவதற்காக என்றோ நிய்யத்துச் செய்வதில்லை.

இனி ஒருவன் சுவனத்தைப் பெறவோ அல்லது நரகை விட்டும் தப்பவோ எண்ணி வணங்குவானேயாயின் அவன் அதற்குரிய பலனை மறுமை நாளுக்கு முன் கண்டிட முடியாது. ஏனெனில் நரக சுவர்க்க நிலைகள் என்பதெல்லாம் கியாமத்திற்குப் பின்னரே. ஆனால் தன் இறைவனை மட்டுமே திருப்திப்படுத்தும் குறிக்கோளை கொண்டு வணங்குபவன் அதற்குரிய பலனை இவ்வுலகிலேயே கண்டு விடுவான். ஆகவே இவனே அதிக லாபமுடையவன்.

**வணக்கத்தின் உயிர்**

வணக்கத்தின் உயிரானது மனிதன் தனது அகம்பாவத்திலிருந்து மகிழ்ச்சியின் பக்கம் திரும்புவதும் உலக இருளை விட்டும் நீங்கி இறைவனின் பேரொளியை தரிசிப்பதுமாகும். ஏனெனில் இவ்வுலகமும் இதிலுள்ள பொருட்களும் இருளாகும். அதேநேரம் தீன் என்பது பேரொளி. இதுபோன்றே உலகில் அமைதியின்மையும்,வணக்கத்தில் அமைதியுமுள்ளது.

இதுகுறித்து இறைவன் திருக்குர்ஆனில்,...

فَسَبِّحْ بِحَمْدِ رَبِّكَ وَكُنْ مِّنَ السّٰجِدِيْنَۙ

وَاعْبُدْ رَبَّكَ حَتّٰى يَاْتِيَكَ الْيَقِيْنُ

**எனது ஹபீபே! காபிர்களது பேச்சினால் உய்களின் மனதிற்கு வருத்தமேற்படுவதை நாம் தெரிந்திருக்கிறோம். இவ்வருத்தம் நீங்க, "நீர் உம்மிறைவனை புகழ்ந்து ஸுஜூது செய்பவர்களில் நின்றும் ஆகிவிடுவீராக. இன்னும் உம்மிவைனை நிர்ணயம் வருமளவு வணங்குவீராக"** என்று கூறுகிறான்.

ஆதலால் வணக்கமானது உலகக் கஷ்டங்களை போக்குவதாயிருக்கும். இனி வணக்கத்தில் நிர்ணயநிலை இல்லையாயின் அது உயிரற்ற வணக்கமே.

பின்னும் எதன் மூலம் தன்து நேசன் திருப்தியடைவானோ அதன் பெயரே வணக்கமாகும். இவ்வாறே எந்தச் செயல் மூலம் தனது நேசன் அதிருப்தியடைவானோ அவை பாபங்களாகும். அலீ ரலியல்லாஹு அன்ஹு அவர்கள்இ "கபீருடைய நாளின் போது" தனது நபியின் உறக்கத்திற்காக தொழுகையை தியாகம் செய்ததே உண்மையான வணக்கமாகும். இதில் தொழுகையை விடுவதில் தான் தனது நேசரின் திருப்தியுண்டு எனத் தெரிந்தால் விட்டு விடுவதுதான் உண்மையான வணக்கமாகும். இனி தொழுவதில் தான் திருப்தி எனில் தொழுவது தான் வணக்கமாகும். சூரியன் உதிக்கும் போது தொழுவது குற்றம். ஏன் தெரியுமா? அதில் அல்லாஹ்வும் ரஸூலும் திருப்தியுறவில்லை என்பதற்காக.

**ஆட்சேபங்கள்:**

**கேள்வி:** இறைவன் பிரபஞ்சத்திலுள்ள அனைத்தையும் விட்டு தேவையற்றவன் என்றிருக்கும் போது அவனை அடியார்கள் வணங்க வேண்டியதன் அவசியமென்ன? இந்நிலையில் அடியார்கள் தன்னை வணங்க வேண்டுமென்று ஏன் கட்டளையிட்டான்? நாமும் வணக்கமென்னும் பெயரில் வீணாக ஏன் சிரமப் பட வேண்டும்?

**பதில்:** இறைவனுக்கு நமது வணக்கம் நிச்சயம் தேவையில்லை தான். ஆனால் நமக்கு அவசியமாயிற்றே. உயர்ந்த விரிப்பின் மீது ஒருவர் அமர வேண்டுமாயின் அவரது திரேகம் தூய்மையாயிருக்க வேண்டுமல்லவா! தூய்மையற்றவர் அதில் அமருவதற்கு சிறிதும் தகுதியில்லாதவர். இறைவனது சொர்க்கம் மிக மிகத் தூய்மையான ஒரு இடம். அங்கே செல்வதற்கு தூய்மையுள்ளவரே தகுதியுடையவர். உலகக் காரியங்கள் நமது உள்ளத்தை அசுத்தப்படுத்தி விடுகின்றன. இதில் வணக்கம் ரஹ்மத்துடைய நீராகும். அதைக் கொண்டு உள்ளம் தூய்மையடைகிறது. இனி வணக்கத்தைக் கொண்டு தூய்மை பெறாத உள்ளம் மதிப்பிழந்து போய்விடும்.

இன்னும் விரோதிகளால் சூழப்பட்டுள்ள ஒருவன் தன்னை தற்காத்துக் கொள்வதாயின் ஒன்று இவன் சக்தியுள்ளவனாக இருக்க வேண்டும். அல்லது சக்தியுள்ள ஒருவனிடம் நெருக்கம் கொண்டிருக்க வேண்டும். இதில் நாமோ ஆயிரக்கணக்கான ஷைத்தான், நப்ஸே அம்மாராஇ உலகக் கவலைகள், கெட்டவர்களின் சகவாசம் போன்றவற்றில் சிக்கிக் கொண்டிருப்பதால் சகல சக்தியம் கொண்டுள்ள இறைவனுடன் சதா நமக்கு தொடர்பிருக்க வேண்டும். அந்தத் தொடர்புதான் வணக்கமாகும்.

இதுபோன்றே தனது நாட்டை விட்டு வெளியேறி வேற்று நாட்டுக்கு வந்திருப்பவனிடம், அவனது நாட்டைப் பற்றி பேசினால் அவனது மனதுக்கு அமைதி கிடைக்கிறது. நமது ஆன்மாவும் தனது தேசத்தை விட்டு வந்திருப்பதால் அதன் தேசத்தை பற்றி வணக்கத்தின் மூலம் பேசும்போது அதற்கு அமைதி கிடைக்கின்றது.

தப்ஸீர் அஜீஸியில், அப்துல்லாஹ் இப்னு ஜுபைர் ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் திரேகத்தில் ஒரு கடுமையான காயம் ஏற்பட்டதால் அந்த இடத்தையே வெட்டியெறிய வேண்டிய அவசியமிருந்தது. ஆனால் வலியின் கடுமையை உணர்ந்து வெட்ட மனம் வரவில்லை. அதே நேரம் அவர்கள் தொழுது கொண்டிருக்கும் போது அப்பகுதி வெட்டியெறியப்பட்டது. ஆனால் அதைப் பற்றிய உணர்வு கூட அப்போது அவர்களுக்கு இல்லாது போயிற்று என்று எழுதப்பட்டுள்ளது.

**ஆரியர்களின் ஆட்சேபம்:**

**கேள்வி:** நாங்கள் இறைவனை மட்டும்தான் வணங்குகிறோம் என்றும் தம்மை ஏகத்துவவாதிகள் என்றும் முஸ்லிம்கள் கூறுகின்றனர். ஆனால் கஃபா என்னும் ஆலயத்தை நோக்கித்தான் தலை வணங்குகின்றனர். எனவே இவர்கள் இந்துக்களை விட மாபெரும் முஷ்ரிக்குகள். ஏனெனில் இந்துக்கள் ஒரு கல்லைத்தான் வணங்குகின்றனர். ஆனால் முஸ்லிம்கள் ஆயிரக்கணக்கான கற்களால் கட்டப்பட்ட கட்டிடத்தையல்லவா வணங்குகின்றனர்! ஒருவேளை முஸ்லிம்கள், நாங்கள் கஃபாவை இறைவனாக பாவிக்கவில்லையென சொன்னால்இ இந்துக்களும் விக்ரஹங்களை இறைவனாக நம்பவில்லை. மாறாக தமது எண்ணத்தை ஓர்மைப் படுத்துவதற்காகத்தான் தமக்கு முன் ஒரு கல்லை வைத்துக் கொள்கின்றனர்?

**பதில்:** இதற்குரிய பதிலை நாம் தொழுகைக்குரிய நிய்யத் என்னும் பகுதியில் தந்து விட்டோம். ஏனெனில் நிய்யத் அல்லாஹ்வுக்காக தொழுகிறேன் என்றுதான் மொழியப்படுகிறதேயன்றி, முன்னோக்கப்படும் கஃபாவுக்காக என்று சொல்லப்படுவதில்லை. எனவே வணக்கம் என்பது கஃபாவுக்கல்ல. அல்லாஹ்வுக்குரியதாகும். வெறுமனே முன்னோக்குவதற்காகத்தான் கஃபாவை கொண்டு வரப்பட்டது. கஃபாவின் திரையை நம்மிடம் கொண்டு வந்தால் நம்மில் யாரும் அதற்கு சிரவணக்கம் செலுத்த மாட்டார்.

அதேநேரம் கஃபாவிலுள்ள ஒரு கல்லோ அல்லது முழு கஃபாவோ இந்தியாவுக்கு கொண்டு வரப்பட்டால் எந்த முஸ்லிமும் இந்தியாவை நோக்கி தமது முகத்தை திருப்ப மாட்டார். ஆனால் இந்துக்கள் அப்படியல்ல. அவர்கள் சிலை எந்தப்பக்கம் இருக்கிறதோ அந்தப்பக்கம் தான் அவர்கள் தலை தாழ்கிறது. ஆதலால் அவர்கள் சிலையைத்தான் வணங்குகின்றனர் என்பது உறுதியாகின்றது.

அடுத்து பயமுள்ள நேரத்திலும், பிரயாணத்தின் போதும் நபில் தொழுகைக்காகவும், சவாரியில் இருப்பவர் எந்தத் திசை நோக்கி தொழுதாலும் அவர் தொழுகை நிறைவேறி விடும். நீங்கள் எந்தப் பக்கம் திரும்பினாலும் அங்கே அல்லாஹ்வின் திருத்தோற்றம் இருக்கிறது என்று திருக்குர்ஆன் கூறுகிறது.

மற்றுமோர் வித்தியாசம், இந்துக்கள் சிலைகளை ஏதாவதோர் மனிதப் பெயரைக் கொண்டே உருவாக்குகின்றனர். ராமன், முருகன், காளி, விநாயகர் என்று. அதன்பின் அச்சிலையில் வடிக்கப்பட்டவரை இறைவனுக்கு இணையாக்குவதுடன், கூட்டாளியாகவும், அவதாரம் என்றும் நம்புகின்றனர். அதன் பின் அச்சிலையை வணங்கும்போது அது யாருடைய பெயரால் உருவாக்கப்பட்டுள்ளதோ அவரை வணங்குகிறேன் என்பதாக எண்ணியே தலை வணங்குகின்றனர். கஃபாவில் இப்படிப்பட்ட எந்த பேச்சும் பிரச்சனையும் கிடையாது.

இதையும் நினைவில் கொள்ளுங்கள். கஃபா என்பது அக்கட்டிடத்தின் பெயரல்ல. மாறாக அந்த இடத்தின் பெயராகும். அங்கே கட்டிடமே இல்லையென்றாலும் கூட அந்த இடத்தை முன்னோக்கித்தான் முஸ்லிம்கள் தமது முகத்தை திருப்புவர். கட்டிடம் என்பது வெறும் அடையாளம் மட்டுமே. ஒருவர் மலை உச்சியில் நின்று வணங்கும்போது அந்த கஃபா வணங்குகின்ற அவருக்கு கீழேதான் இருக்கின்றது என்பதைக் கவனித்தால் முஸ்லிம்கள் கஃபாவை வணங்கவில்லை என்பது புலனாகும்.

**கேள்வி:** ஆரியர்களின் வணக்கத்தை நீங்கள் தவறானதென்று நினைக்க வேண்டாம். ஏனெனில் அவர்கள் சிலைகள் எதையும் வணங்குவதில்லை. மாறாக இறைவனின் பெயரைத்தான் கூறுகின்றனர். நீங்களும் இறைவனின் பெயரைத் தானே கூறுகின்றீர்கள். நோக்கம் இறைவனை நினைப்பதுதான். எந்த முறையைக் கொண்டு நினைத்தால் என்ன?

**பதில்:** உண்மையான வணக்கம் என்பது இறைவன் மூலம் நபிமார்களைக் கொண்டு காட்டித் தரப்பட்டதாகும். தன்னறிவைக் கொண்டு உருவாக்கப்பட்ட வணக்கம் அசலில் வணக்கமே அல்ல. முஸ்லிம்களது வணக்கமானது இறைவன் மூலம் நபிமார்களால் நடத்திக் காட்டப்பட்டதாகும். எனவே இதுதான் உண்மையான வணக்கம். ஆரியர்களின் வணக்கம் அறிவைத் தழுவிய ஒன்றாகும். தன்னறிவைக் கொண்டு வடிவமைக்கப்பட்ட வணக்கத்தில் அவர் எந்த முறையைக் கொண்டு

வணங்கினாலும் அது தவறானதே. அரசக் கட்டளைக்கு வழிப்படுவதுதான் முதன்மையான ஒன்றாகும்.

**தேவ்பந்திகளின் ஆட்சேபம்:**

**கேள்வி:** தேவ்பந்திகளின் பார்வையில் வணக்கம் என்பதானது, இறைவனுக்கு மட்டுமே உரித்தான சில செயல்பாடுகளை அவன் அடியார்களிடத்தில் அவர்களின் அடிமைத்தனத்திற்குரிய அடையாளங்களாக்கி வதைதுள்ளான். (பார்க்க: தக்வியத்துல் ஈமான்) எனவே அத்தகைய காரியங்களை இறைவனல்லாதவருக்கு செய்தல் ஷிர்க்கும், சிலை வணக்கத்திற்கு ஒப்பான ஒன்றுமாகும்.

அதனால் அவர்களின் கொள்கையில் யாரையாவது அழைத்தல், எவரிடமாவது அபயம் தேடுதல், இறைவனல்லாதவற்றிடம் உதவி தேடுதல், யாருடைய வீடு அல்லது ஸ்தலத்தை கண்ணியப்படுத்துதல், எவருடைய நினைவையாவது கொண்டாடுதல்இ யாருடைய கப்ரையாவது கூட்டி பெருக்குதல், யாருடைய தரப்பிலாவது தன்னையோ அல்லது தன் பெயரையோ சேர்த்தல், அதாவது அலீபக்ஷ்இ நபி பக்ஷ் என பெயர் வைத்தல், முடிவாக் கூறுவதானால் எவரையாவது கண்ணியப்படுத்துதல் போன்ற இவையனைத்துமே அல்லாஹ் அல்லாதவர்களுக்கு செய்கின்ற வணக்கமாகும். இது ஷிர்க்கென்றும் இறைவனோடு ஒரு சிருஷ்டியை சமப்படுத்துவதாகும்.

இன்னும் இவை "நாங்கள் உன்னையே வணங்குகிறோம்." என்ற வார்த்தைக்கு மாற்றமான ஒன்றாகும். இனி எப்போது நாம் அல்லாஹ்வின் அடிமைகளாகவும், பின்னும் அவனை மட்டுமே வணங்குவோமென்றும் வாக்குறுதி அளித்தோமோ, அதன் பின் அவனை விட்டு விட்டு ஒரு சிருஷ்டிப் பொருளிடம் இவ்வாறு நடந்து கொள்ளல் சந்தேகத்திற்கிடமின்றி ஷிர்க்கேயன்றி வேறென்ன?

**பதில்:** இவர்கள் சொல்வதற்கு பெயர்தான் வணக்கம் என்பதாக நாம் ஏற்றுக் கொள்வோமாயின் எந்தெந்த பொருளை இந்த வஹாபிகளான தேவ்பந்திகள் ஷிர்க் என்று கூறுகின்றனரோஇ அவை மட்டுமல்ல. மாறாக உலகில் யாருமே ஷிர்க்கை விட்டு தப்ப முடியாது. இந்த தேவ்பந்திகளுக்கு ஏன்! உலகிலுள்ள முஸ்லிம்கள் அனைவருமே முஷ்ரிக்காகிப் போய்விடுவர்.

காரணம் கப்ரை கூட்டிப்பெருக்குதல், எவரையாவது அழைத்தல், யாரிடமாவது உதவிதேடுதல், எவருடைய பிறந்த தினத்தையாவது கொண்டாடுதல் போன்ற இவைகளெல்லாம் இறைவனோடு சொந்தமாக்கப்பட்டதல்ல. அன்றி இவை ஒரு மனிதனின் அடிமைத் தனத்தை சுட்டிக் காட்டுகின்ற ஒரு செயலுமல்ல. உதவிதேடுதல் பற்றி இன்ஷாஅல்லாஹ் நாம் இய்யாக நஸ்த்தஈன் என்னும் வசனத்திற்குரிய விரிவுரையில் பேசுவோம்.



www.sufimanzil.org

எனினும் மற்ற பிரச்சனைகளை எடுத்துக் கொள்ளுங்கள். அல்லாஹ் தனது தூதர்களை, "யா அய்யுஹன் னபிய்யு" (ஓ! நபிமார்களே!) என்று அழைக்கிறான். இவ்வாறே முஸ்லிம்களையும்இ காபிர்களையும், மலைகளையும் அழைக்கிறான். அவ்வாறாயின் அல்லாஹ் (மஆதல்லாஹ்) முதல் முஷ்ரிக். இதை குர்ஆன் சொல்வதால் அதை ஓதுதல் ஷிர்க். இது போன்றே நபிகளார் தங்களின் உம்மத்துக்களை அழைத்தனர். உமர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் மதீனாவிலிருந்து நஹாவத்தில் போரிட்டுக்கொண்டிருந்த ஸாரியா ரலியல்லாஹு அன்ஹு அவர்களை அழைத்தனர். இரவு பகல் எந்நேரமும் நாம் ஒருவர் மற்றவரை அழைக்கிறோம். ஒரு பெரிய வேடிக்கை. வஹாபியத் தேவ்பந்தின் தலைவர்களில் ஒருவரான மௌலவி காசிம் நானூத்தவியே நபிகள் நாதரை அழைக்கிறார். எப்படி?

"சங்கைமிகு அஹ்மதே எனக்கு உதவுங்கள்

உம்மையன்றி பலவீனனான எனக்கு வேறு யாருமில்லை"

ஆக ஒருவரை அழைப்பதை ஷிர்க்கென கூறுதல் அறிவீனமாகும். இதுபோன்றே ஒருவரின் நினைவை கொண்டாடுதல் இறைவனோடு சொந்தப்படுத்துகின்ற ஒன்றெனக் கூறமுடியாது. காரணம் இறைவன் எவரது நினைவையும் கொண்டாடுவதில்லை.

அவனது அடியார்களில் எவரும் இறைவனின் நினைவை கொண்டாடுவதுமில்லை. பாருங்கள். ஹஜ் அன்னை ஹாஜிராவின் நினைவாகும். இல்லையெனில் ஓடுவதும்இகுதிப்பதும்இ கல்லெறிவதும் நன்மைக்குரிய செயலாகாது. ஐவேளை தொழுகை கூடசில நபிமார்களின் நினைவாகும். அவர்கள் குறிப்பான நேரங்களில் குறிப்பிட்ட சில ரக்அத்துகளை தொழுததைத்தான் இஸ்லாம் நிலைப்படுத்தி நமக்குத் தந்துள்ளது. இதனால்தான் தொழுகையின் ரக்அத்துகள் ஐந்து வேளைகளிலும் மாறுபட்டுள்ளது. உதாரணமாக, பஜ்ரில் இரண்டும், ளுஹர், அஸரில் நான்கும் என்றுள்ளது.

இவ்வாறே திங்களன்று வைக்கப்படும் நோன்பை நாம் சுன்னத்தென்று கூறுவதற்குரிய காரணம் அந்த நாள் நபிகளாரின் பிறப்பை நினைவூட்டுவதுதான். அவ்வாறின்றி நினைவை கொண்டாடுதல் ஷிர்க் தானென்று சொன்னால் நீங்களே சொல்லுங்கள். ஷிர்க்கிலிருந்து எவராவது தப்ப முடியுமா என்ன?

இதுபோன்றே கப்ரை கூட்டிப் பெருக்குவதும் இறைவனுக்கு உரிய ஒன்றல்ல. ஏனெனில் இறைவன் எவரது கப்ரையும் கூட்டிப் பெருக்குவதில்லை. இவ்வாறே அவனுக்கு எந்தக் கப்ரும் கிடையாது. இதில் எவரது கப்ரை கூட்டிப் பெருக்கப்படுகிறதோ, அது அடிமைத்தனத்துக்கு அடையாளமுமல்ல. இல்லையில்லை. கூட்டிப்பெருக்குவது அடிமைத்தனத்தை வெளிப்படுத்துவதற்குரிய

செயல்தான் என்று சொல்லப்பட்டால் ஒவ்வொரு வஹாபிய தேவ்பந்திகளும் தமது அக்குளில் ஒரு விளக்குமாற்றை வைத்துக் கொண்டிருப்பார்கள். ஏனெனில் அடிமைத்தனத்தை வெளிப்படுத்துகின்ற பொருள் அடியானிடம் இருக்க வேண்டுமல்லவா!

அடுத்து ஒரு நினைவை கொண்டாடுவதற்கு குறிப்பாக ஒரு தினத்தை நிர்ணயித்தல். இதுவும் ஷிர்க்கல்ல. ஏனெனில் ஹஜ்ஜுக்காக ஒரு தினத்தை நிர்ணயம் செய்தல், தொழுகைக்காக நேரத்தை நிர்ணயித்தல், நோன்பு நோற்க மாதத்தை நிர்ணயித்தல், திருமணம் போன்ற வைபவங்களுக்காக நாளை நிர்ணயித்தல், தேவ்பந்த் மத்ரஸாவின் காலாண்டு, அரையாண்டு, முழுஆண்டு பரீட்சைக்காக ஒரு குறிப்பிட்ட தேதியை நிர்ணயித்தல், ஆக எல்லாவற்றிற்கும் ஒரு குறிப்பிட்ட நாள், நேரம், காலம் போன்றவைகளை நிர்ணயிக்கப்படுகிறது. இப்போது சொல்லுங்கள். ஷிர்க்கை விட்டு தப்பியவர்கள் யார்?

இனி அப்துன் நபீ போன்ற பெயர்களை வைப்பதும் ஷிர்க்கல்ல. ஏனெனில் இங்கே அப்த் என்பதற்கு அடிமை என்ற கருத்தல்ல. மாறாக ஊழியன் என்பதாகும். இதுகுறித்து திருக்குர்ஆனில், இறைவன் நபிகளாருக்கு கட்டளையிடுகிறான் قل يعبادي (நபியே!) சொல்லுங்கள். ஓ! என் அடிமைகளே! என அழைக்கச் சொல்கிறான். இவ்வாறே துர்ருல் முக்தார் என்னும் நூலின் ஆசிரியரது ஷைகின் பெயர் அப்துன் நபீ என்பதாகும். அன்றி அப்துன் நபி என பெயர் வைத்ததல் ஷிர்க் என்று சொல்லப்பட்டால் ஷிர்க்கை விட்டு யாரால் தப்ப முடியும்? ஆக வணக்கம் என்ற பதத்திற்கு இவர்கள் தரும் அர்த்தம் முழுக்க முழுக்க அர்த்தமற்ற ஒன்றாகும். இனி வணக்கம் என்பதன் அர்த்தமானதுஇ ஒரு அடியான் தனது பணிவின் கடைசி எல்லையை வெளிப்படுத்திக் காட்டுவதாகும். இதில் பணிவின் இறுதி எல்லை எப்போது வெளிப்படுமெனில், பணிபவன் தன்னை அவனது அடியானென்றும், பணியப்பட்டவனை தனது சிருஷ்டிகர்த்தா என்றோ அல்லது கிருஷ்டிகர்த்தாவின் கூட்டாளி என்றோ வெளிப்படுத்தும் போதுதான் வணக்கமென்ற பதமே பேசப்படும்.

**கேள்வி:** மக்காவின் முஷ்ரிகீன்கள் வணங்கி வந்த விக்ரஹங்களை அவர்கள் இறைவனென்று நம்பிக்கை வைக்கவில்லை. மாறாக அவைகளை ஒரு அடியான் தன்னிறைவனை நெருங்குவதற்குரிய காரணப் பொருளாகத்தான் நம்பினர். எனவே இதன் மூலம் எதையேனும் வஸீலாவாக்குவதும், அதை அழைத்து உதவிதேடுவதும் வணக்கமென்று தெரியவருவதால் தான் அவர்களை முஷ்ரிக்குகள் என்று சொல்லப்படுகிறது.

**பதில்:** இதற்கு இருவகை பதில்கள் உள்ளன. ஒன்று: அந்த மக்கத்து முஷ்ரிக்கீன்கள் அவ்விக்கிரஹங்களை வஸீலாவாக மட்டும் எடுத்துக் கொண்டது ஷிர்க்கல்ல. மாறாக வஸீலாவாக நம்பி அவற்றை வணங்கியதுதான் ஷிர்க்காகும்.

திருக்குர்ஆனின் குறிப்பிட்ட இவ்வசனத்தில்,...

مَا نَعْبُدُهُمْ اِلَّا لِيُقَرِّبُوْنَآ اِلَى اللّٰهِ زُلْفٰى

**“நாங்கள் அல்லாஹ்வை நெருங்குவதற்காகவே அன்றி அவைகளை வணங்கவில்லை“** என்று கூறுகின்றனர்.

இதில் அவர்களின் நம்பிக்கை தாங்கள் வணங்கும் சிலைகளை சிறிய இறைவனென்றும், அவற்றைக்கொண்டே இறைவன் தனது காரியங்களை நடத்துகிறானென்றும், பின்னும் அச்சிலைகளின் சொல்லுக்கு இறைவன் கட்டுப்பட்டு நடக்கிறான் என்றும், அச்சிலைகள் இறைவனோடு எத்தகைய சம்பந்தம் கொண்டிருக்கின்றன எனில், எவ்வாறு ஒரு அரசனுக்கு மந்திரி இருக்கிறானோ அதுபோன்று அச்சிலைகள் இருக்கின்றனென்றும் அவைகளின் வெறுப்பைக் கொண்டு இறைவனது வேலைகள் தடைப்பட்டு விடுமென்றும், இன்னும் அச்சிலைகளுக்குள் இறைத்தன்மை எந்த அளவுக்கு அமைந்துள்ளனவெனில், ரோஜாப்பூவில் அதன் நறுமணம் எப்படி உள்ளதோ அதுபோன்று இறைவனுடன் அச்சிலைகள் நெருக்கம் கொண்டுள்ளன என்றும் நம்புகின்றனர்.

அன்றி அவர்கள், இறைவன் பெரும் பெரும் காரியங்களை மட்டும்தான் செய்கிறானென்றும்இ சிறிய வேலைகளையெல்லாம் அச்சிலைகளே செய்துவருவதாகவும், நம்பி அச்சிலைகளுக்கு வழிப்பட்டு வணங்கியும் வந்தனர். அதனால்தான் அச்சிலைகளை ஆலிஹத்தன் என்றும் ஷுரக்கா என்றும் கூறுகின்றனர்.

மேலும் அவர்கள் இன்று இந்திய நாட்டில் இந்துக்கள் வணங்கி வரும் காளி, கங்கா, மஹாதேவ், பவானி போன்ற சிலைகளின் மீது வைக்கப்பட்டுள்ள நம்பிக்கையபை போன்று தான் மக்காவின் முஷ்ரிக்கீன்கள் நம்பிக்கை கொண்டிருந்தனர்.

அல்ஹம்துலில்லாஹ். ஆனால் முஸ்லிம்களில் எவருமே நபிமார்களையும், வலிமார்களையும் மேற்கண்ட விக்ரஹ ஆராதனைக்காரர்கள் போன்று நம்புவதில்லை. மாறாக நபிமார்களையும், வலிமார்களையும் இறைவனது அடியார்களென்று தான் நம்புகின்றனர். இதுபற்றிய முழு விபரங்களை நமது “ஜாஅல் ஹக்“ என்னும் நூலில் காண்க.

அடுத்து இரண்டாவது பதிலானது, மக்காவின் முஷ்ரிகீன்கள் அச்சிலைகளை வஸீலாவாக்கியதை ஷிர்க்கென்று ஒப்புக் கொண்டாலும் இப்போது நாம் சொல்வோம். அவர்கள் சிலைகளை வஸீலாவாக்கியது குப்ராகும். ஆனால் நபிமார்களை, இறைவனது நல்லடியார்களை வஸீலாவாக்குதல் அவர்களை ஷபாஅத் செய்பவர்களாக நம்புதல் ஷிர்க்காகாது. அவ்வாறு நம்பிக்கை கொண்டு அவர்களுக்கு வழிப்படுத்தல் இஸ்லாமிய மார்க்கத்திற்கு முரணான ஒன்றுமல்ல.

ஏனெனில் சிலைகளை இறைவன் தன்னை சமீபிப்பதற்குரிய வஸீலாவாக ஆக்கவில்லை. மாறாக அவர்கள் தங்களின் விருப்பத்திற்கொப்ப ஒரு பொருளை வஸீலாவாக ஆக்கிக் கொண்டனர். இது குப்ராகும். அதேநேரம் நபிமார்களையும், நல்லடியார்களையும் இறைவனே வஸீலாவாக அனுப்பி வைத்திருக்கிறானாகையால் இது இறைவனின் ஏற்பாடாகும். எனவே அவர்களை வஸீலாவாக்குவதுதான் உண்மையான ஈமானாகும்.

எதைப் போலெனில், அரசனால் ஏற்படுத்திக் கொடுக்கப்படும் பிரதிநிதிகளை அவனது பிரஜைகள் தங்களின் வஸீலாவாகஇ உதவியாக எண்ணி நம்பிக்கை கொள்ள வேண்டும். இது அரசனுக்குச் செய்யும் துரோகமல்ல. மாறாக இதுதான் உண்மையான வழிப்படுதலாகும்.

அவ்வாறின்றி பிரஜைகள் தங்களின் விருப்பத்திற்கொப்ப ஒரு பிரதிநிதியை ஏற்படுத்திக் கொண்டு அவரை தங்களின் வஸீலாவாகஇ உதவியாளராக நம்புவார்களேயாயின் இதைத் தான் அரசனுக்கு செய்யும் துரோகமென்று சொல்லப்படும். ஏனெனில் அரசப் பிரதிநிதிகளை விட்டு விட்டு பிரஜைகள் தம் இஷ்டத்திற்கு ஒருவரைத் தேர்ந்தெடுத்துக் கொண்டதுதான்.

பாருங்கள். கஃபத்துல்லாஹ்வை நோக்கி அனைவரும் ஸுஜூது செய்கின்றனர். ஆனால் எவராவது தமது விருப்பப்படி ஒரு கஃபாவை உருவாக்கினால், அதாவது சிந்திகளில் சிலர் உருவாக்கியதைப் போன்று ஏற்படுத்தி அதை நோக்கி ஸுஜூது செய்தால் சந்தேகத்திற்கிடமின்றி அவர் காஃபிரே.

வித்தியாசம் என்னவெனில் அவ்விருவருமே இறைவனுக்குத்தான் ஸுஜூது செய்கின்றனர். ஆனால் தமது விருப்பத்திற்கு தகுந்தவாறு ஒரு கஃபாவை உருவாக்கி ஸுஜூது செய்தவர் காபிரானார். ஏனெனில் இவர்களின் கஃபாவை இறைவனா ஏற்படுத்தினான்? இதுபற்றி எண்ணற்ற உதாரணங்களை நாம் எடுத்துக் காட்ட முடியும்.

இருப்பினும் வணக்கத்தில், வணங்கப்படும் இறைவனது மகத்துவம் வெளிப்படும் வகையில் வழிப்படுதல் அமைந்திருக்க வேண்டும். பின்னும் இஸ்லாத்திற்கு முன்னிருந்த மார்க்கத்தில் வாழ்ந்த பெரியோர்களுக்கு கண்ணியமளிக்கும் வகையில் அவர்களுக்கு கண்ணியத்திற்குரிய ஸுஜூது செய்யப்பட்டுள்ளது. மலக்குகள் ஹஜ்ரத் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கும், யூசுப் நபியின் சகோதரர்கள் யூசுப் அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கும் ஸுஜூது செய்தனர். அதே நேரம் இறைவனுக்கும் ஸுஜூது செய்தனர். என்ன வித்தியாசம்? இறைவனுக்கு செய்யப்பட்ட ஸுஜூது வணக்கமாக இருந்தது. நபிமார்களுக்கு செய்யப்பட்ட ஸுஜூது கண்ணியத்தை மட்டுமே கருதியதாக இருந்தது. வித்தியாசம் நிய்யத் மட்டும்தான். அதாவது இறைவனுக்கு ஸுஜூது செய்தபோது அவனை தங்களின் சிருஷ்டிகர்த்தாவாக எண்ணி ஸுஜூது செய்தனர். அதேநேரம் நபிமார்களுக்கு

ஸுஜூது செய்தபோது அவர்களை பெரியோர்கள் என்றெண்ணி கண்ணியப்படுத்துவதற்காக ஸுஜூது செய்தனர்.

**ஒரு நிகழ்ச்சி:**

ஒரு பெரியார் இப்னு ஸவூத் நஜ்தியின் ஆட்சிக் காலத்தில் மதீனாவுக்கு சென்றார். அங்கே நபிகள் நாதரின் புனித ரௌலாவிற்கு முன் தமது கைகளை கட்டியவாறு நின்றிருந்தார். அங்கிருந்த நஜ்திய போலீசார் அவரை அணுகி, நீ தொழுகிறாய். ஆதலால் நீ முஷ்ரிக்காகிப் போய்விட்டாயென்று அப்போது அவரிடம் சொல்ல, அதற்கவர், எப்படி? என்று திருப்பிக் கேட்க, போலீஸார் இறைவனல்லாத எவரது முன்பும் தொழுகையில் நிற்பதைப் போன்று கைகளை கட்டிக் கொண்டு நிற்பது வணக்கமாகும் என்று கூற, அப்பெரியவர் சரி, நான் நபிகளார் முன் எப்படி நிற்க வேண்டும் என்று திருப்பிக் கேட்க, கைகளை கட்டாமல் விட்டு விட்டு நில்லுங்கள் என்றனர் போலீசார்.

அதற்கந்த பெரியவர், கைகளை விட்டுவிட்டு நிற்பது மாலிகி மத்ஹபில் தொழுகைதான். கைகளை விட்டு விட்டாலும் நான் வணக்கத்தை விட்டு நீங்கவில்லையே! தொப்புளுக்கு கீழே கட்டினால் ஹனபிகளின் வணக்கமாகிவிடும். மேலே கட்டினால் ஷாபிகளின் வணக்கமாகி விடும். கைகளை கட்டாமல் தொங்கும்படி விட்டுவிட்டால் மாலிகிகளின் வணக்கமாகி விடும். இப்போது சொல்லுங்கள் நான் எப்படி நிற்கவேண்டும் என்று கேட்க, போலீசார் பதில் சொல்லத் தெரியாமல் விழித்தனர். அதைக் கண்ட அந்தப் பெரியவர் எந்த செயலும் வணக்கமாக வேண்டுமாயின் அது நிய்யத்தைக் கொண்டுதான் அமையுமே அன்றி செயலைக் கொண்டல்ல என்று கூறினார்.

وَاِيَّاكَ نَسْتَعِيْنُ

**இன்னும் உன்னிடமே உதவி தேடுகிறோம்.**

இவ்வசனத்திற்கும் இதற்கு முந்தைய வசனங்களுக்குமிடையே சில தொடர்புகள் உள்ளன. இந்த சூரத்துல் பாத்திஹாவில் சில தலைப்புகள் உண்டு. அவை: ஒன்று: இறைவனது புகழ். இரண்டு: அவனது வணக்கத்தின் வெளிப்பாடு. மூன்று: அவனிடம் பிரார்த்தனை மூலம் உதவி தேடுதல். இதில் இரு தலைப்புக்குரிய விஷயங்கள் முன்பே பேசப்பட்டு இப்போது மூன்றாவது தலைப்புக்குரிய விஷயம் துவங்குகிறது.

எனினும் உதவி தேடுவதற்கு ஒரு வஸீலா அவசியமாவதால் முதலில் வணக்கதை குறித்து பேசப்பட்டு அதன் பின்னர் உதவி தேடுவதைப் பற்றி வசனம் துவங்குகிறது. அதாவது யா அல்லாஹ்! நாங்கள் உன்னையே வணங்குகிறோம். அவ்வணக்கத்தை வஸீலாவாக்கி அதன் மூலம் உன்னிடமே உதவி தேடுகிறோம் என்பது இதன் விளக்கமாகும். (தப்ஸீர் அஜீஸி)

இன்னும் இதனால்தான் கஷ்டமான நேரங்களில் தொழுதும்இ தான தர்மம் செய்தும் இன்ன பிற நல்ல அமல்கள் செய்தும் உதவி தேடப்படுகிறது. காரணம் வணக்கங்கள் தமது பிரார்த்தனைக்கு வஸீலாவாக அமைய வேண்டுமென்பதற்காக.

**முக்கிய குறிப்பு:** மேற்கண்ட விஷயங்களைக் கொண்டு நமக்கு கிடைக்கும் விளக்கம் யாதெனில் ஒவ்வோர் துஆ மற்றும் உதவி தேடுவதில் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை வஸீலாவாக்கிக் கொள்வது கண்டிப்பாக அவசியம். ஏனெனில் நபிகளாரின் சன்னிதானத்தில் ஆஜராவதும் கூட இறை வணக்கமாதலால் எல்லா வணக்கங்களுமே வஸீலாவாகும் என்பதால் அண்ணல் நபியை வஸீலாவாக்குதல் அவசியமாகும். இதைத்தான் இறைவனும் திருக்குர்ஆனில்,...

وَابْتَغُوْآ اِلَيْهِ الْوَسِيْلَةَ

**இன்னும் அவனளவில் வஸீலாவைத் தேடுங்கள்** என்று கூறுகிறான்.

அடுத்து "நாங்கள் உன்னையே வணங்குகிறோம்" என முதலில் சொல்லப்பட்டது. இப்போது அவ்வணக்கத்தை நிறைவாக்கிட உன்னிடமே உதவி தேடுகிறோம் என்று கூறப்படுகிறது. அதாவது துவக்கம் செய்தல் மட்டும்தான் எங்களின் வேலை. அதை நிறைவாக்கித் தருவது உனது வேலை என்றும் இவ்வசனம் கூறுகிறது.

மற்றொன்று: வணங்குவதற்கு வெளிரங்கத்தில் சில விதிமுறைகள் உள்ளன. அதாவது தொழுகைக்கு ஒழு விதியாக்கப்பட்டிருப்பதைப் போல. இது போன்றே அந்தரங்கத்திலும் வணக்கத்திற்கு சில விதி முறைகள் உண்டு. அவற்றை பேணாதவரை வணக்கம் வணக்கமாவதில்லை. அதாவது உள்ளம் இறைவன் முன் ஆஜராயிருத்தல்இ பெருமைஇ தன்னை மதித்தல் போன்றவற்றை விட்டும் உள்ளம் தூய்மையாயிருத்தல் இவை நீங்காத வரை தொழுகை நிறைவேறாது.

இதில் வெளிரங்கமான விதிமுறையாகிய ஒழு போன்றவை மனிதனின் கட்டுப்பாட்டில் இருப்பவை. ஆனால் உள்ரங்கமான மனதை இறைவன் முன் ஆஜர்படுத்தல், பெருமை, தன்னை மதித்தல் போன்றவற்றை மனதை விட்டும் அகற்றுதல் போன்றவை மனிதனின் கட்டுப்பாட்டில் இல்லாதவை. ஏனெனில் மனதை ஆஜர்படுத்துவதும் பெருமையை நீக்குவதும் மனிதக் கட்டுப்பாட்டில் இல்லாதவைகளாகும்.

இதனால்தான் முதலில் "உன்னையே வணங்குகிறோம்" என்று சொன்னதில் மனிதன் வெளிரங்கமான விதிமுறைகளுக்கு கட்டுப்பட்டு நாங்கள் உன்னை வணங்குகிறோம் என்று கூறிவிட்டு, அந்தரங்கமான விதிமுறைகளுக்கு கட்டுப்படுதல் மனிதர்களாகிய

எங்களின் சக்திக்கு மீறிய ஒன்றாதலால், அவ்விதி முறைகளை செயல்படுத்த "உன்னிடமே உதவி தேடுகிறோம்" எனக் கூறப்பட்டது.

இன்னொன்று: முதலில் வணக்கத்தை குறித்து பேசப்பட்டது. இப்போது அவ்வணக்கம் எவ்விதக் குறைவுமின்றி நிறைவேற்றப்பட்ட ஒன்றாக இறைவன் வரை சென்று சேர வேண்டுமாயின், அத்துடன் அவ்வணக்கம் இறைவனால் அங்கீகரிக்கப்பட்ட ஒன்றாக ஆக வேண்டுமாயின் அது இறைவனது பேரருளைக் கொண்டு மட்டும்தான் சாத்தியம்.

காரணம் வணக்கத்தினிடையே ஏற்படும் சில நிலைகள் அவ்வணக்கத்தை முற்றிலும் அழித்து நாசம் செய்து விடுகின்றன. அல்லாஹ் காப்பானாக. ஆதலால் இறைவா! நாங்கள் உன்னை வணங்கி விட்டோம். இனி அது பாதுகாப்பாக உனது சன்னிதானம் வரை வந்து சேர உன்னிடம் தான் உதவி தேடுகிறோம் என்பதும் இதன் கருத்தாகும்.

வேறொன்று: வணக்கத்தை தடை செய்யும் சில பொருட்களுண்டு. அவை நப்ஸ், ஷைத்தான், உலக எண்ணம், கெட்ட சகவாசம் போன்றவைகளாகும். இவ்வாறே வணங்கும் சில பொருட்களுமுண்டு. அவை: ஆன்மாஇ ஈமான், குர்ஆன் போன்றவைகளாகும். இதில் வணங்கும்போது மேற்கண்ட இருவகை பொருட்களும் ஒன்றோடொன்று மோதுகின்றன.

எனவே வணக்கம் புரிபவர், இறைவா! நான் உன்னை வணங்குகிறேன். அவ்வணக்கத்தில், எனக்குள் இருக்கும் இரு வகை பொருட்களுக்குமிடையே நடக்கும் மோதலில் ரஹ்மானிய்யாவாகிய படைக்கு ஷைத்தானிய்யாவான படையின் மீது வெற்றியை அருள்வாயாக. அதற்காக உன்னிடமே உதவி தேடுகிறேன் என்பதும் இவ்வசனத்தின் கருத்தாகும்.

**உலமாக்களின் தப்ஸீர்:**

உலமாக்கள் கூறுகின்றனர்: இவ்வசனத்தில் "உதவி தேடுதல்" என்பதன் கருத்து, வணக்கத்தில் மட்டும் தேடப்படும் உதவியா? அல்லது இம்மை மறுமை சம்பந்தமான எல்லா காரியங்களிலும் தேடப்படும் உதவியா எனில்இ இரண்டாவது வகை உதவிதான விசேசமான ஒன்றாகும். எனவேதான் ஒரு அடியான், இறைவா! உன்னை மட்டுமே வணங்குவதைப் போல உன்னிடம்தான் உதவியும் தேடுகிறேன். காரணம் நான் முஷ்ரிக் அல்ல. அதாவது சில காரியங்களில் மட்டும் உன்னிடம் உதவி தேடுவதும்இ வேறு சிலவற்றில் உன்னல்லாத உனக்கு அன்னியமானவர்களிடம் உதவி தேடுகிறவனல்ல. மாறாக எல்லா காரியங்களிலும் உன்னிடம் தான் உதவி தேடுகிறேன். உனது உதவிதான் உண்மையான உதவி என்றும் கூறுகிறான்.

இதில் அடியானுக்கு படிப்பினை கற்றுத் தரப்படுகிறது. அது, அவன் அல்லாஹ் ஒருவனை மட்டுமே ஹகீகிய்யான உதவியாளர் என்று எண்ண வேண்டும். ஒருவேளை அடியார்களில் எவரேனும் உதவி செய்தாலும் கூட அதுவும் அல்லாஹ்வின் உதவி என்றே நம்ப வேண்டும். காரணம் படைப்புகள் அனைத்தும் இறைவனின் பணியாளர்களாகவும், ஏவலாட்களாகவும் இருப்பதால் இவ்வாறு நம்புவதுதான் ஈமானாகும். சந்தேகத்திற்கிடமின்றி இதை இப்படி புரிந்து கொள்ளுங்கள். மின்சாரம் வெளிச்சம் தருகிறது. காற்றாடியை சுற்றுகிறது. புகை வண்டியை இழுத்துச் செல்கிறது. இவையனைத்தையும் மின்சாரக் கம்பி செய்யவில்லை. மாறாக மின்சாரம் செலுத்தப்படும் அதன் பவர் ஹவுஸின் வேலைகளாகும்.

இந்நிலையில் எவரேனும் நமக்கு ஏதேனும் உதவி செய்கிறாரெனில் அது அவரது சக்தியைக் கொண்டல்ல. பின்னும் அவரது மனதில் இரக்கம் பிறக்கவில்லையெனில் அவர் நமக்கு எவ்வாறு உதவி செய்வார்? ஆதலால் அந்த இரக்கமும், சக்தியும் இறைவனின் தரப்பிலிருந்து அவருக்கு வழங்கப்படுவதால் ஹகீகிய்யான உதவியாளன் அல்லாஹ் ஒருவனே. எனவே அல்லாஹ்வை விட்டு அவனல்லாதோரிடம் நம்பிக்கை வைத்தல் மாபெரும் அறிவீனமாகும்.

**சூபியாக்களின் தப்ஸீர்:**

ஞானவான்கள் கூறுகின்றனர்: மனிதர்களுக்கு சில நிலைகள் ஏற்படுகின்றன. அந்நிலையை மனிதன் அடைகின்றபோது வெளிப்படையான காரணங்களை விட்டும் முகத்தை திருப்பிக் கொள்கிறான். சிலபோது இறைவனிடம் கூட தனது தேவைகளைக் கேட்பதில்லை. காரணம் அவனது துஆ அவனுக்கும் இறைவனுக்குமிடையே ஒரு திரையாகி விடக் கூடாது என்பதற்காக.

பாருங்கள். ஹஜ்ரத் இப்றாஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் நம்ரூத் வார்த்த நெருப்பில் தூக்கி எறியப்பட்ட போது ஜிப்ரயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள், உங்களுக்கு உதவி தேவையா? என இப்றாஹிம் நபியிடம் கேட்க, தேவையில்லை என்றனர். அவ்வாறாயின், இறைவனிடமாவது கேளுங்களென சொல்ல அதற்கு இப்றாஹிம் நபி அவர்கள்,...

حسبي من سوالي علمه بحالي

**"எனது நிலையை அவன் அறிந்திருக்கிறான். அதுபோதும். நான் ஏன் கேட்க வேண்டும்?"** என்று கூறினர்.

சுப்ஹானல்லாஹ். இது கேட்பதை விட்டும் நீங்கி விட்ட ஓர் நிலை. இதைத்தான் "உன்னிடமே உதவி தேடுகிறோம்" என்னும் வசனம் சைக்கினை செய்கிறது. இந்த

நிலை வலிமார்களில் எல்லா நேரங்களிலும்இ சூழ்நிலையிலும் நிகழ்வதில்லை என்பதை புரிந்து கொள்ளுங்கள்.

இனி அடியான் இறைவனால் சோதிக்கப்படும் போது அவன் இறைவனிடம் முறையீடு செய்யாமல் இறைவனது சோதனையை மனமுவந்து ஏற்று சகிப்புத்தன்மையை வெளிக் காட்டுவதும்இ விதிக்கு தன்னை ஒப்புக் கொடுத்து விடுவதும் தான் உண்மையான வணக்கமாகும்.

இதனால்தான் இமாம் ஹுஸைன் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கர்பலாவில் நிறுத்தப்பட்ட போது அவர்களை அச் சோதனையில் இருந்து நீக்குமாறு இறைவனிடம் இமாமோ அல்லது இமாமுக்காக வேறு யாருமோ துஆ செய்யவில்லை.

பின்னும் ஒரு அடியானுக்கு தனது அடிமைத்தனத்தை வெளிப்படுத்தும் நிலை வரும்போது தனக்கு வேண்டியதை அல்லாஹ்விடமே கேட்க வேண்டும். எதுவரையெனில், செருப்பின் வார் அறுந்து போனாலும் அதையும் அல்லாஹ்விடம்தான் கேட்க வேண்டும். ஏனெனில் அடிமைக்குரிய பணி கேட்பதுதான்.

தப்ஸீர் கபீர் மற்றும் ரூஹுல் பயானில், இப்றாஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள், "இய்யாக நஸ்தஈன்" என்னும் வசனத்திற்கொப்ப செயல்பட்டபோது அவர்கள் மீது நெருப்புக் கூட குளிர்ந்து போய் விட்டது. இவ்வாறே ஒரு முஸ்லிமும் அமல் செய்வாராயின் அவர் மீது நரகின் நெருப்பு கூட அவருக்கு எவ்வித கஷ்டத்தையும் தராது. மாறாக விசுவாசிகள் ஸிராத்தென்னும் பாலத்தை கடக்கும்போது நரகம் அவர்களை நோக்கிஇ நீங்கள் விரைந்து செல்லுங்கள். ஏனெனில் உங்களது ஈமானின் பேரொளி என்னை அணைத்து விடும் என்று கூறும். ஒரு நேரம் சுவனத்திலுள்ள முஸ்லிம்கள் பாவிகளான முஸ்லிம்களை நரகை விட்டு வெளியேற்ற செல்வர். அப்போது நரக நெருப்பு அவர்களை ஒன்றும் செய்யாது.

**தேவ்பந்திகளின் ஆட்சேபம்:**

**கேள்வி:** நீங்கள் குர்ஆனுடைய இந்த வசனத்தின் மூலம் "நாங்கள் உன்னிடமே உதவி தேடுகிறோம்" என்று வாக்குறுதி செய்தபின் நபிமார்களிடமும், வலிமார்களிடமும் ஏன் உதவி தேடுகிறீர்கள்? எனவே இது ஷிர்க்கல்லவா?

**பதில்:** நபிமார்களிடமும்இ வலிமார்களிடமும் தேடப்படும் உதவி உண்மையில் இறைவனிடம் தேடப்படும் உதவிதான். ஏனெனில் உதவி தேடுதல் என்பது இரு வகைப்படும். ஒன்று: நேரடியாக தேடுதல். மற்றொன்று: ஒரு பொருளைக் கொண்டு தேடுதல். இறைவனது நல்லடியார்ளின் உதவி இறைவனின் பைஜாகிய அனுக்கிரஹத்தை கொண்டு கிடைக்கின்ற உதவியாகும்.

திருக்குர்ஆனில் இறைவனல்லாதவர்களிடம் உதவி தேடவேண்டுமென இறைவனே கட்டளையிடுகிறான். அதாவது:

يَاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوا اسْتَعِيْنُوْا بِالصَّبْرِ وَالصَّلٰوةِ

**விசுவாசிகளே! பொறுமையை கொண்டும் தொழுகையைக் கொண்டும் உதவி தேடுங்கள்** என்று கூறப்பட்டுள்ளது. இதில் பொறுமையும், தொழுகையும் இறைவனல்லாதவையாகும். அடுத்து மற்றோரிடத்தில்,...

اِنْ تَنْصُرُوا اللّٰهَ يَنْصُرْكُمْ

**நீங்கள் அல்லாஹ்வு(தீனு)க்கு உதவி செய்தால் அல்லாஹ் உங்களுக்கு உதவி செய்வான்.** இறைவன் தேவையற்றவனாக இருந்தும் இவ்வசனத்தில் தன்னடியார்களிடம் உதவி தேடுகிறான். அவ்வாறாயின் தேவையுடைய அடியார்களான நாம் நல்லடியார்களிடம் உதவி தேடுவதால் என்ன தவறு நேர்ந்து விடும்? இன்னும் சிக்கந்தர் துல்கர்ணைன் அவர்களின் ஒரு வார்த்தையை குர்ஆன் இவ்வாறு கூறுகிறது:

فَاَعِيْنُوْنِىْ بِقُوَّةٍ

**உங்களில் பலத்தைக் கொண்டு எனக்கு உதவி செய்யுங்கள்** என்றும்,...

ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களின் ஒரு வார்த்தையை குர்ஆன் இப்படிக் கூறுகின்றது,...

مَنْ اَنْصَارِيْٓ اِلَى اللّٰهِ

**இறைவன் புறத்திலிருந்து உங்களில் எனக்கு உதவி செய்பவர் யார்?** என்றும்,

وَتَعَاوَنُوْا عَلَى الْبِرِّ وَالتَّقْوٰى

இன்னும் நீங்கள் ஒருவர் மற்றவருக்கு நன்மையைக் கொண்டும், பயபக்தியைக் கொண்டும் உதவி செய்யுங்கள் என்றும் குர்ஆன் கட்டளையிடுகின்றது. சுருங்கக் கூறின் குர்ஆன் பல இடங்களில் இறைவனல்லாதவற்றிடம் உதவி கோருமாறு கட்டளையிடுகிறது. நபித் தோழர்களில் ஒரு கூட்டத்தாருக்கு "அன்ஸார்" என்பது பெயர். இதற்கு "உதவி செய்வோர்" என்பதுதான் அர்த்தம். இனி இறைவனல்லாதவர்களிடம் உதவி தேடுதல் ஷிர்க்கெனில் இந்தப் பெயரே தவறாகும். ஆனால் இப்பெயரை நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி

வஸல்லம் அவர்கள் நபித்தோழர்களில் ஒரு கூட்டத்திற்கு சூட்டினர். இன்னும் திருக்குர்ஆனும் அதே பெயரை கொண்டுதான் அவர்களைப் பற்றி பேசுகிறது.

கிறிஸ்துவர்களை குர்ஆன் "நஸாரா" என்னும் பெயரில் தான் பேசுகின்றது. இதற்கும் "உதவுவோர்" என்றுதான் அர்த்தம். பின்னும் ஹதீஸ்களுடைய கிரந்தங்களில் இருந்தும் சட்ட நூல்களிலிருந்தும் இறைவனல்லாதவர்களிடம் உதவி தேடுவது பற்றிய ஆதாரங்களை சேகரித்தோமாயின் அதுவே ஒரு தனிநூலாக உருவெடுத்து விடும். இதுபற்றி அதிகமான விபரம் அறிய விரும்புவோர் "ஜாஅல்ஹக்" என்னும் நூலை பார்வையிடுவார்களாக.

இன்னும் இந்த தேவ்பந்திகளே தமது ஆயிரக்கணக்கான துன்பங்களிலிருந்து விடுதலை பெற காவல்துறை, வழக்கு மன்றம், தபால் தந்தி அலுவலகம் போன்றவற்றிடம் உதவி தேடி ஓடிக் கொண்டிருக்கின்றனர். அதனால் அவர்களில் ஒருவர் கூட முஸ்லிம்கள் இல்லையென்று சொல்லலாமா? அடுத்து அவர்களது மத்ரஸாவும் முஸ்லிம்களின் உதவியால்தான் இயங்கி வருகிறது.

ஆக மனிதன் பிறந்ததிலிருந்து மண்ணுக்கு போகிறவரை இறைவனல்லாதவர்களின் உதவியை கொண்டுதான் வாழ்கிறான். மருத்துவச்சியின் உதவியைக் கொண்டுதான் பிறந்தான். பெற்றோரின் உதவியைக் கொண்டுதான் பரிபாலிக்கப்பட்டான். டாக்டரின் உதவியைக் கொண்டுதான் சுகம் பெற்றான். செல்வந்தர்களின் உதவியைக் கொண்டுதான் வாழ்க்கையை நடத்தினான். ஆசிரியர், ஷைகின் உதவியைக் கொண்டுதான் முஃமின் ஆனான். பந்துக்களின் உதவியைக் கொண்டுதான் இறப்பின்போது கலிமா சொன்னான். முஸ்லிம் சகோதரர்களின் உதவியைக் கொண்டுதான் இறந்த பின் கபனும், குளிப்பும் இவனுக்கு கிடைத்தது. பின்பு அதே முஸ்லிம்களின் உதவியைக் கொண்டுதான் கப்ருக்கு சென்றபின் இவனுக்கு நன்மையும் கிடைத்தது.

இப்போது யார் எந்த வாயைக் கொண்டு இறைவனல்லாதவற்றிடம் உதவி தேடுவது ஷிர்க் என்று சொல்ல முடியும்? இனி எந்த இடத்தில் "இறைவனிடம்" உதவி தேடப்பட்டதோ அதனை ஹகீகி என்றும், இனி எவரைக் கொண்டாவது உதவி தேடப்பட்டால் அதனை மஜாஸீ என்றும் கூறப்படுகிறது. எனவே நாம் இதுபற்றி குர்ஆன் ஹதீஸ் ஆதாரங்களை வரிசைப்படுத்தி விட்டோம். அடுத்து குர்ஆனை விளங்க வேண்டுமானால் ஈமானுடைய வெளிச்சத்தைக் கொண்டுதான் விளங்க முடியும். நஜ்துக் கொள்கை என்னும் கண்ணாடியை மாட்டிக்கொண்டிருக்கும் வரை குர்ஆன் எப்படி விளங்கும்?

**கேள்வி:** உயிரோடிருப்பவரிடம் உதவி தேடுவது கூடும். ஆனால் இறந்தோரிடம் உதவி தேடுவதுதான் மிகக் கடுமையான ஷிர்க்காகும்?

**பதில்:** இவ்வசனத்தில் உயிரோடிருப்பவர் அல்லது இறந்தவர் என்று எந்த வித்தியாசமும் குறிக்கப்படவில்லை. எதைப்போல் எனில், "இய்யாக நஃபுது" என்பதில் வணக்கத்தை அல்லாஹ்வுக்கு மட்டுமே சொந்தமாக்கப்பட்டுள்ளது. அதாவது இறைவனையன்றி உயிரோடிருப்பவரையோ அல்லது இறந்தவரையோ வணங்குதல் கூடாதென்றுதான் சொல்லப்பட்டுள்ளது. இதேபோன்று தான் இய்யாக நஸ்தஈன் என்பதுமாகும்.

பதில்2: உதவி தேடுதல் என்பது இருவகைப் படும். ஒன்று: சரீரத்தைக் கொண்டது. மற்றொன்று: ஆன்மாவைக் கொண்டதாகும்.

உதாரணமாக, தண்ணீர் தாருங்கள். உணவை சமையுங்கள் என்பன போன்றவை சரீரத்தைக் கொண்டு தேடப்படும் உதவியாகும்.

இதுபோன்றே ஒரு இறைநேசரிடம்இ எனது துன்பத்தை நீக்குங்கள். இறைவனிடம் வேண்டி எங்களுக்கு சுவர்க்கத்தை பெற்றுத் தாருங்கள். ஒரு குழந்தை பிறந்திட அருள் புரியுங்கள். இது நபித்தோழர்கள் நபிகளாரிடம் கேட்டதைப் போல. நரகினின்றும் காப்பாற்றுங்கள். இறைவனுடன் சேர்த்து வையுங்கள் எனக் கேட்பவை ஆன்ம சம்பந்தமான உதவிகளாகும்.

மரணமடைவதன் மூலம் சிலரது சரீரங்கள் தான் பயனற்றுப் போய் விடுகின்றன. அதேநேரம் அவர்களது ஆன்மாக்கள் முன்னை விட அதிகம் பலம் பெற்று விடுகின்றன. மையித்துஇ அடக்கப்பட்டுள்ள கப்ரின் மேற்பகுதியில் நிகழ்ந்திடும் சகலவற்றையும் பார்க்கவே செய்கிறது. அத்துடன் மிக மெல்லிய சப்தத்தையும் கூட அது கேட்கிறது. ஆதலால் அந்த ஆன்மாதான் வாழுகின்ற காலத்தில் பிறருக்கு உதவியது போலஇ அதன் மரணத்திற்குப் பின்னும் முன்னை விட பன் மடங்கு இன்னும் அதிகமாக உதவி செய்யும் என்பதுதான் உண்மை.

பாருங்கள்! மிஃராஜுடைய இரவன்று மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் முஸ்லிம்கள் மீது விதிக்கப்பட்ட ஐம்பது வேளை தொழுகையை ஐந்து வேளையாகக் குறைப்பதற்கு உதவி செய்தனர். அதுவும் இவ்வுதவி மூஸா நபியவர்கள் இறந்து கிட்டதட்ட மூவாயிரம் வருடங்களுக்குப் பின் நமக்குக் கிடைத்தது. இன்றும் கூட நபிகளாரின் பேருதவியால் காபிர்கள் முஃமினாக மாறிக் கொண்டிருக்கின்றனர். மூஸா மற்றும் ஹாரூன் அலைஹிஸ்ஸலாமவர்களின் பரக்கத்தைக் கொண்டு(உதவியால்) பனீ இஸ்ராயீல்கள் ஜாலூத் மன்னனை வெற்றிக் கொண்டனர். இதைப் பற்றி திருமறையில்,...

وَبَقِيَّةٌ مِّمَّا تَرَكَ اٰلُ مُوْسٰي وَاٰلُ هٰرُوْنَ

**மூஸாவும், ஹாரூனும் விட்டுப் போனதும் இருக்கிறது** எனக் கூறுகிறது.

இன்னும் அண்ணல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் மறைவுக்குப் பின் அவர்களின் ஆடை, புனித ரோமம் போன்றவற்றை சுகம் பெற நபித்தோழர்கள் கழுவிக் குடித்து வந்துள்ளனர். இதில் நபிகளாரின் உதவியால் சுகமும் அடைந்துள்ளனர். மேலும் தப்லீக்வாதிகளான தேவபந்தின் தலைவர்கள் கூட நபிகளாரிடம் உதவி தேடியுள்ளனர். இவ்வாறு உதவி தேடுவதை ஜாயிஸ் என்றும் கூறியுள்ளனர். உதாரணமாக மௌலானா மஹ்மூத் ஹசன் (இவர் தேவ்பந்தின் ஷைகாவார்) எழுதிய குர்ஆன் தர்ஜுமாவில் (இவர் மொத்தமே நான்கு ஜுஸ்வுகளுக்கு மட்டுமே தர்ஜுமா எழுதினார்) "இய்யாக நஸ்தஈன்" என்னும் வசனத்தில், எவரேனும் நல்லடியாரை இறைவனுடைய ரஹ்மத்துடைய வஸீலாவ எண்ணி வெளிப்படையாக உதவி தேடினால் அது ஜாயிஸ் என்றும், இவ்வுதவி எதார்த்தத்தில் இறைவனது உதவிதான் என்றும் கூறுகிறார். ஆதலால் நாம் இய்யாக நஸ்தஈன் என்னும் வசனத்திற்கு என்ன அர்த்தம் கொடுத்துள்ளோமோ அதைத் தவிர வேறு எந்த அர்த்தமும் எவரும் கொடுக்க முடியாதென்பதே உண்மையாகும்.

**ஆரியர்களின் ஆட்சேபம்:**

**கேள்வி:** இவ்வசனத்தைக்கொண்டு குர்ஆன் ஒரு அடியாரால் எழுதப்பட்டதென்று தெரிய வருகிறது. ஏனெனில் இது இறைவனின் வேதமெனில், இறைவன் எவரிடமாவது உதவி தேடுகிறானா? அல்லது எவரையாவது வணங்குகிறானா என்ன?

**பதில்:** இதற்குப் பதில் விரிவாக முன்பே கூறப்பட்டு விட்டது. ஒருமுறை பாபா கலீல்தாஸ் பனாரஸியிடம் பார்ப்பனர் ஒருவர் இதே கேள்வியைக் கேட்ட போது, அதற்கு அவர் சொன்ன பதிலைத்தான் நாம் முன்னால் கூறியிருக்கிறோம்.

அடுத்து அவர் அந்த பார்ப்பனரிடம், உமது வேதம் இறைவனது வாக்கியம்தான் என்பதை உமது வேதத்திலிருந்து நீர் நிரூபித்தால் நாம் ஆயிரம் ரூபாய் இனாமாகத் தருகிறோம். பின்னும் உமது வேதத்தில் இறைவனது அசல் பெயர் கூட சொல்லப்படவில்லை. ஓம், பகவான், பரமாத்மா, சர்வசக்தி, மான் போன்ற குணப் பெயர்கள் மட்டும்தான் காணப்படுகிறது. இதில் ஓம் என்பது பாடலுக்குரிய சுருதியாகும். இதனை ஆரியர்கள் இறைவனுக்குரிய பெயரென்று எண்ணிக் கொண்டிருக்கின்றனர். ஆனால் குர்ஆன் இறைவேதம் என்பதை மிகத் தெளிவாக...

تَنْزِيْلٌ مِّنْ رَّبِّ الْعٰلَمِيْنَ

குர்ஆன் லோகத்தாரின் ரட்சகனிடமிருந்து இறக்கப்பட்டதாகும் எனக் கூறுகின்றதாகையால்,...

உமது வேதத்தை உருவாக்கியவர் யார் என்று உமக்குக் காட்டட்டுமா எனக் கேட்டு விட்டு யஜூர் வேதத்திலிருந்து ஒரு மந்திரத்தை பாபா படித்துக் காட்டினார். அதன்

அர்த்தமானதுஇ பகவானிடமிருந்து இந்த மந்திரத்தை உருவாக்குபவன் நான். என் பெயர் கௌதம் என்பதாகும். பார்த்தீரா! உமது வேதம் எத்தனை தெளிவாக நான் மனிதனால் உருவாக்கப்பட்டவன் என்பதைக் கூறுகிறது எனக் கூற இது கேட்ட அந்த ஆசிரியர் பதில் சொல்ல தெரியாமல் மௌனமாகிப் போனார்.

اِهۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِيۡمَ

**எங்களை நேரான பாதையில் செலுத்துவாயாக.**

இவ்வசனத்திற்கு முந்திய வசனங்களோடு சில தொடர்புகளுண்டு. அவைஇ முந்திய வசனத்தில் "நாங்கள் உன்னிடமே உதவி தேடுகிறோம்" என்று சொல்லப்பட்டது. எனினும் எந்தக் காரியத்திற்காக உன்னிடம் உதவி தேடுகிறோம் என விளக்கப்படவில்லை. இப்போது இவ்வசனம் அந்த உதவிகளை குறித்து விரிவாகப் பேசுகிறது. அதாவது நாங்கள் நேரான பாதையில் செலுத்தப்படுவதற்காக உன்னிடமே உதவி தேடுகிறோம். அவ்வாறாயின் தீன்இ துன்யா சம்பந்தமான எல்லா காரியங்களிலுமே அல்லாஹ்விடம் உதவி தேட வேண்டும். அதாவது நேர்வழியில் நிலைத்து நிற்பதற்காக. இதுதான் அனைத்துக் காரியங்களுக்கும் அடிப்படையாகும்.

இரண்டாம் தொடர்பு: இவ்வசனத்திற்கு முந்திய வசனத்தில் வணக்கத்தைக் குறித்துப் பேசப்பட்டது. இப்போது இந்த வசனதம் துஆவைக் குறித்து பேசுகின்றது. அதாவது வணங்கிய பின் துஆ கேட்கவேண்டும் என்பதை இவ்வசனம் வலியுறுத்துகின்றது. இதனால்தான் தொழுகைக்குப் பின் துஆ கேட்பது மார்க்கச் சட்டத்தில் சுன்னத்தாக ஆக்கப்பட்டுள்ளது.

மூன்றாம் தொடர்பு: இதற்கு முந்திய வசனத்தில் "இறைவா! நாங்கள் உன்னையே வணங்குகிறோம். இன்னும் உன்னிடமே உதவி தேடுகிறோம்" என்று கூறிய அடியான் இப்போது இவ்வசனத்தின் மூலம் "எம்மை நேரான பாதையில் நிலைநிறுத்து. சிலகாலம் உன்னை வணங்கிய பின்னர் உனது வணக்கத்தை விட்டு விடுபவனாக இராமல் நிரந்தரமாக எப்போதும் உன்னை வணங்குபவனாக என்னை நிலைநிறுத்தி வை. ஏனெனில் இதன் பெயர்தான் ஸிராத்துல் முஸ்தகீம் என்பதாகக் கேட்கிறான்.

நான்காம் தொடர்பு: இதற்குமுன் வணக்கத்தை பற்றிப் பேசப்பட்டது. இப்போது அடியான் இறைவனிடம், இறைவா! இந்த வணக்கத்தில் என்னை நேரான பாதையில் நிலைநிறுத்து எனக் கேட்கிறான். அதாவது, எனது வணக்கம் உனது சன்னிதானத்தில் அங்கீகரிக்கப்பட்ட ஒன்றாக இருக்க வேண்டும். எவ்வாறு உன்னால் ஏற்றுக் கொள்ளப்பட்டவர்களின் வணக்கம் அமைந்திருந்ததோ அத்தகைய வணக்கமாக என் வணக்கம் அமைந்திட வேண்டும்.

அவ்வாறின்றி வாழ்வின் சுகங்களை அனுபவிக்கும் போது உன்னை மறந்து விட்டு கஷ்டமான நேரங்களில் மட்டும் உன்னை வணங்குபவனாக நான் இருந்திடக் கூடாது என்பதாகக் கேட்கப்படுகிறது.

ஐந்தாம் தொடர்பு: வணங்கிய பின் நேரான வழிக்காக துஆ செய்ய வேண்டும் என்பதை இவ்வசனம் வலியுறுத்துகின்றது. ஏனெனில், "ஹிதாயத்" இன்றி வணக்கம் நாட்டத்திற்குரியவனைப் பெற்றுத் தராது. பின்னும் மிகப் பெரும் வணக்கவாளிகள் எல்லாம் முடிவில் மதங்கெட்டவர்களாக மாறிப் போயுள்ளனர். உதாரணமாக, இப்லீஸ், பர்ஸீஸா, பல்அம இப்னு பாவூரா போன்றோரை குறிப்பிடலாம். இவர்களெல்லாம் மாபெரும் வணக்கஸ்தர்களாக இருந்தும் பின்னல் வழிகெட்டு போய்விட்டனர். எனவே தான் இவ்வசனத்தில் அடியான் இறைவனிடம், இறைவா! நாங்கள் எங்களின் வணக்கத்தை பெரிதாக எண்ணவில்லை. மாறாக உன்னிடம் நேர்வழியையும்இ அந்நேர்வழியில் நிலைத்து நிற்பதையும் கேட்கிறோம் என்று கூறுகின்றனர்.

**உலமாக்களின் தப்ஸீர்:**

اِهْدِ نَاالصِّرَاطَ الْمُسْتَقِيْمَ இஹ்தினஸ் ஸிராத்தல் முஸ்த்தகீம். இது اِهْدِ "இஹ்தி" அதாவது ஹிதாயத் என்பதிலிருந்து அமைந்ததாகும். இதன் அர்த்தமானது, "வழிநடத்துதல்" அல்லது "தேடப்படும் லட்சியத்தின் எல்லையைக் காட்டித் தருதல்" என்பதாகும். இதில் ஹிதாயத் என்பது இரு வகைப்படும். ஒன்று பாதையைக் காட்டித் தருதல். இரண்டு அப்பாதையின் கடைசி எல்லைவரை கொண்டு சேர்த்தல். இனி பாதையைக் காட்டித் தருதல் என்பதுதான் இவ்வசனத்தின் கருத்தெனில், "இஹ்தினா" என்னும் வார்த்தைக்குப் பின் "இலா" என்னும் பதமோ அல்லது "லாம்" என்னும் அட்சரமோ இணைக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் இவ்விரு பதங்களும் இவ்வசனத்தில் பயன்படுத்தப்படாததால்,...

அடியான் இவ்வசனத்தின் மூலம் இறைவனிடம், இறைவா! எனக்கு நேரான பாதையை காட்டித் தருவதோடன்றி, நேரான பாதையில் என்னை கொண்டு சென்று அதன் இறுதி எல்லைவரை என்னை சேர்ப்பாயாக என்று கேட்கிறான்.

ஏனெனில், அந்நேரான பாதையில் எண்ணிறந்த பேராபத்துக்களும்இ வழிகேடுகளும் நிறைந்திருப்பதாலும் உனது நல்லுதவி இன்றி அதனை கடக்க முடியாதாகையாலும் நீயே என்னை இட்டுச் செல் எனக் கேட்கிறான்.

அடுத்து "இஹ்தினா" என்னும் பதத்தில் வரும் "னா" என்னும் வார்த்தையைக் கொண்டு இறைவனிடம் துஆ கேட்கும் அடியான் தனக்கு மட்டும் ஹிதாயத்தை கேட்காமல் எல்லோருக்காகவும் கேட்கிறான். இவ்வாறு கேட்பதில் சில பிரயோஜனங்கள் உண்டு. அது,...

வணக்கத்தில் முஸ்லிம்கள் அனைவரும் இணைந்து கூட்டாக (ஜமாஅத்தாக) வணங்குவதால் அவ்வணக்கம் இறைவனிடம் அதிக அளவில் அங்கீகாரம் பெறுகின்றது. ஏனெனில் அவர்களில் ஒருவருடைய வணக்கம் ஏற்றுக் கொள்ளப்பட்டு விட்டாலும் எல்லோருடைய வணக்கமும் அதில் இணைந்திருப்பதால் அவர்களனைவரின் வணக்கமு ஏற்றுக் கொள்ளப்பட்டு விடும்.

இதனால்தான் துஆவுக்கு முன்னும்இ பின்னும் நபிகளார் மீது ஸலவாத்து ஓதப்படுகிறது. ஏனெனில் ஸலவாத் நிச்சயம் இறைவனால் ஏற்றுக் கொள்ளப்படுகிறது. இன்னும் இறைவனின் ரஹ்மத்தின் மீதுள்ள நம்பிக்கையானது முன்னும் பின்னுமுள்ள ஸலவாத்தை அங்கீகரிப்பவன் அதன் இடையிலுள்ள துஆவையும் கண்டிப்பாக ஏற்றுக்கொள்வான் என்பதாம். (பார்க்க: தப்ஸீர் கபீர்)

அடுத்து ஹிதாயத்தை தனக்கு மட்டும் கேட்டு நேர்வழி பெறும் ஒருவர் மீதமுள்ள வழிகேடரின் மத்தியில் அவரது வாழ்க்கை ஒரு போராட்டமாகத் தான் இருக்கும்.அன்றி அவர் வழிகேட்டிலுள்ளவரை ஆதரித்தால் அவரும் வழிகெட்டுப் போய்விடுவார். அவ்வாறின்றி அவர்களை விட்டு அவர் ஒதுங்கினால் அவர்களின் விரோதத்திற்கு ஆளாக நேரிடும். இதில் வாழ்க்கையே ஒரு போராட்டமாகி விடும். எனவேதான் மேற்கண்ட வசனம் தனியொரு மனிதனுக்கு மட்டும் ஹிதாயத்தைக் கேட்காது அனைவருக்கும் ஹிதாயத்தைக் கேட்குமாறு அறிவுறுத்துகிறது. (பார்க்க: தப்ஸீர் அஜீஸி)

இன்னும் ஹதீதில் நீங்கள் குற்றமற்ற நாவைக் கொண்டு துஆ கேளுங்கள் என நபிகளார் கூறியபோதுஇ நபித்தோழர்கள: குற்றமற்ற நாவை நாங்கள் எங்கிருந்து கொண்டு வர முடியும்? என திருப்பிக்கேட்ட போது, அதற்கு நபிகளார்: நீங்கள் மற்றவர்களுக்காக துஆ கேளுங்கள். அதுதான் குற்றமற்ற நாவாகும் என்று கூறினர். (பார்க்க: தப்ஸீர் கபீர்)

எனவே துஆ இறைவனிடம் அங்கீகாரம் பெறுவதற்குரிய ரகசியம் யாதெனில், தனக்கு மட்டும் இறைவனிடம் கேட்காமல் எல்லோருக்காகவும் கேட்பதுதான் என்பதை புரிந்து கொள்ளலாம்.

நினைவில் கொள்ளுங்கள். காபிருக்கு ஹிதாயத் என்பது அவர் ஈமான் கொள்வதாகும். முஃமினுக்கு ஹிதாயத் தக்வா (இறையச்சமாகும்) வாகும். முத்தகீனுக்கு ஹிதாயத் தக்வாவில் பூரணத்துவம். அங்கீகரிக்கப்பட்டோருக்கு ஹிதாயத் இறைவனின் சமீபத்துவம். முக்கரபீன்களுக்கு ஹிதாயத் ஹிதாயத்தில் பூரணத்துவமாகும்.

எனவே காபிர் இவ்வசனத்தை ஓதினால் அவருக்கு ஈமானுடைய துஆ கிடைக்கும். பாவிகளுக்கு தக்வாவும்இ முத்தகீனுக்கு இறைச் சமீபத்திற்குரிய துஆவும் கிடைக்கும். அன்றி இவ்வசனத்தின் மூலம் அண்ணல் நபி ஸல்லல்லாஹு

அலைஹி வஸல்லம் அவர்கள் பாவியாக இருந்தனர் என எண்ணக் கூடாது. மஆதல்லாஹ்.

அவ்வாறாயின் நபிகளார் இவ்வசனத்தை பின்னர் ஏன் ஓதி வந்தனரென்று கேட்கப்பட்டால், பாருங்கள். கொல்லனின் நெருப்பு உலை துருவேறிய இரும்பை சுத்தப்படுத்துவதற்கு காரணமாகிறது. இவ்வாறே தூய்மையான இரும்பை மிஷின் போன்ற சாதனமாக்குவதற்கு காரணமாகிறது. இவ்வாறே தங்கம் ஆபரணமாகி அதை விரும்புவோரின் மேனியை அலங்கரிக்கிறது. இதுபோன்றுதான் நபிகளாரின் நிலையும் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

அடுத்து صراط "ஸிராத்" என்பது صرط "ஸிர்த்" என்னும் மூலத்திலிருந்து திரிந்த ஒரு சொல். இதன் அர்த்தம் "விழுங்கிக் கொள்ளுதல்" என்பதாகும். இதில் பாதையானது பயணம் செய்பவரை தனக்குள் கொண்டு விடுவதால் அதாவது சாப்பிடுபவர் உணவை தனக்குள் கொள்வதைப் போல் பாதையும் அதில் பயணம் செய்பவரை தனக்குள் கொண்டு விடுவதால் இதனை ஸிராத் என்று கூறப்படுகிறது.

இனி வழக்கில் இப்பதத்திற்கு "விசாலமான பாதை" எனக் கூறப்படுகிறது. அப்பாதையில் பலர் ஒன்று சேர்ந்து செல்ல வேண்டும். அவ்வாறின்றி பலர் ஒன்று சேர்ந்து செல்லாத பாதைக்கு "ஸிராத்" என்று சொல்ல முடியாது. காரணம் துஆ அனைவருக்காகவும் கேட்கப்படுவதால் ஸிராத் எனக் கூறுவதுதான் பொருத்தமாகும்.

அடுத்து ஸிராத், ஸபீல், தரீக் ஆகிய இப்பதங்களனைத்தும் கிட்டத்தட்ட ஒரே மாதிரியான அர்த்தத்தை கொண்டதாலும் இங்கே "ஸிராத்" என்னும் பதம் "ஸிராத்தல் முஸ்தகீம்" பாலத்தை நினைவுறுத்துவதற்காக பேசப்படுகின்றது.

இன்னும் இதன் மூலம் ஒரு அடியான் இறைவனிடம் இறைவா! என்னை அந்தப் பாதையில் செலுத்து. நான் அதில் நடந்து சென்று ஸிராத்தல் முஸ்தகீம் பாலத்தை எளிதாகக் கடந்து விட வேண்டுமென்றுக் கேட்கிறான்.

المستقيم முஸ்தகீம். இதன் அர்த்தமானது, "நேராகுதல்" என்பதாகும். இதில் நேரான பாதை என்பது செல்ல வேண்டிய இடத்திற்கு வெகு சீக்கிரம் சென்றடைதலாகும். இன்னும் செல்பவர் வளைந்து நெளிந்து செல்லாமல் நேரடியாக செல்ல வேண்டும்.

இனி தவறான வளைந்த பாதை செல்லுமிடம் வரை கொண்டு சேர்க்காது. அல்லது மிகுந்த துன்பத்தையும் கஷ்டத்தையும் அனுபவித்து அதன்பின் சென்று சேர வேண்டி வரும்.

மேலும் பல்வேறு சிரமங்களை தாங்கிச் செல்லும் பாதை வழிதவற வைத்து விட சாத்தியமுண்டு. எனவே தவறான வளைந்த பாதை என்பது குப்ராகும். இப்பாதை செல்ல வேண்டிய எல்லைவரை ஒருக்காலும் கொண்டு சேர்க்காது.

அடுத்து வழிகெட்ட பாதை என்பது சுன்னத் வல் ஜமாஅத்தை தவிரவுள்ள மற்ற பாதை மாறிய பிரிவுகளான அதாவது ராபிஜீ, வஹ்ஹாபி போன்றோராவர். இவர்கள் நபிகள் நாதரைப் பழிக்காமலும், ஏசிப் பேசாமலும் குப்ர் வரை செல்லாமலும் இருந்தால் இறுதியில் மன்னிக்கப்பட்டு சொர்க்கம் சேர்ந்தாலும், அது மிகுந்த சிரமங்களுக்கும், துன்பங்களை அனுபவித்த பின்னருமேயாகும். இங்கே இவ்விரு பாதைகளை விட்டும் இறைவனிடம் பாதுகாப்பு தேடப்படுகிறது.

**நேரான பாதை எது**?

ஸிராத்தல் முஸ்த்தகீம் என்னும் நேரான பாதை என்பதானது: மார்க்கம், மத்ஹப், அகீதா, வணக்கம், நற்குணம் போன்ற அனைத்துக்குமே ஸிராத்துல் முஸ்தகீம் என்றுதான் சொல்லப்படும். இதன் மூலம் இறைவனிடம் கேட்கும் ஒருவர்: இறைவா! மேற்கண்ட அனைத்திலும் என்னைஇ அதாவது மார்க்கம் என்பதில் இஸ்லாத்தையும், மத்ஹப் என்பதில் நான்கு பிரிவுகளில் ஒன்றிலும், அகீதா என்பதில் சுன்னத் வல் ஜமாஅத்திலும், வணக்கம் நற்குணம் என்பதில் அண்ணல் நபிகளாரின் வணக்கத்தைப் போன்ற, நற்குணத்தைப் போன்றவற்றிலும் என்னை செலுத்துவாயாக எனக் கேட்பதுடன் அதிலேயே என்னை நிலைநிறுத்தி வைப்பாயாக என்றும் கேட்கிறார்.

ஏனெனில்: ஒவ்வொரு பொருளுக்கும் மூன்று நிலைகளுண்டு. ஒன்று: மிகை. இரண்டு: குறைவு. மூன்று: மத்திபம். இதில் அனைத்து மார்க்கங்களிலும் இஸ்லாம் மட்டுமே மத்திபமான மார்க்கமாகும். ஏனெனில் மூஸா நபியவர்களின் மார்க்கத்தில் கடுமை அதிகமிருந்தது. நான்கில் ஒரு பங்கை ஜகாஅத்தாக கொடுக்க வேண்டும். அசுத்தம் பட்ட ஆடை அல்லது சரீரத்தை வெட்டியெடுக்க வேண்டும். அல்லது தீயில் எரித்து விட வேண்டும். மஸ்ஜிதுகளை தவிர மற்ற இடங்களில் தொழுதால் தொழுகை நிறைவேறாது. அத்துடன் கடுமையான தண்டனைக்குப் பின்னரே பாவமன்னிப்பு அங்கீகரிக்கப்பட்டு வந்தது.

இவ்வாறே ஈஸா நபியவர்களின் மார்க்கத்தில் அதிகமிருந்தது. எதுவரையெனில்: மதுவும், பன்றியின் இறைச்சியும் ஹலாலாக ஆக்கப்பட்டிருந்தது. ஆனால் தீனெ முஹம்மதிய்யாவான இஸ்லாத்தில் மிகவும் கடுமையோ அல்லது எளிமையோ இன்றி நாற்பதில் ஒரு பங்கு மட்டுமே ஜகாத்தாகவும், மஸ்ஜிதின்றி எல்லா இடங்களிலும் வணங்கலாமென்றும், பெரும் பெரும் பாவங்கள் கூட வெறும் தௌபாவைக் கொண்டே மன்னிக்கப்பட்டும் விடுகின்றன. அசுத்தமான ஆடைகளை அல்லது சரீரத்தை முப்பது வகையான எளிமைப்படுத்தப்பட்ட முறைகளைக் கொண்டு தூய்மை படுத்துதல். ஆடைகளை தூய்மைப்படுத்திட தண்ணீரைக்

கொண்டு கழுவினால் போதும். உலோகம் மற்றும் கண்ணாடி பாத்திரங்கள் போன்றவற்றை நன்கு தேய்த்து கழுவினாலே போதும். தூய்மை கெட்டுவிட்ட பால், எண்ணை போன்றவற்றை அந்த இனத்திற்குரிய பொருட்களோடு கலந்தால் தூய்மையாகிவிடும். தண்ணீர் கிடைக்காத போது தயம்மும் செய்து கொள்ளலாம். மது மற்றும் பன்றி இறைச்சி போன்றவை தே ஆரோக்கியத்தையும், பகுத்தறிவையும் அத்துடன் மக்களின் முன் வெட்கமின்மையையும், துர் நடத்தையையும் தோற்றுவிப்பதால் அவற்றை ஹராம் ஆக்கப்பட்டது.

**மத்ஹபின் அகீதாக்கள்:**

அஹ்லுஸ் ஸுன்னத் வல் ஜமாஅத்தின் கொள்கைகள்தான் நேரான பாதையா(ஸிராத்துல் முஸ்தகீமா)கும். காரணம் ஜப்ரிய்யா என்னும் பிரிவு மனிதனை எதுவுமே செய்யவியலாத ஒரு கல்லைப்போல நம்புகிறது. கத்ரிய்யா என்னும் பிரிவு மனிதனை இறைவனின்றி இயங்கும் ஒரு சுயத்தன்மை கொண்டவன் என்று நம்புகிறது. ராபிஜிகள் நபித்தோழர்களை வெறுக்கின்றனர். காரிஜிகள் அஹ்லுல் பைத்துக்களான நபிகளாரின் குடும்பத்தை வெறுக்கின்றனர். ஆனால் அஹ்லுஸ்ஸுன்னத் வல் ஜமாஅத்தினர் மேற்கண்ட இருவரையுமே நேசிக்கின்றனர். பின்பற்றுகின்றனர். ஏனெனில் அஹ்லுபைத்துக்கள் நபிகளாரின் உம்மத்துக்களுக்கு அபயமளிக்கும் கப்பலைப் போன்றும், நபித்தோழர்கள் உம்மத்துக்கள் பின்பற்றும் நட்சத்திரங்களைப் போன்றுமிருக்கின்றனர். இதில் காரிஜியாக்கள் கப்பலை விட்டு விட்டனர். ராபிஜிகள் வழிகாட்டும் நட்சத்திரங்களை விட்டும் முகத்தை திருப்பிக் கொண்டனர். ஆனால் இவ்விரு சாராரையுமே நம்பி பின்பற்றியதால் சுன்னதல் வல் ஜமாஅத்தினரின் வாழ்க்கை என்னும் கப்பல் ஸலாமத்தாக கரை சேர்ந்தது.

அடுத்து சக்டாலவிகள் ஹதீதையும், பிக்ஹையும் (இமாம்களால் வகுக்கப்பட்ட சட்டங்கள்) விட்டு விட்டனர் கைர முகல்லிதீன்கள் (இன்றைய நஜாஸத், ஜாக் போன்ற பிரிவுகள்) பிக்ஹை விட்டும் முகத்தை திருப்பிக் கொண்டனர். தேவ்பந்திகள் (தப்லீக் ஜமாஅத்) நபிமார்கள் மற்றும் வலிமார்களின் தொடர்பை முறித்துக் கொண்டனர். மாறாக அல்லாஹ்வையும் அவனது ரஸூலையும் இவர்கள் எதிர்க்கத் துணிந்துஇ அல்லாஹ்வை "பொய்யன்" என்றும்இ ரஸூலுல்லாஹ்வை "அறிவற்றவர்" என்றும்இ "நம்மைப் போன்ற ஒரு சாதாரண மனிதர்" என்றும் கூறுகின்றனர். மார்க்கத்தில் அனுமதிக்கப்பட்ட நன்மையான காரியங்களையெல்லாம் ஹராம் என்றும் கூறுகின்றனர். இதன் மூலம் இவர்கள் நரகத்திற்குரிய பாதையை தேர்ந்தெடுத்துக் கொண்டனர்.

அதேநேரம் அஹ்லுஸ்ஸுன்னத் வல் ஜஅமாத் அல்லாஹ்வின் பேரருளால் இவையனைத்தையும் அதற்குரிய தகுதிக்குத் தக்கவாறு நம்புகிறது. இதனால் ஸிராத்துல் முஸ்தகீம் என்னும் நேரான பாதையில் சென்று கொண்டுள்ளது. அல்லாஹ் நம்மனைவரையும் இதிலேயே நிலைநிறுத்துவானாக.

இனி அமல்களென்னும் வழிபாடுகளான வணக்கங்களில் நேரான பாதை என்பதானது, இஸ்லாம் மற்றும் குர்ஆன் நமக்கு கற்பித்தவைகளாகும். அடியார்களுக்கு செலுத்தப்படும் வணக்கமென்பது, வீட்டுச்செலவினங்களில் நடுநிலையை கையாளுவதாகும். அதாவது ஒருவர் நபிலான வணக்கங்களில் ஈடுபட்டு தனது குடும்பத்தாருக்கு செய்ய வேண்டிய கடமைகளிலிருந்து தவறுகிறார். இன்னொருவர் தன் குடும்பத்தை பராமரிப்பதில் மூழ்கி இறைவனை மறந்திருக்கிறார். இதில் இவ்விருவருமே நேரான பாதையில் இல்லை. மூன்றாமவர் தம்மிறைவனையும் நினைக்கிறார். (பர்ளான கடமைகளை நிறைவேற்றுகிறார்). (அதாவது தொழுகை) தன் குடும்பத்தையும் பராமரிக்கிறார். இவர்தான் ஸிராத்துல் முஸ்தகீமில் உண்மையாகவே இருக்கிறார்.

இதைத்தான் ஹதீதில் இவ்வாறு கூறப்படுகிறது. இரவில் தூங்கவும் செய்யுங்கள். வணங்கவும் செய்யுங்கள். நோன்பும் வையுங்கள். நோன்பை திறக்கவும் செய்யுங்கள். உங்களின் கண்களுக்கு உங்கள் மீது உரிமை இருக்கிறது. உங்கள் மனைவிக்கு உங்கள் மீது உரிமை இருக்கிறது. உங்களின் விருந்தினர்க்கு உங்கள் மீது உரிமை இருக்கிறது. வகையறா, வகையறா.

எதுவரையெனில், முஹத்திஸீன்கள் இதுபற்றிய ஒரு பாடத்தையே "அமல்களின் நடுநிலை" என்னும் பெயரில் அமைத்து வைத்துள்ளனர். இன்னும் திருக்குர்ஆனில்,...

وَكَذٰلِكَ جَعَلْنٰكُمْ اُمَّةً وَّسَطًا

**இன்னும் உங்களை நாம் நடுநிலையான கூட்டத்தினர்களாக ஆக்கினோம்** என்றும் கூறப்படுகிறது.

இவ்வாறே குண ஒழுக்கங்களில் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் குணத்தைப் பின் பற்றுவதுதான் நேரான பாதையாகும். எந்த நிலையிலும் கோபப்படக் கூடாது என்பது ரோஷமற்ற தன்மையாகும். இதுபோன்றே சதா கோபப்படுவதும் கெட்ட குணமாகும். இறைவனுக்காக கோபம் கொள்வதும், மார்க்கத்தின் விரோதிகளிடம் வெறுப்படைவதும் உலகக் காரியங்களில் பொறுமையை கடைபிடிப்பதும் அண்ணல் நபிகளாரின் குணங்களாகும். இன்னும் சிராத்தல் முஸ்தகீம் என்பது பற்றிய தப்ஸீரை நாம் விளக்கத் துவங்கினால் அது மட்டுமே ஒரு மிக நீண்ட நூலாக விரிந்து விடும். விளக்கத்திற்காக சிலற்றை மட்டும் மேலே குறிப்பிட்டுள்ளோம். அல்லாஹும் நமக்கு அதன்படி செயலாற்றும் தவ்பீக்கை தந்தருள்வானாக.

**சூபியாக்களின் தப்ஸீர்:**

ஹிதாயத் என்பது சில வகைப்படும். இதில் ஒரு வகை ஹிதாயத் என்பது இல்ஹாம் மூலம் எவரைக் கொண்டும் காட்டித் தரப்படாமல் கிடைப்பதாகும். எவ்வாறெனில் குழந்தை தனது தாயின் மார்பகத்தை சுவைத்தல். இன்னும் அக்குழந்தை அழுது தன் தாயின் கவனத்தை தன் பக்கம் திருப்புதல். இதனை அக்குழந்தைக்கு யாரும் சொல்லித் தருவதில்லை.

மற்றொன்று உணர்வைக் கொண்டு ஹிதாயத் பெறுதல். எதைப் போலவெனில் குழந்தை தனது உணர்வில் வளர்ச்சி பெற்று நன்மை தீமைக்கிடையில் உள்ள வேறுபாடுகளை பிரித்தறிதல் போன்றாகும்.

மூன்றாவது அக்லீ. அதாவது அறிவின் துணை கொண்டு ஹிதாயத் பெறுதல். இதனை பார்வையின் ஹிதாயத் என்றும் கூறப்படுகின்றது. இந்தவகை ஹிதாயத் ஆதாரங்களைக் கொண்டு கிடைக்கிறது. அதாவது மனிதன் தன்னறிவைக் கொண்டு ஆதாரங்களை தேடிப் பெற்று அந்த ஆதாரங்களின் அடிப்படையில் ஹிதாயத்தைப் பெறுகிறான்.

நான்காவது ஹிதாயத்தே இலாஹிய்யா எனப்படும். இது நபிமார்களின் நல்லுதவி கொண்டும் இறைவனின் சொந்தமான பேரருள் கொண்டும் கிடைப்பதாகும். அதாவது எதைப் பற்றி மனித அறிவால் விளங்கிக் கொள்ள முடியாதோ, அல்லது ஆதாரங்கள் கிடைக்காதோ அதைப் பற்றி வழிகாட்ட இறைவன் நபிமார்களை அனுப்பியுள்ளான். இதுவும் இரு வகைப்படும்.

ஒன்று: பொதுவானது. இது ஷரீஅத்துடைய கட்டளையாகும். இவை நபிமார்களின் மூலம் அடியார்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. அதாவது இஸ்லாமியக் கொள்கைகள், வெளிப்படையான நற்செயல்கள் போன்றவற்றை குறிப்பிடலாம்.

மற்றொன்று: குறிப்பானது. இதனை நபித்துவத்தின் பேரொளியைக் கொண்டும் விலாயத்தின் வெளிச்சத்தைக் கொண்டும் சொந்தமான அடியார்களுக்கு வழங்கப்படுகிறது. (பார்க்க: தப்ஸீர் அஜீஸி)

நினைவில் கொள்ளுங்கள். இலாஹிய்யாவான ஹிதாயத்து தான் மனிதர்களுக்கு கடைசி ஹிதாயத்தாகும். ஆனால் நமது நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு இதுதான் ஹிதாயத்தின் துவக்கமாகும். அதாவது இறையடியார்களில் சொந்தமான ஆரிபீன்கள் பிறக்கும்போதே இலாஹிய்யாவான ஹிதாயத்தைக் கொண்டு பிறக்கின்றனர். உதாரணமாக ஈஸா அலைஹிஸ்ஸலாம் பிறந்ததும்,...

**திடனாக நான் அல்லாஹ்வின் அடிமை** என்றும்,

யஹ்யா அலைஹிஸ்ஸலாம் அவர்களைக் குறித்து....

يا وَاٰتَيْنٰهُ الْحُكْمَ صَبِيًّا

**இன்னும் அவருக்கு குழந்தையாக இருக்கும் போதே ஹிக்மத்தை கொடுத்தோம்** என்றும் குர்ஆன் கூறுகின்றது.

நமது நாயகம் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பிறந்தவுடனேயே ஸுஜூது செய்தனர். திருக்குர்ஆனின் முதல் வசனம் இறங்கிய போது அண்ணல் நபிகளார் இஃதிகாபிலும், இறைதியான நிலையிலும் இருந்தனர். கௌதுல் அஃலம் ரலியல்லாஹு அன்ஹு ரமலானுடைய காலங்களில் தாய்ப்பால் அருந்தாதிருந்தனர்.

உலகில் ஒவ்வொரு பொருளும்அதன் தலைமை கேந்திரத்திலிருந்துதான் பெறப்படுகின்றன. அதேநேரம் தலைமைக் கேந்திரம், இறைவனிடமிருந்து மனிதன் பெறும் அனைத்தையும் பெறுகின்றது. உலகம் முழுவதும் கடலிலிருந்து தான் தண்ணீரைப் பெறுகின்றது. ஆனால் கடல் இறைவனிடமிருந்து தான் பெறுகின்றனது. எல்லா நட்சத்திரங்களுமே சூரியனிடமிருந்துதான் ஒளியைப் பெறுகின்றன. ஆனால் சூரியன் இறைவனைக் கொண்டு ஒளி பெறுகின்றனது. எனவே கடல், தண்ணீருக்கு தலைமை கேந்திரம். சூரியன் வெளிச்சத்திற்கு தலைமை கேந்திரம். முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், ஹிதாயத்தின் தலைமைக் கேந்திரம். இதுபற்றி மௌலானா ஜலாலுத்தீன் ரூமி ரஹிமஹுல்லாஹ் கூறுகின்றனர்:

இப்படிப்பட்ட ஹிதாயத் பக்ருத்தீன் போன்ற ஞானவான்களின் அறிவுக்குக் கூட சாத்தியமில்லை. ஏனெனில் இவ்வகை ஹிதாயத்தானது அறிவுக்கு அப்பாற்பட்ட எல்லை இல்லாத ஒன்றாகும். இதனால்தான் ஞானவான்கள், வெளிரங்கப் பார்வையுடைய ஆலிமின் எல்லை ஆதாரத்தின் மீது அமைந்திருக்கும். இவ்வாறே வெளிரங்கப் பார்வையுடைய ஆலிம் சொல்லித் தருகிறார். தரீகத்துடைய ஷைகு காட்டித் தருகிறார். வெளிரங்க ஆலிம் பேசுவதுடன் நின்று விடுவார். சூபியான ஞானி பேசப்படும் விஷயத்தின் அகமிய நிலையில் சஞ்சரிப்பார் என்றும் கூறுகின்றனர். ஆதலால் இவ்வசனத்தில் அந்த கடைசி வகை ஹிதாயத்தை இறைவனிடம் கேட்கும் வகையில், இறைவா! உணர்வுகளுக்கும், அறிவுக்கும் அப்பாற்பட்ட அந்த ஹிதாயத்தை எங்களுக்கு அருள்வாயாக!. அது உனது பேரருள் ஒன்றை கொண்டு மட்டுமே கிடைக்கும் என்று கேட்கிறோம். ஆகவே தான் اهد **“எங்களுக்கு ஹிதாயத்தை அருள்வாயாக.“** என கேட்கப்படுகிறது. இன்னும் இவ்வசனம் முந்திய வசனங்களுடன் எவ்வாறு தொடர்பு கொண்டுள்ளதெனில்,

நஃபுது இ நஸ்தஈன் என்பதில், இறைவா! எங்களின் அறிவுக்கு எட்டியவரை உனது நல்லுதவியைக் கொண்டு செயல்பட்டோம். ஆனால் எங்களின் அறிவுக்கு எட்டாத காரியங்களை நீதான் நடத்திக் கொடுக்க வேண்டும் என்று அடியார்கள் கேட்கின்றனர்.

الصراط المستقيم ஞானவான்களிடம் சிராத்தல் முஸ்தகீம் என்பது பல வகைப்படும். அதில் ஒன்று: நேசமும், அறிவும் இணைந்திருக்க வேண்டும். இதற்கு "ஸுலூக்" என்று சொல்லப்படும். ஏனெனில் அறிவு மட்டும் இருந்து இஷ்க் (இறைநேசம்) இல்லையெனில், அது மார்க்கமேயல்ல. இவ்வாறே நேசமிருந்து அறிவில்லாது போனால் அது வெறும் "ஜத்பு" "பரவச நிலை" மட்டும்தான். இவ்விரு பாதைகளிலும் திரும்பி விடுகின்ற அபாயமுண்டு. அதனால் இறைநேசமும் பூரணமாயிருந்து அறிவும் தெளிவாக இருக்க வேண்டும். இதுதான் உண்மையான ஸுலூக். இவ்வகை ஹிதாயத்தைத் தான் இங்கே இவ்வசனத்தின் மூலம் இறைவனிடம் வேண்டப்படுகிறது.

பாருங்கள். ஸாலிக், மஜ்தூபை விட உயர்ந்தவர். ஏனெனில் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் தூர்சீனா மலையில் இறைவனின் தஜல்லியைக் கண்டு மயங்கி விழுந்து விட்டனர். அதே நேரம் அண்ணல் நபி முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அல்லாஹ்வின் அந்த மஹ்ழிய்யத்தான் தாத்தை பார்த்த பிறகும் கூட புன்சிரிப்பு சிரித்தவாரிருந்தனர். அண்ணலாரின் இந்த நிலையினைதான் ஸுலூக் எனப்படுகிறது.

ஞானவான்களிடம் மற்றுமோர் வகை ஹிதாயத்தானது, எந்தப்பாதை இறைவனது தாத்துடன் தன்னை இணைக்குமோ அதுதான் சிராத்தல் முஸ்தகீமாகும். அதைத் தவிர மற்ற பாதைகளனைத்தும் காரியத்திற்கு உதவாதவைகளாகும். இந்த ஞானிகள் சுவனத்தை கருத்தில் கொண்டு வாழ்வதில்லை. ஹுருல்ஈன்களை தேடுவதில்லை. மாறாக இவர்கள் தேடும் பாதை, எது இவர்களுக்குரிய மன்ஜிலை பெற்றுத் தருமோ அத்தகைய பாதையைத்தான் இவர்கள் தேர்ந்தெடுக்கின்றனர். இதனால் இவர்கள் இறைவனிடம்,..

இறைவா! பாதைகள் அநேகமிருக்கின்றன. இன்னும் அப்பாதையில் நுழைபவர்களும் பல வகையாக இருக்கின்றனர். ஷைத்தான் ஒரு பாதையில் அழைத்துக் கொண்டிருக்கிறான். நப்ஸ் இன்னொரு பாதையின் பக்கமாக இழுத்துக் கொண்டிருக்கிறது. விரோதி வேறெங்கேயோ கொண்டு சேர்க்க விரும்புகிறான் . நண்பன் ஒரு பக்கம் கொண்டு சேர்க்க விரும்புகிறான். ஆனால் இறைவா! நாங்கள் தேடும் பாதையானது இ எந்தப் பாதை எங்களுக்கு உன்னை பெற்றுத் தருமோ இ எந்தப் பாதையில் நடந்தால் நாங்கள் உன்வரை வந்து சேருவோமோ அந்தப் பாதையில் எங்களை நடத்துவாயாக. உன் திருப்தி எதில் இருக்கின்றதோ அதை நாங்களும் திருப்தி கொள்ளும் பாதையில் எங்களை நடத்து எனக் கேட்கின்றனர்.

உலமாக்களிடம் நல்ல கொள்கை (அகீதா) தான் உள்ளத்தின் நேரான பாதையாகும். இதுபோன்றே நற்செயல்கள் அந்த உள்ளத்தை உடையவனின் நேரான பாதையாகும். இது அவனை சொர்க்கம் வரை கொண்டு சேர்க்கிறது. ஞானிகளிடத்தில் தரீகத்துடைய ஷைகானவர் இறை நம்பிக்கையாளரை இறைவன் வரை கொண்டு சேர்க்கிறார்.

இந்த துஆவின் மூலம் சில விஷயங்கள் நமக்கு தெளிவாக்கப்படுகின்றன. அவை ஒரு மனிதன் தனது இறப்பு வரை ஏதாவதோர் பாதையில்தான் இருக்கிறான். மரணத்திற்குப் பின்பே தனது மன்ஜிலை(இருப்பிடத்தை) பெற்றுக் கொள்கிறான். இன்னும் பிரயாணி எவ்வாறு தமது பயணத்தில் சாதனங்களை சேகரிக்கிறானோ, அவ்வாறே நல்லமல்களை இவன் சேகரிக்கிறான்.

அடுத்து இறைவனின் மாபெரும் பேரருள் மனிதனுக்கு நேரான பாதையில் செல்வதற்குரிய பாக்கியம் கிட்டுவதாகும். இதனால்தான் சூறா பாத்திஹாவில் இவ்வாறு துஆ கேட்கப்படுகிறது. மூன்றாவது, இறைவன் வரை வஸீலா இன்றி யாரும் செல்ல முடியாது. அவ்வாறில்லையேல் பாதைக்கு என்ன அவசியம்? இறைவன் நமக்கு மிகச் சமீபமாகத்தான் இருக்கிறான். ஆனால் நாம்தான் அவனை விட்டு தூரமாக இருக்கிறோம். அதனால்தான் அவன்வரை நாம் செல்ல நமக்கு ஒரு பாதை அவசியமாயுள்ளது. தப்ஸீர் கபீரில் இந்த இடத்தில் ஒரு சம்பவம் சுட்டிக் காட்டப்படுகிறது. அது,...

ஹஜ்ரத் இப்ராஹிம் இப்னு அத்ஹம் ரஹிமஹுல்லாஹ் அவர்கள் கால்நடையாக ஹஜ்ஜுக்கு சென்று கொண்டிருந்தனர். அப்போது சவாரியொன்றில் வந்த ஒருவர், அவர்களை பார்த்து, எங்கே போகிறீர்கள் என்று வினவ, ஹஜ்ஜுக்கு என்றனர்.

அதுகேட்ட அவர் நீங்கள் ஒரு பைத்தியக்காராரென்று நினைக்கிறேன். இத்துணை தொலைதூரப் பயணத்திற்கு ஒரு சவாரியுமில்லை. கட்டுச் சோறுமில்லை. மரணத்தை விலை கொடுத்து வாங்கப் போகிறீர்களென்று நினைக்கிறேன் என்றிட,... அத்ஹம் அவர்கள் ,உம்மிடம் ஒரு சவாரி மட்டும்தான் உள்ளது. ஆனால் என்னிடம் நிறைய சவாரிகளை நான் வைத்துக் கொண்டிருக்கிறேன். ஆனால் அவை உனது பார்வைக்கு புலப்படாது எனக் கூறவும், அதற்கவர்: அவை என்ன சவாரி? என்று வினவ,...

அதற்கு அத்ஹம் ரஹிமஹுல்லாஹ் அவர்கள் என்னை ஏதாவதொரு பலாய் அண்மித்தால் நான் உடனே பொறுமை என்னும் சவாரியின் மீது ஏறிக் கொள்கிறேன். அன்றி இறைவனது நிஃமத்தைப் பெற்றால் நன்றி என்னும் வாகனத்தின் மீது ஏறிக் கொள்கிறேன். இன்னும் இறைவனது விதி என்னை தொட்டால் திருப்தி என்னும் சவாரியின் மீது ஏறிக் கொள்கிறேன். இவ்வாறே எனது நப்ஸ் என்னை ஏதாவதொரு திசை பக்கமாக இழுத்தால் எனது வாழ்க்கைக்கு

உத்திரவாதமில்லை என்னும் சவாரியின் மீது எறிக் கொள்கிறேன். அப்போது அக்காட்டரபி சொன்னார், ஆம். நீங்கள் சவாரியின் மீதுதான் இருக்கிறீர்கள் என்று.

இனி உலக வாழ்விலும் வகை வகையான சவாரிகள் பிரயாணத்திற்கென தேவைப்படுகின்றன. ஒருசமயம் குதிரை வண்டியில் பிரயாணம் செய்கிறோம். சிலபோது புகைவண்டியில் பிரயாணம் செய்கிறோம். சிலசமயம் மோட்டார் வண்டியில் பிரயாணம் செய்கிறோம். கப்பலிலும் பயணம் செய்து கடலை கடக்கிறோம். விமானத்தில் பயணம் செய்து காற்றை கடக்கிறோம். இவ்வாறு பலவகை சவாரிகளில் பயணம் செய்தாலும் அதனை வேறொருவர் தனது கட்டுப்பாட்டில் கொண்டு செலுத்துகிறார்.

அடுத்து ஞானவான்களிடம் மார்க்கத்தில் நிலையாக நிற்பதுதான் நேரான பாதையாகும். அவர்கள் சொல்கின்றனர். ஒரு நிலையில் நிற்பது ஆயிரம் கராமத்தென்னும் அற்புதங்களை நிகழ்த்துவதை விட மேலானதென்று.

நிலை நிற்பது என்பதன் கருத்தானது, தன்னால் நேசிக்கப்படும் தனது மௌலா அவனை கடலில் விழ வேண்டுமென சொல்லக் கூட வேண்டாம். சைக்கினை செய்தாலே போதும். அதை செயல்படுத்திட சற்றும் தயங்கிட மாட்டான். இதில் யூனுஸ் அலைஹிஸ்ஸலாம் அவர்களின் சம்பவமே இதற்கு போதிய சான்றாகும். இன்னும் தமது பிள்ளையை அறுத்து பலியிடுமாறு கட்டளை கிடைத்த மறுவினாடியே அக்கட்டளையை திருப்தியுடன் ஏற்றுக் கொண்டதும்இ இப்றாஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களைக் கொண்டு உணர்த்தப்படுகிறது.

இவ்வாறே இறைவனது நினைவில் நெருப்பும் கூட முன்னால் வந்து விட்டால் அதையும் பொருட்படுத்தாது இறங்கத் துணிந்து விடுவர். இப்றாஹிம் அலைஹிஸ்ஸலாம் அவர்களைப் போன்று. இவ்வாறே எவருக்காவது மாணவராக இருக்க வேண்டும் என கட்டளை வந்து விட்டால் அதையும் மனமுவந்து ஏற்றுக் கொண்டு விடுவர். எவ்வாறெனில் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் போன்ற ரஸூல்மார்கள் கிழ்ரு அலைஹிஸ்ஸலாமிடம் சென்றிட கொஞ்சங்கூட வெட்கப்படாதிருந்த நிகழ்ச்சியை குறிப்பிடலாம். ஒருவேளை ரம்பத்தால் அறுத்தெறியப்படும் சோதனை வந்தாலும் கூட பொறுமையோடும் நன்றியுடனும் மனமுவந்து அதனை ஏற்றுக் கொள்வர். இதற்கு ஜகரிய்யா அலைஹிஸ்ஸலாம் அவர்களை உதாரணமாக கொள்ளலாம்.

ஞானவான்கள், தமக்கும் தம்மிறைவனுக்கும் இடையே தம்முயிர், செல்வம், பிள்ளைகள் போன்றவை திரையாகி விடுமாயின் அவற்றை அறுத்தெறிந்து விடுங்களென கூறுகின்றனர். அவ்வாறு அறுத்தெறிந்து விடுவதென்பது வீணான ஒரு செயலல்ல. மாறாக அது தனது நேசனை சந்திப்பதற்குரிய காரணமாகும். ஹஜ்ரத் சுலைமான் அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு அவருடைய தொழுகை களாவாகிப் போன போது அதற்காக ஆயிரம் குதிரைகளை அறுத்தனர் எனில், அது

வீணான செயல் அல்ல. மாறாக தமது உள்ளத்தின் விருபத்தை அறுப்பதாகும். இன்னும் இந்நிலை மிகப் பெரும் கஷ்டத்திற்குப் பின்பே வாய்க்கின்றதாகையால் இவ்வசனத்தின் மூலம் இறைவா! என்னை நேரான பாதையில் நடத்துவாயாக எனக் கேட்கப்படுகிறது.

**ஆட்சேபம்:**

**கேள்வி:** (ஆரியர்கள்) இவ்வசனத்தை கொண்டு கேட்கப்படும் "துஆ" அர்த்தமற்ற ஓர் நிலையினை குறிக்கின்றது. ஏனெனில் ஒருவர் இஸ்லாத்தை தழுவி அதன்பின் தொழுகைக்காகவும் ஆஜராகி தொழுகையில் குர்ஆனையும் ஓதத் துவங்கி விட்டார். இதன்பின்பு அவருக்கு ஹிதாயத்தும் கிடைத்து விட்டது. இந்நிலையில் அவர் தனக்கு கிடைக்காத ஒன்றையல்லவா கேட்க வேண்டும்? அதை விட்டு அவருக்கு ஏற்கனவே கிடைத்து விட்ட ஹிதாயத்தை கேட்பது அர்த்தமற்ற ஒன்றல்லவா?

**பதில்:** இதற்குரிய பதில் இவ்வசனத்தின் தப்ஸீரில் மிக விரிவாகமுன்னால் விபரிக்கப்பட்டு விட்டது. இங்கே ஹிதாயத்த என்பதன் கருத்து: நேரான பாதையில் நிலைத்து நிற்பதாகும். அல்லது அப்பாதையில் முன்னேறிச் செல்ல வேண்டும். அல்லது உள்ளத்தை தூய்மைப் படுத்த வேண்டும். அல்லது சோதனையான, கஷ்டமான சந்தர்ப்பங்களில் கால் சருகாமல் நிற்க வேண்டும் என்பதாகும்.

இன்னும் மனிதர்கள் எத்தகைய நிலையிலுள்ளனரோ௫ அத்தகைய ஹிதாயத் அவர்களுக்குக் கிடைக்கும். காபிருக்குரிய ஹிதாயத் அவர் ஈமான் கொள்ள வேண்டும். மு:ுமினுக்குரிய ஹிதாயத் அதில் அவர் நிலைத்து நிற்க வேண்டும். நினைவில் கொள்ளுங்கள். நாம் நேரான பாதையிலிருக்கிறோம். அதாவது நேரான பாதையில் சென்று கொண்டிருக்கிறோம். இன்னும்" அண்ணல் நபிகளாரும் நேரான பாதையில்தான் இருக்கின்றனர். இதைப்பற்றி இறைவன் திருக்குர்ஆனில்,...

إِنَّكَ لَمِنَ الْمُرْسَلِينَ عَلَىٰ صِرَاطٍ مُّسْتَقِيمٍ

**திடனாக (நபியே!) நீங்கள் நேரான பாதையில் அனுப்பப்பட்டிருக்கிறீர்கள்.**

இறைவனும் நேரான பாதையில் தான் இருக்கிறான். அதாவது நேரான பாதையில் சென்றால் கிடைக்கிறான். இதை பற்றியும் இறைவன்,...

إِنَّ رَبِّي عَلَىٰ صِرَاطٍ مُّسْتَقِيمٍ

**திடனாக எனது ரட்சகன் நேரான பாதையில் இருக்கிறான்** என்று கூறப்பட்டிருப்பதை கவனிக்க வேண்டும்.

**கேள்வி:** (வஹாபி) நாமும் தொழுகையில் இந்த துஆவைத்தான் (அதாவது எங்களை நேரான பாதையில் செலுத்துவாயாக என்று) கேட்கிறோம். நபிமார்களும், வலிமார்களும் கூட இந்த துஆவைத்தான் கேட்கின்றனர். ஆகையால் அவர்களுக்கும் நமக்குமிடையே எவ்வித வித்தியாசமுமில்லையென்று சொல்ல முடியுமா?

**பதில்:** செல்கின்ற பாதை அனைவருக்கும் ஒன்றுதான். எனினும் தேடப்படும் இடம் வெளவேறு என்பதை புரிந்து கொள்ள வேண்டும். நாம் செல்லும் பாதையின் இறுதி எல்லை நரக நெருப்பை விட்டும் ஈடேற்றம் பெறுவதாகும். மக்பூலென்னும் அங்கீகரிக்கப்பட்டவர்களின் இறுதி எல்லை சுவர்க்கத்தின் சுகானுபவ வாழ்க்கையாகும். மஹ்பூபென்னும் நேசர்களின் இறுதி எல்லை தேடப்பட்ட இறைவனுடன் இணைவதாகும்.

பாருங்கள். திருமண ஊர்வலத்தில் மணமகள் அவனது தாய்இ தந்தைஇ உறவினர் எல்லோரும் செல்கின்றனர். ஒரே பாதையில்தான் செல்கின்றனர். ஆனால் ஊர்வலத்தினர்களது இறுதி எல்லை திருமணத்தில் பங்கு கொள்வதும், விருந்து சாப்பிடுவதுடனும் முடிந்து போகும். உறவினர்கள்இ வந்த சீர்களின் வரிசையை பார்ப்பதோடு நின்று விடுவர். இதுதான் அவர்களின் இறுதி எல்லை. ஆனால் மணமகனின் இறுதி எல்லை மணமகளுடன் இணைவதாகும். பாதை ஒன்றுதான். ஆனால் தேடப்பட்ட மன்ஜில் வெளவேறு. ஆதலால் இவ்வசனத்தை பார்த்து ஏமாந்து விட வேண்டாம்.

صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ

**எவர் மீது அருள் புரிந்தாயோ அவர்களின் பாதை** இவ்வசனம் இதற்கு முந்திய வசனத்துடன் சில தொடர்பினை கொண்டுள்ளது.

ஒன்று: முதலில் நேரான பாதையை வழங்குமாறு கேட்கப்பட்டது. இதில் அநேக பாதைகளிருந்தன. அதை விளக்கும் வகையில் இவ்வசனத்தில், இறைவா! நாங்கள் அவர்களின் பாதையைக் கேட்கிறோம். எவர்கள் மீது நீ உனது அருளைப் பொழிந்தாயோ அவர்களின் பாதை என இவ்வசனத்தில் கேட்கப்படுகிறது. ஆதலால் நேரான பாதையைக் கண்டு கொள்வதென்பதன் கருத்துயாதெனில், அதனை அல்லாஹ்வின் நல்லடியார்கள் தமது அதிகாரத்தில் வைத்துள்ளனர் என்பதே.

இரண்டு: முந்திய வசனத்தில் இறைவனிடம் நேரான பாதையைக் கேட்கப்பட்டது. இவ்வசனத்தில் அப்பாதையில் வழிநடத்திச் செல்பவரை கேட்கப்படுகிறது. ஏனெனில் எந்தப்பாதையாக இருந்தாலும் வழிகாட்டி இல்லாமல் செல்வதென்பது சாத்தியமாகாது. ஆதலால் இவ்வசனத்தில் அடியான் இறைவனிடம், நான் அந்தப் பாதையை உன்னிடம் கேட்கிறேன். எந்தப் பாதையில் உனது சொந்தமான நல்லடியார்களின் அடிச்சுவடு அமைந்துள்ளதோ அந்தப் பாதையாகும். இன்னும்

அவர்களின்வழிகாட்டல் மூலம் நான் தேடிய எனது இலட்சியத்திற்குரிய இடத்தை வந்தடைவேன் என்றும் கேட்கிறான்.

மூன்று: ஸிராத்தல் முஸ்தகீம் என்பது நடுநிலையான பாதையாகும். அதை விளக்கும்வண்ணம் மூன்று கூட்டங்களைப் பற்றி விளக்கப்பட்டுள்ளது. இதில் நடுநிலையான பாதைதான் இறைவனுக்குரிய அவனது சொந்தமான நல்லடியார்களின் பாதையாகும். அந்த இரு பாதைகளில் ஒன்று மஃக்ழுபி அலைஹிம் உடைய பாதையும்இ மற்றொன்று ழால்லீன் உடைய பாதையுமாகும்.

**உலமாக்களின் தப்ஸீர்:**

உலமாக்கள் கூறுகின்றனர். பாதை இரண்டாகும். அதில் ஒருபாதை சிருஷ்டிகளிலிருந்து சிருஷ்டி கர்த்தாவை நோக்கியும், மற்றொன்று: சிருஷ்டிகர்த்தாவிலிருந்து சிருஷ்டியை நோக்கியும் உள்ள பாதையாகும். இதில் சிருஷ்டிகளிலருந்து சிருஷ்டிகர்த்தாவை நோக்கிச் செல்லும் பாதையானது, ஆபத்துக்களைக் கொண்டுள்ள பாதையாகும்.இப்பாதையில் அநேக கூட்டங்கள் பலி கொள்ளப்பட்டு விட்டன. இன்னும் இப்பாதையில் ஒவ்வொரு இடத்திலும் கொள்ளைகளும் நடக்கின்றன. அக்கொள்ளையரின் தலைவன் இப்லீஸாகும். இதுபற்றி அவனே அறிவிப்பும் செய்து விட்டான்.

لَاَقْعُدَنَّ لَهُمْ صِرَاطَكَ الْمُسْتَقِيْمَ

**உனது நேரான பாதையில் அவர்களுக்காக நான் சத்தியமாக உட்கார்ந்து கொள்வேன்.** -அல்குர்ஆன் சூறா அஃராப்இ வசனம் 16.

ஆகையால் எந்தக் கூட்டத்தில் பாதுகாவலர்களும்இ இறைவனது அரசு அதிகாரிகளும் இருக்கிறார்களோ, அக் கூட்டத்தாருடன் நாம் இணைந்து செல்வது அவசியம். இன்னும் எந்தப் பாதையில் அரசின் பாதுகாப்பு அரண்கள் அமைக்கப்பட்டுள்ளதோ, அதன் காராணமாக கொள்ளையர்கள் நம்மிடம் கொள்ளையிட அஞ்சுவார்களோ அந்தப் பாதையில் நாம் அப்பாதையின் பாதுகாப்பாளர்களுடன் இணைந்து செல்ல வேண்டும். இவ்வசனத்தில் பாதுகாவலர்கள் என சுட்டிக் காட்டப்படுவோர் "அன் அம்த்த"எனக்கூறப்பட்ட இறையருளை பெற்றவர்களாகும்.

இங்கு "நிஃமத்" என்பதன் கருத்து, எதைக் கொண்டு மனிதனுக்கு சுகம் கிடைக்குமோ, அவற்றுக்க நிஃமத் என்று சொல்லப்படுகிறது. உதாரணமாக: பொருள், செல்வம், தேக ஆரோக்கியம் போன்றவற்றை நிஃமத் எனக் கூறுகின்றனர். இனி நிஃமத் மூன்று வகைப்படும். ஒன்று: எந்த காரணமுமின்றி இறைவனிடமிருந்து கிடைக்கும் ஒருவகை நிஃமத். உதாரணமாக: வாழ்க்கைஇ சிறுவயதின் உணவு மற்றும் ஹிதாயத் போன்றவைகளாகும். இரண்டாவது வகை நிஃமத்தானது: வெளிரங்கத்தில் யாராவது ஒருவர் மூலம் கிடைக்கின்ற நிஃமத்தாகும். உதாரணமாக: உலக செல்வங்களாகும்.

மூன்றாவது வகை நிஃமத் நமது அமல்களின் மூலம் நமக்கு கிடைப்பதாகும். உதாரணமாக: அமலைக் கொண்டு இரணம் விஸ்தீரணமாவதும், சுவர்க்கம் கிடைப்பதுமாகும். (தப்ஸீர் கபீர்)

இம்மூன்று வகை நிஃமத்துகக்கு உவமையானது: ஒரு மனிதன் தனது ஈமான் மற்றும் அமலைக் கொண்டு சுவர்க்கத்தைப் பெறுகிறான். அதாவது வழிப்படும் அடியான். இரண்டாவது வகையினர் எவ்வித அமலுமின்றி ஒருவரது பேருபகாரத்தின் மூலம் சுவர்க்கத்தை பெறுகின்றனர். அதாவது முஸ்லிம்களின் வயதுக்கு வராத நிலையில் இறந்து போன குழந்தைகள். மூன்றாவது வகையினர் எவ்விதக் காரணமுமின்றி சுவர்க்கத்தைப் பெறுகின்றனர். அதாவது ஹுருல்ஈன்களும், கில்மான்களுமாவர். இவர்கள் சுவனத்தை அழகுபடுத்துவற்காகவே படைக்கப்பட்டுள்ளனர்.

இன்னும் இதில் முதல் வகை நிஃமத்தும் இரு வகைப்படும். ஒன்று: உலகை சார்ந்தது. அதாவது நமது உடலுறுப்புக்கள் மற்றும் அவைகளின் தத்துவங்கள் போன்றவை. இரண்டாவது வகை மறுமையை சார்ந்தது. அதாவது ஈமான் மற்றும் ஹிதாயத் போன்றவை. இவ்வசனம் மறுமை சம்பந்தமான நிஃமத்தையே குறிக்கின்றது. அவ்வாறாயின் இவ்வசனத்தின் நோக்கமானது: யா அல்லாஹ்! எங்களை அவர்களின் பாதையில் செலுத்துவாயாக. எவர்கள் மீது நீ உனது மறுமை சம்பந்தமான நிஃமத்தை அருள் புரிந்தாயோ அவர்களின் பாதை என்பதாகும். அவர்கள் யார்? அவர்களைப் பற்றி திருக்குர்ஆனே மற்றோர் இடத்தில் இவ்வாறு விளக்கிக் காட்டுகிறது,...

فَأُولَٰئِكَ مَعَ الَّذِينَ أَنْعَمَ اللَّهُ عَلَيْهِم مِّنَ النَّبِيِّينَ وَالصِّدِّيقِينَ وَالشُّهَدَاءِ وَالصَّالِحِينَ

**அவர்கள் ,எவர்களுக்கு அல்லாஹ் (பரிபூரணமாக) அருள் புரிந்தானோ அவர்கள் நபிமார்களுடனும், சித்தீகுகளுடனும், ஷுஹதாக்களுடனும், சாலிஹீன்களுடனும் இருப்பார்கள்.** –அல்குர்ஆன் சூறா நிஸாஇ வசனம் 69.

தெரிந்து கொள்ளுங்கள். இறைவனது நல்லருளை பெற்ற அவர்கள் நான்கு வகைப்படுவர். 1. நபிமார்கள். 2. சித்தீகுகள். 3. ஷுஹதாக்கள். 4. ஸாலிஹீன்கள்.

அவ்வாறின்றி எல்லா வகை நிஃமத்துக்களையும் தான் இவ்வசனம் குறிக்கிறதென கூறப்பட்டால் அதில் காபிர்களும், முனாபிக்குகளும், பாவிகளும் கூட இணைந்து விடுவர். ஏனெனில் அவர்களுக்கும் அல்லாஹ் ஜீவியம், செல்வம், குழந்தைகள், அதிகாரம் போன்ற நிஃமத்துக்களை வழங்கியுள்ளான். அத்துடன் அல்லாஹ்வுடைய நிஃமத்தை பெறாதவர் இவ்வுலகில் யார் இருக்கிறார்.? இன்னும் இவ்வுலக நிஃமத்துக்களை ஆகிறத்துடைய நிஃமத்துக்கு ஒப்பிட்டால் இவ்வுலக நிஃமத்துகள் ஒன்றுமேயில்லை என்பதுடன் அழிந்தும் போய்விடும். எனவே இவ்வசனம் ஆகிறத்துடைய நிஃமத்தை குறிக்கிறதென்பதை நாம் புரிந்து கொள்கிறோம்.

**இவ்வசனத்தின் சில பலன்கள்:**

இவ்வசனத்தின் மூலம் அபூபக்கர் சித்தீக் ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் கிலாபத் உண்மையான ஒன்றென்பது ஆதாரப்படுத்தப்படுகின்றது. ஏனெனில் இவ்வசனத்தில்,...

எவர்கள் மீது அல்லாஹ்வின் அருட்கொடை சொரியப்பட்டதோ அவர்களின் பாதையில் எங்களை செலுத்துவாயாக எனக் கேட்க வேண்டுமென அறிவுறுத்தப்படுகிறது. அதன் பின் இரண்டாவதாக பிறிதொரு வசனத்தில் அல்லாஹ்வின் அந்த அருட்கொடையினை பெற்றவர்கள் நபிமார்களும் , சித்தீகுகளும் எனக் கூறப்படுகிறது.

இனி இஸ்லாமிய மார்க்கத்தில் சித்தீகுகளின் தலைவர் அபூபக்கர் சித்தீக் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் தான். ஏனெனில் "சித்தீக்" என்பதன் கருத்து, எல்லா விஷயங்களிலுமே உண்மையாயிருத்தல். சொல்லில், செயலில், ஈமானில் என்று அனைத்திலும் உண்மையாயிருத்தல். இவ்வகையில் மேற்கண்ட எல்லாமே அபூபக்கர் சித்தீகிடம் பூரணமாகக் காணப்பட்டன. பின்னும் இறைவன் அவர்களை "ஸஹாபி" என்று சொன்னான். அத்துடன் அவர்களை முத்தகீன் என்றும் சிறப்பித்துக் கூறுகிறான். இவர்களைப் பற்றி திருமறையில்,...

إِذْ يَقُولُ لِصَاحِبِهِ لَا تَحْزَنْ إِنَّ اللَّهَ مَعَنَا

**தன் தோழரிடம் அஞ்ச வேண்டாம் என்று அவர் சொன்ன நேரத்தை எண்ணிப் பாரும்.**

وَسَيُجَنَّبُهَا الْأَتْقَى الَّذِي يُؤْتِي مَالَهُ يَتَزَكَّى

**இன்னும் அதை விட்டு அவர் தூரமாக வைக்கப்பட்டுவார். அவர் மிகப் பெரும் பயபக்தியாளர். பரிசுத்தவாளர், தனது பொருளைத் தருபவர்.**

என்றும், இன்னும் பல இடங்களிலும் இவர்களின் சிறப்பை திருக்குர்ஆனில் கூறியுள்ளான்.

அடுத்து சித்தீக் என்பதன் கருத்து நபியை அதிகமாகஉண்மைபடுத்துபவர் என்றும் சொல்லலாம். காரணம் சிலர் நபியை அவர்களது முஃஜிஸா போன்ற அற்புதங்களைக் கொண்டே புரிகின்றனர். வேறு சிலர் ஆதாரங்களைக் கொண்டு நபியைப் புரிகின்றனர். ஆனால் சித்தீக் தனது இதய ஒளியைக் கொண்டு புரிந்து கொண்டனர்.

எவ்வாறெனில் மனிதர்களது இயற்கை தன்மை தமக்கு நன்மையளிப்பதை எடுத்துக் கொள்வதும், தீயவற்றை தள்ளிவிடுதுமாகும். அவ்வாறே சித்தீகுடைய இதயம் ஈமானையும், ஈமானுக்குரியவைகளையும் சந்தோஷமாக ஏற்றுக் கொண்டது. இன்னும் அசுத்தமானவற்றை தன்னிச்சையாகவே வெறுத்தது.

இங்கு இதையும் நாம் கவனிக்க வேண்டும். சித்தீவர்களிடமிருந்த மற்றுமோர் உயர்நிலை அவர்கள் இஸ்லாத்தை ஏற்குமுன்பும் கூட சிலைகளை வணங்கியதில்லை. விபச்சாரம் போன்ற பெரும் பாவங்களும் செய்யவில்லை. இன்னும் அண்ணல் நபியை எவ்வித அற்புதங்களையும் பார்க்காமலேயே நபியாக ஏற்றுக் கொண்டனர். இவ்வாறே நபிகளார் தமது புனித திரேகத்துடன் மிஃராஜுக்குச் சென்றனர் என்பதை எவ்வித ஆதாரத்தையும் தேடாமலேயே உண்மையென நம்பினர்.

ஆதலால் மேற்கண்ட இரு வசனங்கள் மூலமும் நமக்குக் கிடைக்கும் பலன் யாதெனில், இறைவன் சொன்னான். நம்மிம் அந்தப் பாதைக்குரிய ஹிதாயத்தை கேளுங்கள். எந்தப் பாதையில் அபூபக்கர் சித்தீக் மற்றும் எல்லா உண்மையாளர்களும் இருந்தனரோ அந்தப் பாதையை எனக் கூறுகிறான். அவ்வாறின்றி அபூபக்கர் தவறான பாதையில் இருந்திருந்தால் அவர்களை பின்பற்ற வேண்டுமென ஒருக்காலும் சொல்லப்பட்டிருக்காது. மஆதல்லாஹ்.

**இரண்டாவது பலன்:**

இவ்வசனம் ஏதாவதொரு இமாமை அவசியம் பின் தொடர்ந்தேயாக வேண்டுமென வலியுறுத்துகின்றது. ஏனெனில் இவ்வசனத்தில் "இஹ்தினஸ் ஸிராத்தல் முஸ்தகீம்" என்பதோடு நிறுத்திக் கொள்ளவில்லை. மாறாக அப்பாதையின் தலைவர்களை பின்பற்றுவதையும் கேட்க வேண்டுமென கட்டளை பிறப்பிக்கப்படுகிறது. ஆதலால் நமக்கு பாதை மட்டும் போதாது. அப்பாதையில் நம்மை வழிநடத்திச் செல்வோரும் அவசியம் என்பதை நாம் புரிந்து கொள்ளலாம்.

பின்னும் நேரான பாதை என்பதானது, எந்தப் பாதையில் அல்லாஹ்வின் நல்லடியார்கள் சென்றார்களோ அந்தப் பாதைதான் நேரானதாகும். இன்னும் தபவுத்தாபியீன்களில் இருந்து இன்று வரையுள்ள அல்லாஹ்வின் அனைத்து நல்லடியார்களான முபஸ்ஸிரீன்கள், முஹத்திஸீன்கள், புகஹாக்கள், வலிமார்கள், பாமர முஸ்லிம்கள் போன்ற அனைவரும் ஏதாவதொரு இமாமை பின்பற்றி வந்துள்ளனர். இவர்களில் யாருமே இமாமை மறுப்பவர்களாக இருக்கவில்லை.

ஆதலால் "தக்லீது" என்பது அல்லாஹ்வின் நல்லடியார்களது பாதையாகும் என்பதை நாம் தெரிந்து கொள்கிறோம். அவ்வாறின்றி தக்லீது ஷிர்க்காகவோ அல்லது ஹராமாகவோ இருந்திருந்தால் உலகில் ஹதீதுகளுடை கல்வி முழுவதும் மறைந்தே போயிருக்கும். காரணம் எல்லா முஹத்திஸீன்களுமே

முகல்லிதுகளாகவும் அல்லது முகல்லிதுகளின் மாணவர்களாகவும் தானிருக்கின்றனர்.

இன்னும் ஒரு ஹதீதுடைய அஹிவிப்பாளர்களது வரிசைப் பட்டியலில் ஒரு பெரும் பாவம் செய்தவரது பெயர் வந்தால் அந்த ஹதீதை ஹதீதுடைய தரத்திலிருந்தே நீக்கி விடுவர். இதே சட்டத்தை தக்லீதுடையவரது விஷயத்தில் கொண்டு வரப்பட்டால் புகாரி, முஸ்லிம், திர்மிதீ போன்ற ஒரு ஹதீதுடைய நூலும் தப்பாது. காரணம் அந்த ஹதீதுகளுடைய வரிசைத் தொடரின் அறிவிப்பாளர் அனைவரும் முகல்லிதுகளாகத்தான் இருக்கின்றனர்.

**மூன்றாவது பலன்:**

இவ்வசனத்தின் மூலம் நல்லோரை பின்தொடர்தல் நன்மை பயக்குமென்றும், தீயோரை பின்தொடர்தல் தீமை பயக்குமென்றும் புரிந்து கொள்ளப்படுகிறது. ஏனெனில் குர்ஆனில் காபிர்களைப் பற்றி ஒரு விஷயம் சொல்லப்படுகிறது. அவர்கள் தமது நபியின் வழிகாட்டுதலுக்கு எதிராக தங்களின் ஜாஹிலான முன்னோர்களை பின்பற்றினர் எனக் கூறப்படுகிறது. ஆதலால் இங்கு முஸ்லிம்களை நோக்கிஇ நீங்கள் எவ்வாறு துஆ கேட்க வேண்டுமெனில், எங்களின் முஃமின்களான முன்னோர்களது பாதையில் எங்களை செலுத்துவாயாக எனக் கேட்கச் சொல்கிறது. அந்த வசனம் காபிர்களான முன்னோரை பின்பற்றுதல் தவறு என்றும்இ இவ்வசனம் முஸ்லிமான முன்னோரை பின்பற்றுதல் நன்மையென்றும் பேசுகின்றது.

**நான்காவது பலன்:**

எந்த பாதையில் அல்லாஹ்வின் நல்லடியார்கள் செல்கின்றனரோ அப்பாதைதான் நேரான பாதையாகும். இன்னும் எவற்றை இறைவனின் நல்லடியார்கள் முஸ்தஹப்பு என எண்ணுகின்றனரோ அவை முஸ்தஹப்பாகும். இது பற்றிய விளக்கத்தின் கீழ்கண்ட ஹதீதுகளைக் கொண்டு காணலாம். அதாவது,....

مَارَآهُ المؤمنون حسنا فهو عند الله حسن

**எவற்றை முஃமின்கள் நல்லவை எனக் கருதுகின்றனரோ, அவை அல்லாஹ்விடத்திலும் நல்லவையே.**

انتم شهداء الله فى الارض

**முஸ்லிம்களே! நீங்கள் பூமியில் அல்லாஹ்வின் சாட்சிகளாயிருக்கிறீர்கள்.** நீங்கள் எந்தப் பொருளை அல்லது யாரை நல்லவரென கூறுகின்றீர்களோ, அவை அல்லாஹ்விடமும் நல்லதாகும். ஏனெனில் உங்களின் நாவுகள் இறைவனது

எழுதுகோலாக இருக்கும். எனவே மீலாத், பாத்திஹா, உரூஸ் போன்றவை எவற்றை அரப் மற்றும் அஜமிலுள்ள உலமாக்களும், ஜாஹிதீன்களும், ஸாலிஹீன்களும், சூபியாக்களும் நன்மையெனக் கருதி அவற்றை செயல்படுத்தி வந்தனரோ அவையனைத்தும் ஆகுமானவையாயும் விரும்பத்தக்க முஸ்தஹப்புமாகும்.

இன்னும் அவற்றை ஜாயஸஸென்றும், முஸ்தஹப்பென்றும் அறிவதே ஸிராத்துல் முஸ்தகீமாகும். ஏனெனில் இவை அல்லாஹ்வுடைய நல்லடியார்களின் பாதையாகும். இதைக் கொண்டு சுன்னத் வல் ஜமாஅத் ஒன்றுதான் ஹக்கான ஜமாத்தென்பதும் நிரூபணமாகிறது. இனி ஒரு வஹாபியின் உளறலை வைத்து உலகமனைத்திலுமுள்ள உலமாக்களையும், சாலிஹீன்களையும் முஷ்ரிக் எனக் கூற முடியாது. மாறாக அந்த வஹாபியை மார்க்கமற்றவர் எனக் கூறுவது எளிதானது. காரணம் அவர் அனைவரையும் விரோதித்து தனது வளைந்த செங்கலை வைத்து தனியாக மஸ்ஜிதைக் கட்டுகிறார்.

**ஐந்தாவது பலன்:**

இனி எந்த மார்க்கத்தில்இ மத்ஹபில் வலிமார்கள் இருக்கின்றார்களோஇ அதுதான் உண்மையான மார்க்கமும், மத்ஹபுமாகும். இவ்வாறே எந்த மார்க்கத்தில் விலாயத்தென்னும் வலித்தன்மை உடையோர் இல்லையோ அது பொய்யான மார்க்கமாகும்.

காரணம் எந்த மரத்தில் பூக்களும், காய்களும், பழங்களும் கிடைக்குமோ அம்மரம் வேருடன் தொடர்பு கொண்டுள்ளதென்று சொல்லலாம். அதை பராமரித்தும் வருவோம். அவ்வாறின்றி மரம் காய்ந்து போனால் அம்மரம் வேருடன் கொண்டிருந்த தொடர்பை விட்டும் நீங்கி விட்டதென்று பொருள். இந்நிலையில் அம்மரம் வெட்டப்பட்டு எரிப்பதற்குத்தான் பயன்படும்.

பாருங்கள். எதுவரை பனீ இஸ்ராயீல்களின் மார்க்கம்மாற்றப்படவில்லையோ அதுவரை அந்த மார்க்கத்தில் "அஸ்ஹாபுல் கஹ்ஃபுகள்" "ஆஸிப் பின் பர்கயா" "ஹஜ்ரத் மர்யம்" ரலியல்லாஹு அன்ஹும் போன்ற வலிமார்கள் தோன்றினர். இனி எப்போது அந்த மார்க்கம் மன்ஸூக்காக (மாற்றப்பட்டதாக) ஆக்கப்பட்டு விட்டதோ, அதன்பின் அந்த மார்க்கத்தில் விலாயத்தும் (வலித்தன்மையும்) முடிந்து போய் விட்டது. எனவே இந்த வலிமார்கள்தான் ஒரு மார்க்கம் உண்மையானது என்பதற்குரிய ஆதாரமாக இருக்கிறார்கள். பின்னும் இந்த வலிமார்கள் சுன்னத் வல் ஜமாஅத்தைத் தவிர வேறு பிரிவுகளான வஹாபி, ஷியா, காதியானி போன்ற எந்தப் பிரிவிலும் அறவே இல்லையென்பதும் கவனிக்கப்பட வேண்டிய ஒன்றாகும். மேலும் வலித் தன்மைக்கு மூன்று வகையான அடையாளங்கள் உண்டு. ஒன்று: ஈமான். இரண்டு: தக்வா. மூன்று: சிருஷ்டிகள் அவரை "வலி" என்று அங்கீகரித்தல். இதனால்தான் இறைவன் திருமறையில்,...

الَّذِيْنَ اٰمَنُوْا وَكَانُوْا يَتَّقُوْنَ

**அவர்கள் விசுவாசிகளாகவும், தக்வா உடையோராகவும் இருப்பார்கள்** எனக் கூறுகிறான்.

**சூபியாக்களின் தப்ஸீர்:**

சூபியாக்கள் "அன்அம்த்த அலைஹிம்" என்னும் வாக்கியத்தைக் கொண்டு எவர் மீது இறைவனது மறைவான நிஃமத் இறங்கிற்றோ, இன்னும் எவர் மீது இறைவனது பேரொளியின் துளிகள் விழுந்ததோ அவர்கள்தான் இவ்வசனத்தில் சுட்டிக் காட்டப்படுகின்றனர் என்பதாகக் கூறுகின்றனர். ஏனெனில் மிஷ்காத் என்னும் ஹதீதுடைய நூலில் ஈமான் பற்றிய பிரிவில் விதி பற்றிய பாடத்தில் கீழ்கண்டவாறு ஒரு ஹதீது காணப்படுகிறது.

அது, இறைவன்: ஸையிதினா ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களின் முதுகிலிருந்து எல்லா ஆன்மாக்களையும் வெளிப்படுத்தினான். அதன்பின் அவைகள் மீது தனது நூரை தெளித்தான். சிலர் மீது அந்த ஜோதியின் துளிகள் பட்டன. சிலர் மீது படவில்லை. இதில் யார் யார் மீது அந்த ஜோதியின் துளிகள் விழுந்ததோ அவர்களனைவரும் நேர்வழி பெற்றனர். மற்றவர்கள் வழிக் கெட்டுப் போயினர்.

பின்னும் காமிலீன்கள் என்னும் பூரணத்துவமுடையோர் சத்தியத்தை, உண்மையை அந்த நூரைக் கொண்டுதான் அறிந்து கொள்கின்றனர். இன்னும் பாமர முஸ்லிம்கள் அவர்களை பின்பற்றுவதன் மூலம் நேர்வழி அடைகின்றனர். இதில் யார் அவர்களை பின்பற்றுவதிலிருந்து விலகி தனியாகப் பிரிந்து விடுகிறார்களோ, அவர்கள் மௌட்டீகம் என்னும் இருளில் மாட்டிக் கொள்கின்றனர். ஆதலால் "அன்அம்த்த" என்பதன் கருத்தானது, "வலிமார்களும்", அவர்கள் நடந்தேறும் "ஸுலூக்" உடைய பாதையும்தான் எனக் கூறுகின்றனர்.

அடுத்து ஞானவான்களிடத்தில், காபிர்கள் "அன்அம்த்த அலைஹிம்" என்பதில் இணைய மாட்டார்களென கூறப்படுகிறது. ஏனெனில் அவர்களுக்கு எந்த வகையான இறைவனுடைய நிஃமத்தும் வழங்கப்படவேயில்லை. இன்னும் உலக சம்பந்தமான செல்வம் குழந்தைகள் போன்ற நிஃமத்துகள் முஸ்லிம்களுக்கு மட்டுமே நிஃமத்தாகும். காபிர்களுக்கு அவைகள் ஒரு சோதனை மற்றும் வேதனைக்குரிய பொருளாக இருக்குமெனக் கூறுகின்றனர். காரணம் அந்த நிஃமத்துகள் முஸ்லிம்களில் நல்ல அமல்கள் மிகைப்பதற்கு காரணமாக அமைவது போல காபிர்களுக்கு அதே நிஃமத்துகள் அவர்கள் தற்பெருமை கொள்ள காரணமாக அமைகின்றன. இதைப் பற்றி திருக்குர்ஆனில்,....

وَلَا يَحْسَبَنَّ الَّذِيْنَ كَفَرُوْٓا اَنَّمَا نُمْلِىْ لَهُمْ خَيْرٌ لِّاَنْفُسِهِمْ اِنَّمَا نُمْلِىْ لَهُمْ لِيَزْدَادُوْٓا اِثْمًا

**இன்னும் காபிரானர்களே அவர்கள்- “அவர்களை நாம் தாமதப்படுத்தி வைத்திருப்பது அவர்களின் நப்சுகளுக்கு நன்மை“ என்று நிச்சயமாக எண்ணிக் கொள்ள வேண்டாம். அவர்களை நாம் தாமதப்படுத்தி வைப்பதெல்லாம் அவர்களின் பாவத்தை அதிகப்படுத்துவதற்காகவே.**

இதை இவ்வாறு புரிந்து கொள்ளுங்கள். ஒரு மனிதன் ஹல்வா தின்றான். வியாதியஸ்தனும் அதே ஹல்வாவை தின்றான். ஆரோக்கியமுள்ளவனுக்கு பலத்தைக் கொடுத்த அந்த ஹல்வாதான் நோயாளிக்கு அவனது நோயை அதிகப்படுத்தியது. இதுபோன்றுதான் ஒரே வகையான நிஃமத் முஸ்லிமுக்கும் காபிருக்கும் கிடைக்கின்றது. ஆனால் அந்த நிஃமத் காபிருக்கு சோதனையாகவும் வேதனைத் தரத்தக்க ஒன்றாகவும் மாறிவிடுகிறது. இன்னும் சூபியாக்கள் இந்த வசனத்தை காரணமாகக் கொண்டு தான் தரீகத்துடைய பாதையில் செல்லும் ஒவ்வொரு பிரயாணிக்கும் ஒரு வழிகாட்டியான ஷெய்கு அவசியமென்று கூறுகின்றனர்.

**மார்க்கச் சட்டம்:**

மேலும் இவ்வசனத்தின் மூலம் முஸ்லிம்களில் இஜ்மாஃ அதாவது ஒரு பிரச்சனையில் முஸ்லிம்கள் ஒருங்கிணைந்த கருத்துக் கொள்ளுதல் ஷரீஅத்திற்குரிய ஆதாரமாகும் என்பதையும் நாம் தெரிந்து கொள்கிறோம். அதைவிட்டு முஸ்லிம்களது ஒருங்கிணைந்த கருத்தின் மீது அபிப்பிராய பேதம் கொண்டு இஜ்மாவை விட்டும் பிரிந்து செல்பவர் ஒரு ஆட்டை போன்று விபத்தில் சிக்கிக் கொள்வார். அதாவது தனது மந்தையிலிருந்து தனியாகப் பிரிந்து விடும் ஆட்டை எவ்வாறு ஓநாய் அடித்துத் தின்று விடுமோ அவ்வாறு ஷைத்தான் இத்தகையோரை வெகு விரைவில் வழிகெடுத்து விடுவான். ஆதலால் முஸ்லிம்கள் தமது ஜமாஅத்தை விட்டும் பிரியாது இணைந்தே வாழ வேண்டும்.

**ஆட்சேபம்:**

**கேள்வி:** ஸிராத்தல் முஸ்தகீம் என்பது ஒரே பாதைதான். ஆனால் நபிமார்களும், வலிமார்களும், உலமாக்களும் தனித்தனியான பாதைகளை வைத்துக் கொண்டுள்ளனர். ஏனெனில் ஒவ்வொரு நபிக்கும் ஷரீஅத் வெளவேறாக இருந்தது. ஒவ்வொரு வலியின் தரீகத்துடைய பாதைகளும் வெளவேறாக இருக்கின்றன. இதற்கு காதிரி, சிஷ்தீ, நக்ஷபந்தீ போன்றவைகளை குறிப்பிடலாம். உலமாக்களின் மத்ஹபுகளும் தனித்தனியாக அமைந்துள்ளன. அதாவது ஹனபி, ஷாபி, மாலிகி, ஹன்பலீ போன்றவைகளை குறிப்பிடலாம். என்ன? அனைவருக்கும் ஒரே மாதிரியான பாதை அமையாதா?

**பதில்:** தப்ஸீர் அஜீஸியில் இதற்கு மிக அழகான பதிலொன்று தரப்பட்டுள்ளது. அதாவது: ஒரு கூட்டத்தினர் ஒரு பாதையில் பயணம் செய்து கொண்டிருக்கின்றனர்.

அக்கூட்டத்திலுள்ள ஒவ்வொருவரும் ஒவ்வோர் விதமான வேலைகளை செய்பவர்கள். ஒருவர் தச்சு வேலை செய்கிறார். மற்றொருவர் இரும்பு வேலை செய்கிறார். வேறொருவர் சுமைகளை சுமக்கிறார். ஒருவர் வாடகை வசூல் செய்கிறார். இன்னொருவர் வாடகைக்கு குடியிருக்கிறார். வேறொருவர் காவல் காக்கிறார். அதேநேரம் அதிலுள்ள அனைவரும் ஒரே பாதையில்தான் போய்க் கொண்டிருக்கின்றனர். ஒரே இடத்தை நோக்கித்தான் சென்று கொண்டிருக்கின்றனர். எனினும் ஒவ்வொருவரும் அவரவர் தகுதிக்கேற்றவாறு ஒவ்வொரு வகையான வேலையை செய்து கொண்டிருந்தாலும் எல்லோருமே ஒரு நாள் தமது லட்சியத்திற்குரிய இடத்திற்கு போய் சேர்ந்து விடுவார்கள்.

மற்றோர் உவமையானது: யூனானி மருத்துவர் ஒரு முறையைக் கொண்டு வைத்தியம் செய்கிறார். டாக்டர்கள் வேறொரு முறையைக் கொண்டு வைத்தியம் செய்கின்றனர். அந்த யூனானி மருத்துவர்களிலும் ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாக மருத்துவம் பார்க்கின்றனர். சிலர் மருந்தைக் கொண்டு மட்டுமே வைத்தியம் செய்கின்றனர். இன்னொருவர் அறுவை சிகிச்சையைக் கொண்டு வைத்தியம் செய்கிறார். சிலர் சூரணம் கொடுக்கின்றனர். வேறு சிலர் டானிக் போன்றவற்றைக் கொடுக்கின்றனர். ஆனால் எல்லோரையுமே மருத்துவர்கள் என்றுதான் ஒப்புக் கொள்கிறோம்.

இதுபோன்று தான் நபிமார்களும், உலமாக்களும், சூபியாக்களும் அமல் செய்வதில் வேறுபட்டாலும் லட்சியத்தில் ஒரே நிலைதான் வகிக்கின்றனர். இவ்விதம் அமல்களில் காணப்படும் வித்தியாசங்கள் காலங்களும், மனிதர்களது தன்மைகளும் வித்தியாசப்படுவதைக் கொண்டு ஏற்பட்டதாகும். உதாரணமாக மூஸா நபியவர்களின் மார்க்கமும், சமூக மக்களும் அவர்களது தன்மைகளுக்கும் காலத்திற்கும் ஏற்றவாறு அமைந்திருந்தது. இவ்வாறே ஈஸா நபியின் மார்க்கமும், சமூக மக்களும் அன்றைய காலத்திற்கும் மக்களின் தன்மைகளுக்கும் ஏற்றவாறு அமைந்திருந்தது. மாறாக அசல் தௌஹீதில் அனைவரும் ஒரே கருத்துடையவர்களே. இதில் அமல்கள்தான் வித்தியாசப்படும்.

**கைரெ முகல்லிதுகளின் ஆட்சேபம்:**

**கேள்வி:** ஸஹாபாக்கள் அல்லாஹ்வின் அங்கீகாரத்தை பெற்ற நல்லடியார்கள். அவர்கள் சென்ற பாதையில் செல்வது தான் ஹிதாயத்தாகும். இன்னும் அவர்களின் பாதைதான் நேரான பாதையும் கூட. ஆனால் அந்த நபித் தோழர்கள் எவரையும் தக்லீத் செய்யவில்லை. அத்துடன் அவர்களது காலத்தில் இன்றிருப்பது போன்ற ஹனபி, ஷாபி என்னும் நான்கு மத்ஹபுகளும் இல்லை. ஆதலால் தக்லீத் செய்யாதிருப்பதே நேரான பாதை எனக் கூறலாமா?

**பதில்:** ஸஹாபாக்களிடம் உண்மையில் தக்லீத் இருந்தது என்பதுதான் உண்மை. பகீஹாக (குர்ஆன் ஹதீதிலிருந்து மார்க்கச் சட்டங்களை பிரித்தெடுக்கத் தெரியாத)

இல்லாத நபித்தோழர்கள் பகீஹாக (குர்ஆன் ஹதீதிலிருந்து மார்க்கச் சட்டங்களை பிரித்தெடுக்கத் தெரிந்த) நபித்தோழர்களை தக்லீத் செய்து வந்தனர். அத்துடன் நபித்தோழர்கள் குர்ஆன் ஹதீதிலிருந்து "கியாஸ்" செய்து சட்டங்களையும் எடுத்தனர். ஆனால் மத்ஹபுகள் என்பது மட்டும் ஏற்படவில்லை.

அதற்கு காரணம் என்னவெனில், அந்த நபித்தோழர்களின் இதயங்கள் நபிகளாரின் தொடர்பைக் கொண்டு ஒளி பெற்றிருந்ததே. அத்துடன் அவர்களுககுள் கருத்து வேறுபாடுகளும் மிக மிகக் குறைவாகத்தான் இருந்தது. அன்றி அவர்களின் காலத்தில் வழிகெட்ட பிரிவினைவாதக் கூட்டங்க்ளும் அறவே இல்லை. ஆதலால் அவர்களுக்கு சட்டங்களை முறைப்படுத்த வேண்டிய அவசியமும் நேரவில்லை.

அதன்பின் முஸ்லிம்களிடையே சண்டை சச்சரவுகள் தோன்றி பலவீனமடைய துவங்கியதால் அவர்களை முறைப்படுத்தி ஒரு ஒழுங்கான பாதையில் இட்டுச் செல்ல வேண்டிய அவசியமும் கட்டாயமும் ஏற்பட்டது. உதாரணமாக: அன்று குர்ஆனில் ஜேர், ஜபர் போன்ற குறியீடுகள் இல்லை. ஹதீதுகளின் தொகுப்புமில்லை. அதை அறிவிக்கும் அறிவிப்பாளர்களின் பெயர் பட்டியலும் தொகுக்கப்பட வில்லை. ஹதீதுகளின் ஸனதுகளது முறைகளும் அமைக்கப்படவில்லை. அத்துடன் ஹதீதுகள் நூல் வடிவமும் பெற்றிடவில்லை. ஏனெனில் அன்று அவையனைத்துக்கும் அவசியமே நேரவில்லை. அதன்பின் எவ்வளவுக்கெவ்வளவு அவசியம் அதிகமாகிக் கொண்டே சென்றதோ, அவ்வளவுக்கவ்வளவு அதற்குரிய மாற்றங்களும் நிகழ்ந்து கொண்டே சென்றன.

அதற்கு மாறாக இன்று ஒரு அறிவற்றவர் ஹதீதை கற்பதும், ஹதீதுக்குரிய ஸனதின் மீது அறிவிப்பாளரின் பட்டியலை இடுவதும் போன்ற இவையனைத்தும் நபித்தோழர்களின் வழிமுறைக்கு மாற்றமான ஒன்றெனக் கூறுவாராயின் அவர் ஒரு முழு ஜாஹிலாவார். அன்றி ஹதீதுகளின் கல்வியை சேகரிப்பது எவ்வளவு அவசியமோ, அவ்வளவுக்கு மார்க்கச் சட்டங்களின் (பிக்ஹுடைய) கல்வியும் அவசியம் என்பதை நாம் தெரிந்து கொள்ள வேண்டும்.

அவ்வாறின்றி பிக்ஹு என்னும் மார்க்கச் சட்டங்கள் மறுக்கப்பட்டு விடுமானால் எந்தெந்த மார்க்கச் சட்டங்கள் குர்ஆன் ஹதீதில் இருந்து தெளிவாக நமக்குகிடைக்கவில்லையோ, அவைகளை குறித்து இவர்கள் என்ன செய்யப்போகிறார்களென்று அவர்கள்தான் விளக்கமளிக்க வேண்டும்.

உதாரணமாக: பறந்து கொண்டுள்ள விமானத்தில் எப்படித் தொழ வேண்டும்? மைக் ஸ்பீக்கர் போன்றவற்றில் தொழுகை நடத்துவது கூடுமா? கூடாதா? ரேடியோ, மோனாகிராம், தொலைக் காட்சி, டேப்ரிகார்டர் போன்றவைகளில் ஸஜ்தாவுடைய குர்ஆன் வசனங்கள் ஓதப்பட்டால் அதைக் கேட்பவர் மீது ஸஜ்தா வாஜிபாகுமா? வாஜிபாகாதா? ஜும்ஆவுடைய தொழுகையின் முதல் ரக்அத் ஜமாஅத்தாக நடைபெற்றது. இரண்டாவது ரக்அத்தில் இமாமுக்குப் பின்னால் நின்று தொழுது

கொண்டிருந்தவர்களில் ஒருவருமேயில்லை. இந்நிலையில் தொழுகையை ஜும்ஆவாக தொழ வேண்டுமா? அல்லது ளுஹறாகத் தொழ வேண்டுமா? இன்னும் இது போன்ற எண்ணற்ற மார்க்க சட்டப் பிரச்சனைக்குரிய விஷயங்கள் மலிந்து கிடக்கின்றன. இதைப் பற்றி குர்ஆன் ஹதீதில் தெளிவான எந்தத் தீர்ப்பும் காணப்படவில்லை. இந்நிலையில் பிக்ஹை மறுத்து விட்டால் அவைகளுக்குரிய தீர்வை நாம் எப்படி பெற்றுக் கொள்ள முடியும்? என்பதை ஒருகணம் யோசித்துப் பார்க்க வேண்டும்.

غَيْرِ الْمَغْضُوبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّينَ

**எவர் மீது கோபம் இறங்கிற்றோ, இன்னும் வழிதவறிப் போனவர்களின் பாதையல்ல**

**தொடர்பு:** இவ்வசனத்திற்கும் முந்திய வசனத்திற்கும் இடையே தொடர்புகளுண்டு. ஒன்று: முந்திய வசனத்தில் நேரான பாதை எது என்பதற்குரிய அடையாளம் விளக்கிக் காட்டப்பட்டது. அத்துடன் நேரான பாதையின் அடையாளத்தை எப்போது கண்டு கொள்ளப்படுமெனில், அது பற்றிய சில அடையாளங்களும் காட்டித் தரப்பட வேண்டும். அதாவது நேரான பாதைக்கு விரோதமாகவுள்ள தவறான பாதை எது என்பதும் விளக்கிக் காட்டப்பட வேண்டுமல்லவா! ஏனெனில் சரியானதை சொல்லித்தரும் போது அதனை எடுத்துக் கொள்பவர் அதில் நிலைத்து நிற்க வேண்டுமானால் அதற்கு நேர் எதிரிடையான தவறானதையும் அவருக்கு விளக்கிக் காட்டப்பட வேண்டும். ஆதலால் இதற்கு முந்திய வசனத்தில் நேரான பாதைக்குரிய அடையாளம் காட்டப்பட்டு இந்த வசனத்தில் தவறான பாதைக்குரிய அடையாளம் காட்டித் தரப்படுகிறது.

**இரண்டு:** முந்திய வசனத்தில் இறைவனுடைய நிஃமத்தைப் பற்றி பேசப்பட்டது. அதைக் கேட்டு அடியானுடைய உள்ளத்தில் நம்பிக்கை உருவாயிற்று. இந்த வசனத்தில் இறைவனுடைய கோபத்தைப் பற்றி பேசப்படுகிறது. அதைக் கேட்டு பயம் ஏற்பட வேண்டும் என்பதற்காக. இன்னும் ஈமான் பயத்துக்கும், நம்பிக்கைக்கும் மத்தியில்தான் உள்ளது. இதை இப்படிச் சொல்லலாம். ஈமானுக்கு இரண்டு இறக்கைகளுண்டு. ஒன்றின் பெயர் பயம். மற்றொன்றின் பெயர் நம்பிக்கையாகும். எவ்வாறு ஒரு பறவை இரு இறக்கைகளின்றி பறக்க முடியாதோ, அவ்வாறே ஒரு இறை நம்பிக்கையாளரான முஃமின் பயம் நம்பிக்கையெனும் இரு நிலைகளின்றி தனது லட்சியத்தில் ஈடேற முடியாது. அத்துடன் இவையிரண்டுமே சமமாக இருப்பதும் அவசியமாகும்.

**மூன்று:** முந்திய வசனத்தில் இறைவனது நிஃமத்தை பெற்றவர்களைக் குறித்து பேசப்பட்டது. இவ்வசனத்தில் அவர்களின் அடையாளங்களை எடுத்துக் காட்டப்படுகிறது. அதாவது அந்த நிஃமத்தைப் பெற்றவர்கள் இறைவனின் கோபப்

பார்வைக்குரிய, அதாவது தீய நடத்தை, வழிகேடு மற்றும் கெட்ட கொள்கையுடையவராக இல்லாதிருக்க வேண்டும். அவ்வாறாயின் இறைவனது நிஃமத்தை பெற்றவர்க்குரிய அடையாளமானதுஇ அவரது கொள்கையும் சரியானதாக இருந்திட வேண்டும். செயலும் நல்லதாக அமைந்திருக்க வேண்டும். அதாவது அவர் காபிராகவோ, பெரும்பாவம் செய்பவராகவோ இருக்கக் கூடாது.

**உலமாக்களின் தப்ஸீர்:**

غير "**ஙைரு**" என்பதற்கு மூன்று வகையான அர்த்தமுண்டு. ஒன்று: இல்லை. இரண்டு: வேறு. மூன்று: அல்லாதது என்பதாகும். இங்கு மூன்று வகையான அர்த்தமும் பொருந்தும். இதில் غضب "**கழப்**" என்னும் பதத்திற்குரிய அர்த்தமானது: வேகம் மற்றும் மாறுதல் என்பதாகும். ஆனால் வழக்கில் ஃகழப் என்பதற்கு மனதில் பழிவாங்கும் எண்ணம் மிகைப்பதற்கு சொல்லப்படுகிறது. இந்நிலையில் மனிதனது நிலை முற்றிலும் மாறி விடுகிறது. ஆனால் இறைவன் மனம், மனநிலை மாற்றமடைதல் என்னும் நிலைகளை விட்டும் மகா தூய்மையானவன். ஆதலால் இந்த இடத்தில் ஃகழப் என்பதற்கு வேதனை என்பது பொருளாகும். அடுத்து ضال "**ழால்**" என்னும் பதம் ழலால் என்பதிலிருந்து திரிந்த ஒரு பதமாகும்.

இதன் அர்த்தம் "**திகைப்பு**" என்பதாகும். அதனால்தான்திகைப்படைந்தவரை "ழால்" எனக் கூறப்படுகிறது. இனி வழக்கில் ழால் என்பதற்கு "வழி கேடு" அதாவது "அகீதா மாறியவர்" எனக் கூறப்படுகிறது. இன்னும் திருக்குர்ஆனில் நபிமார்களை குறித்த வசனங்களில் இந்த "ழால" என்னும் பதம் எங்கெல்லாம் பிரயோகப்படுத்தப்பட்டுள்ளதோ, அங்கெல்லாம் அகராதிக்குரிய திகைப்பு என்னும் அர்த்தத்தை தான் பயன்படுத்த வேண்டும். அவ்வாறின்றி ஒருவர் நபிமார்களை வழிகெட்டவர்களென எண்ணுவாராயின் அவர் காபிராகி விடுவார்.

அடுத்து مغضوب عليهم "**மக்லூபி அலைஹிம்**" என்பதில் குறிக்கப்பட்டவர்கள் யார்? "**ழால்லீன்**" என்பதில் குறிக்கப்பட்டவர்கள் யார்? எனக் கேட்கப்பட்டால்இ திர்மிதீ என்னும் ஹதீதுக்குரிய நூலில், மக்லூபி அலைஹிம் என்பார் "யூதர்"களென்றும், ழால்லீன் என்பார் "கிறித்துவர்" களென்றும் கூறப்பட்டுள்ளது. தப்ஸீர் கபீரில் இதற்கு இன்னும் பல அர்த்தங்கள் தரப்பட்டுள்ளன. அதாவது: மக்லூபி அலைஹிம் என்பவர்கள் பாஸிக், பாஜிர்கள் என்றும், ழால்லீன் என்பவர்கள் காபிர்களென்றும், இன்னொரு விளக்கத்தில், மக்லூபி அலைஹிம் என்பவர் பகிரங்கமான காபிர்களென்றும், ழால்லீன் என்பவர் முனாபிக் அதாவது மறைவான காபிரென்றும் கூறப்பட்டுள்ளது.

இதற்கு காரணம் யாதெனில், ஸூறத்துல் பகராவில் முதலில் முஸ்லிமைப் பற்றியும், அதன்பின் பகிரங்கமான காபிர் பற்றியும், அதையடுத்து முனாபிக்

பற்றியும் பேசப்படுவதால் இவ்விரு பதத்திற்கும் அம்முறையை அனுசரித்து விளக்கம் அளிக்கப்பட்டது. ஆனால் வேறு சிலர் மக்லூபி அலைஹிம் என்பதற்கு எவரது அகீதா கெட்டு, குப்ர் வரை சென்று விட்டாரோ, அதாவது இன்று நம்மிடையே உள்ள சகடாலவி, தபர்ராஷியா, காதியானி, நபிமார்களை தரக்குறைவாக பேசும் தேவ்பந்தி தப்லீக்வாதிகள் போன்ற இவர்கள் தமது வழிகெட்ட அகீதாவைக் கொண்டு குப்ருக்கு சமீபமாகி விட்டவர்கள். இவ்வாறே ழால்லீன் என்பதற்கு எவரது அகீதா குப்ர் வரை சமீபிக்கவில்லையோ, அதாவது த∴ப்ழீலி, ஷியா மற்றும் நேர்ச்சை, பாத்திஹா போன்றவைகளை மட்டும் மறுக்கின்ற தேவ்பந்தி வஹ்ஹாபிகளாவர். எப்படியிருந்தாலும் இவ்வசனத்தைக் கொண்டு, இறைவா! உனது கோபத்திற்கு ஆளான, மற்றும் வழிதவறி விட்டவர்களின் பாதையை விட்டு எம்மை காப்பாற்றுவாயாக எனக் கேட்க வேண்டுமென்பதே.

**பலன்கள்:**

இவ்வசனத்தை கொண்டு நமக்கு சில பலன்கள் கிடைக்கின்றன. ஒன்று: வானவர்களோ, நபிமார்களோ ஒரு நிமிடம் கூட வழிதவற மாட்டார்கள். இன்னும் அவர்களிடம் எந்த நிலையிலும் பாவங்கள் நிகழ்வதும் அறவே சாத்தியமில்லை. காரணம் அதைக் கொண்டு அவர்கள் இறைவனுடைய கோபத்திற்கு ஆளாக நேரிடும். அதனால்தான் வழிதவறியஇ நடத்தை கெட்டவர்களிடமிருந்து தன்னை தற்காத்துக் கொள்வதற்காக நபிமார்களை பின்பற்ற வேண்டுமென கட்டளையிடப்பட்டுள்ளது. இன்னும் இதைக் கொண்டு நபிமார்களின் பரிசுத்தத் தன்மைக்குரிய ஆதாரமும் நமக்கு கிடைக்கின்றது.

இரண்டு: இதன் மூலம் தீய நடத்தை உடையோரை விட்டும், வழிதவறியவர்களை விட்டும் நாம் நீங்கியிருக்க வேண்டும் என்பதும், நல்லோர்களின் சகவாசம் மிகவும் அவசியம் என்பதும் நமக்குத் தெளிவாகிறது. இன்னும் மதங்கெட்டவர்களிடமிருந்தும், அவர்களின் தோற்றம், உருவம், நடத்தை, சகவாசம் போன்ற எல்லாவற்றையும் விட்டு விலகியிருத்தல் அவசியம். காரணம் செல்வமுடையவர் திருடர், கொள்ளையரை விட்டு விலகியிருக்க வேண்டும். இல்லையேல் அவரது செல்வத்துக்கு பேராபத்து வந்து சேரும். இவ்வாறே ஈமானென்னும் செல்வமுள்ளவர் ஈமானை கொள்ளையிடும் கொள்ளையரை விட்டும் விலகியிருப்பது அவசியமாகும். ஒரு விஷப்பாம்பு மனிதனின் உயிரைத்தான் பறிக்கும். ஆனால் கெட்டவர்களின் சகவாசம் ஈமானையே நாசம் செய்து விடும். எனினும் இன்று சமூக ஒற்றுமை என்பதற்கு வலிமார்களையும், உலமாக்களையும், மஷாயிக்குமார்களையும், சூபிய்யாக்களையும் வெறுப்பதற்கும், மத்ஹபு கெட்டவர்களை தமது சகோதரனாக பாவிப்பதற்கும் தான் சகோதரத்துவம் எனக் கூறப்பட்டு வருவது ஒரு மிகப் பெரும் கவலைக்குரிய விஷயமாகும்.

மூன்று: இந்த சூறா அல்லாஹ்வின் ஹம்து ஸனாவைக் கொண்டு துவக்கப்பட்டு, இந்த சூறாவின் இறுதியில் இறைவனின் கோபத்திலிருந்து பாதுகாப்புத் தேட வேண்டுமென அறிவுறுத்தப்படுகிறது. இதைக் கொண்டு இறைவனை புகழ்வது நல்லோரின் நடத்தையென்றும், தீய கொள்கையும், தீய நடத்தையும் கெட்டவர்களின் செயலென்பதையும் நாம் தெரிந்து கொள்கிறோம்.

நான்கு: இறைவனது நல்லடியார்கள் எங்கிருந்தாலும், எப்போது வாழ்ந்திருந்தாலும், எந்த முறையைக் கொண்டு வாழ்ந்திருந்தாலும் அவர்களனைவரின் அடிப்படை நம்பிக்கையும் ஒன்றுதானாதலால் அவர்களனைவருமே ஒரே கூட்டத்தினர்தான்.

அதாவது ஆதம் நபி அலைஹிஸ்ஸலாமின் காலத் தொட்டு யுக முடிவு நாள்வரை உள்ள எல்லா நல்லடியார்களுமே ஒரே அணியில்தான் இருப்பர். ஆனால் எடுத்தெறியப்பட்ட வழிகெட்டவர்கள் வகை வகையாக இருக்கின்றனர். அவர்களில் சிலரது உருவங்கள் மாற்றப்பட்டு விட்டது. சிலரது நடத்தைகள் மாறிப் போய்விட்டன. ஒருக்கால் இவர்களனைவரும் இவ்வுலகில் ஒன்றாக இருந்தாலும் மறுமையில் தனித்தனியாக பிரிந்து போய் விடுவார்கள்.

ஐந்து: உலகில் சம்பவிக்கும் துன்பங்களும், சோதனைகளும் இறைவனது கோபமல்ல. எவ்வாறு இவ்வுலகின் சுகம் சுகமில்லையோ அவ்வாறுதான். அத்துடன் அச்சோதனைகளும் துன்பங்களும் கொல்லனின் உலையில் இடப்பட்ட தங்கத்தின் துருவை நெருப்பு நீக்குவதைப் போல ஈமானை தூய்மைப்படுத்துவதாகும். அன்றி எந்த செல்வம் இறைவனை மறக்கச் செய்யுமொ அது அவனது கோபமாகும். எந்த துன்பம் இறைவனை நினைக்கச் செய்யுமொ அது அவனது நிஃமத்தாகும்.

**சூபிய்யாக்களின் தப்ஸீர்:**

ஞானவான்கள் **“ழால்லு“ “மஃக்லூப்“** எனப்படுவோரைக் குறித்து, ஆன்ம உலகில் இறைவன் தனது ஜோதியை தெளித்த போது, எவர்கள் மீது அந்நூரின் துளிகள் விழவில்லையோ, அவர்கள் தானென்றும், அல்லது இறை சன்னிதானத்தில் முன்னர் அங்கீகரிக்கப்பட்டு பின்பு தூக்கியெறியப்பட்டவர்களென்றும், அல்லது அந்நூர் தெளிக்கப்பட்ட இடத்திற்கு வருகை தந்து பின்னர் ஓடிப் போனவர்களென்றும், அல்லது மன்னிக்கப்பட்டவர்களின் அணியில் இருந்து பின்னர் இறை கோபத்திற்கு இலக்காகிப் போனவர்களென்றும், அல்லது அமைதியென்னும் இல்லத்திலிருந்து அகங்காரம் என்னும் இல்லத்திற்கு மாறியவர்களென்றும் கூறுகின்றனர்.

உதாரணமாக இப்லீஸ், பல்அம் பாவூரா, போன்ற தீய நடத்தையுடையோராகும். இவர்கள் இறை சன்னிதானம் வரை சென்றும் அவனுடன் சேராதவர்கள். அல்லது சேர மாட்டார்கள். அல்லது செல்லவே இல்லை. அல்லது சென்றாலும் நடுவழியிலேயே தங்கி விட்டவர்கள். அவ்வாறாயின் இங்கே இவ்வசனத்தின் கருத்து, இறைவா! எங்களை எவர்கள் உன்வரை வந்து விட சேர மாட்டார்களோ,

அல்லது வந்தும் திரும்பி விட்டார்களோ அவர்களில் நின்றுமாக்கி விடாதே. இது மிகவும் சிக்கலான தடுமாற்றங்கள் நிறைந்த பாதையாகும். ஆகையால் நாம் நமது வெளிரங்கமான கல்வி, அறிவு, தக்வா போன்றவைகளின் மீது இறுமாந்து இருந்து விடக் கூடாது. இதில் எண்ணற்றோர் அழிந்து போய்விட்டனர். சாமான்யர் என்ன? பெரும் பெரும் நபிமார்கள் கூட இந்நிலையில் காலூன்றி நிற்க வேண்டுமென சதா துஆ செய்த வண்ணமாக இருந்துள்ளனர். ஹஜ்ரத் யூசுப் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் கூட "தவஃப்பனீ முஸ்லிமன் வ அல்ஹிக்னீ பிஸ்ஸாலிஹீன்" எனப் பிரார்த்தித்துள்ளனர்.

ஷரஹு பிக்ஹுல் அக்பர் என்னும் நூலில் கீழ்கண்டவாறு ஒரு சம்பவம் எழுதப்பட்டுள்ளது. ஒருவன் சுல்தானுல் ஆபிதீன் பாயஜீத் பிஸ்தாமி ரஹிமஹுல்லாஹ் அவர்களை நோக்கி: உங்களின் தாடி அழகாக இருக்கிறதா? அல்லது எனது மாட்டின் வால் அழகாக இருக்கிறதா? எனக் கேட்கஇ அதற்கு இமாமவர்கள்: இவ்வுலகிலிருந்து நான் எனது ஈமானுடன் சலாமத்தானவனாக சென்றால் என் தாடி பன்மடங்கு சிறந்தது. ஒருவேளை அந்த செல்வம் என் கையை விட்டு பறி போய்விட்டால் அப்போது உனது மாட்டின் வால் எனது தாடியை விட பன்மடங்கு உயர்ந்ததே. ஏனெனில் அதன் பின் நரகம் எனக்குரியதாகும். விலங்குக்கல்ல எனக் கூறினர்.

ஏ! திமிர்வாதம் கொண்ட கர்வம் பிடித்தவனே! இப்போது உனக்கு எதன் மீது பெருமையிருக்கிறது. உனக்கு முன்னால் மரண வேதனை காத்துக் கொண்டுள்ளது. அத்துடன் கப்ரின் நெருக்கமும், மஹ்ஷரின் திடுக்கமும், மீஜான் தராசின் பயமும், ஸிராத்தென்னும் பாலைத்தையும் கடக்க வேண்டியுள்ளது. எப்போது இன்ஷாஅல்லாஹ் ஸிராத்தென்னும் பாலத்தை கடந்து விடுவோமோ அப்போதுதான் நிம்மதி. இன்னும் நீ "**முஹம்மதுடன்**" இணைந்து விட்டால் அப்போதுதான் ஈடேற்றம் பெற்றாய் என்பதை தெரிந்து கொள்.

اٰمِيْنَ

**ஏற்பாயாக**

இதன் அர்த்தம் ஒன்று, "அவ்வாறே ஆக்குவாயாக" அல்லது "ஏற்பாயாக" என்பதாகும். இன்னும் இது குர்ஆனின் ஆயத்தல்ல. அதனால்தான் இதனை குர்ஆனில் எழுதப்படவுமில்லை. இன்றுவரை எவருமே இதனை குர்ஆன் என்றும் கூறவும் இல்லை. அதே நேரம் இது சுன்னத்தாகும். சூறத்துல் பாத்திஹா ஓதி முடித்த பின் ஓதியவரும், ஓதியதை கேட்டவரும் ஆமீன் என்று சொல்ல வேண்டும். இவ்வாறே ஒவ்வொருவரும் துஆவுக்குப் பின் ஆமீன் எனக் கூறுதல் சுன்னத்தாகும்.

**ஆமீன் உடைய சிறப்புகள்:**

தப்ஸீர் ரூஹுல் பயானில் ஆமீன் பற்றி ஒரு ஹதீது குறிக்கப்பட்டுள்ளது. ஒருமுறை ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் அண்ணல் நபிகளாரிடம்இ ஆமீன் என்பது பாத்திஹாவுக்கு எவ்வாறு அமைந்துள்ளதெனில், எவ்வாறு ஒரு நூலுக்கு முத்திரை அமைந்துள்ளதோ, இன்னும் முத்திரையின்றி நூல் எவ்வாறு முழுமை பெறுவதில்லையோ, அவ்வாறே ஸூறத்துல் பாத்திஹா ஆமீன் இன்றி முழுமை பெறாது எனக் கூறினர்.

சையிதினா அலீ ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறுகின்றனர்: ஆமீன் ரப்புல் ஆலமீனுடைய முத்திரையாகும். அதைக் கொண்டுதான் இறைவன் தன்னடியானுடைய துஆவை முத்திரையிடுகிறான். அதாவது முத்திரையிடப்பட்ட கடிதத்தை இறை சன்னிதானத்திற்குரியவர்களை தவிர வேறு யாரும் திறக்க முடியாது. அதனால் ஆமீனைக் கொண்டுள்ள துஆ வீணாகாது. அதாவது ஒன்று அங்கீகரிக்கப்படும். அவ்வாறின்றி அது இறை நாட்டத்திற்கு மாற்றமான ஒன்றாக இருப்பின் துஆ கேட்டவருக்கு அதற்குரிய நன்மை கிடைக்கும்.

ஹஜ்ரத் வஹ்பு ரலியல்லாஹு அன்ஹு கூறுகின்றனர்: ஆமீன் என்பதில் நான்கு எழுத்துக்கள் உள்ளன. இதில் ஆமீன் சொல்பவருக்காக நான்கு வானவர்கள் பாவ மன்னிப்புக் கேட்கின்றனர். ஹதீதில் வந்துள்ளது. இமாம் வளழ்ழாள்ளீன் என்று சொன்னால் நீங்கள் ஆமீன் என்று சொல்லுங்கள். ஏனெனில் வானவர்களும் அப்போது ஆமீன் எனக் கூறுகின்றனர். இதில் ஆமீன் எனக் கூறியவர் வானவர்கள் ஆமீன் என்று சொன்னவரை போலாவதால் அவரது அனைத்துபாவங்களும் மன்னிக்கப்பட்டு விடுகின்றன.

ஹஜ்ரத் இமாம் ஃபனாரி தமது ஸூரத்துல் பாத்திஹாவுடைய தப்ஸீரில் கூறுகின்றனர்: ஷைத்தான் இந்த ஆமீனைக் கொண்டு வெறுப்படைகிறான். காரணம் அதன்மீது முத்திரையிடப்பட்டு விடுவதால், தான் அதை உடைக்க முடியாதென்பதற்காக. தப்ஸீர் ரூஹுல் பயானில், துஆ கேட்பவர் ஆமீன் சொல்பவர் ஆகிய இருவருமே துஆவில்இணைந்துள்ளனர் எனக் கூறப்பட்டுள்ளது.

அதனால்தான் அல்லாஹ் ஹஜ்ரத் மூஸா, ஹஜ்ரத் ஹாரூன் அலைஹிமஸ்ஸலாம் ஆகிய இருவரையும் நோக்கி, “உங்களிருவரின் துஆவும் ஏற்கப்பட்டது“ எனக் கூறினான். அதாவது மூஸா அலைஹிஸ்ஸலாமவர்கள் துஆ கேட்க, ஹாரூன் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் ஆமீன் என்று மட்டுமே சொன்னார்கள். ஆனால் இறைவன் அந்த துஆவை அவ்விருவரையும் நோக்கியே சொன்னான்.

இன்னும் மார்க்கப் பெரியோர்கள் கூறும்பொழுது, முஸ்லிம்கள் ஜமாஅத்தாக இணைந்து துஆ செய்வதே சிறந்ததென்றும், ஏனெனில் அப்போது ஒருவர் துஆ

செய்ய மற்றவர்களனைவரும் ஆமீன் கூறுவர். அதுபோது அவர்களில் ஒருவருடைய துஆ அங்கீகரிக்கப்பட்டு விட்டாலும் இன்ஷாஅல்லாஹ் எல்லோரதுதுஆவும் அங்கீகரிக்கப்பட்டு விடும் என்பதாகக் கூறுகின்றனர்.

வஸல்லல்லாஹு தஆலா அலா ஹபீபிஹி வநூரி அர்ஷிஹீ ஸையிதினா வ மௌலானா முஹம்மதின் வஆலிஹி வஅஸ்ஹாபிஹீ அஜ்மஈன். பிரஹ்மதிக்க யா அர்ஹமர் ராஹிமீன்.

*முடிந்தது.*

www.sufimanzil.org